பக்கங்கள்: 29 விலை : 30/-
# காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 21 ஞாயிற்றுக்கிழமை 07.11.2021 கதிர் 02

### இது ரகசியம் அல்ல!

'ஒரே நாடு; ஒரே சட்டம்' கொள்கையை செயற்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி செயலணியின் தலைவராக வண. ஞானசார தேரர் நியமிக்கப்பட்டமையை ஆட்சேபித்து நீதியமைச்சர் அலி சப்றி தமது பதவியை இராஜினாமாச் செய்ய பக்கம்02

# மக்களின் எழுச்சியால் அரசை மாற்ற முடியும்

## வடமராட்சி கிழக்கில் வைத்து சுமந்திரன் எம்.பி. எச்சரிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

மக்களுடைய எழுச்சியால் அரசின் கொள்கையையும் மாற்ற முடியும். தேவைப்பட்டால் இந்த அரசையும் மாற்ற முடியும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 29

## பெண் கொலை; தம்பதி கைது!



சப்புகஸ்கந்தவில் பயணப்பையொன்றிலிருந்து பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மட்டக்குளியைச் சேர்ந்த தம்பதியினரே (36 வயதான ஆண், பெண்) இவ்வாறு களனி வலய குற்ற விசாரணைப் பிரிவினரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர். 29

## சீமெந்து விலை மீண்டும் உயர்வு



50 கிலோ சீமெந்து பொதியொன்றின் விலையை 177 ரூபாவால் அதிகரிப்பதற்கு சீமெந்து நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

இதன்படி சீமெந்து பொதியொன்றின் புதிய விலை 1,275 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன்னரே சீமெந்துபொதியொன்றின்விலை 93 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. தற்போது மீண்டும் விலை அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது.

## மஹிந்த - விமல் வசர சந்திப்பு

### முடிவுக்கு வருமா மோதல்?



ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கும், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கும் இடையில் முக்கியத்துவமிக்க சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அரசு மீது கடும் அதிருப்தியில் இருக்கும் 29

## யாழ்.அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஏன் மூடுமந்திரம் என சுமந்திரன் வினா

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.07

“யாழ்ப்பாணம் மாவட்டத்தில் என்ன நடக்கின்றது? மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஏன் மூடு மந்திரம்?” – என யாழ் மாவட்டச் செயலாளரிடம் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேரில் சென்று விளக்கமாக எடுத்துரைத்து வினாவினார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த காலத்தில் இடம்பெற்ற அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் முற்கூட்டியே அனைவரும் அறியக்கூடியதான நிலைமை காணப்பட்டது. இருந்தபோதும் தற்போது மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் கூட ஏதும் அறிந்துகொள்ள முடியவில்லை, ஏன் இந்த நிலைமை என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மாவட்டச் செயலாளரிடம் நேரில் வினாவினார்.

யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு நேற்று முன்தினம் நேரில் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மாவட்டச் செயலாளரிடம் இது தொடர்பில் சுமார் ஒரு மணி நேரம் பிரஸ்தாபித்தார் என அறிய வந்தது.

தமது ஆட்சேபனைகள் மற்றும் மக்கள் பணியில் மாவட்டச் செயலகம் முன்னெடுக்கும் திட்டங்களில் உள்ள குறைபாடுகள், வெளிப்படை தன்மையற்ற விடயங்கள் தொடர்பிலும் நேரடியாக அவர் எடுத்துரைத்தார். ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படாமை, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கள் இயங்காமையை சில தரப்புகள் தவறாகப் பயன்படுத்த மாவட்டச் செயலகம் துணை 29

## சீனி மாத்திரம் வாங்க முடியும்

### அமைச்சர் பந்துல அறிவிப்பு



சதொச விற்பனை நிலையங்களில் நேற்றிலிருந்து சீனி மட்டும் கொள்வனவு செய்ய முடியும் என்று நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

சதொச விற்பனை நிலையத்தில் ஐந்து பொருள்கள் வாங்கும் பட்சத்தில் மட்டுமே 29

## புரட்சிகரமான மாற்றத்தை நிச்சயம் ஏற்படுத்துவேன்!

### கோட்டா திட்டவட்டம்; இளைஞர்களுக்கு அழைப்பு



'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டபடி, புரட்சிகரமான மாற்றத்தை நிச்சயமாகத் நான் ஏற்படுத்துவேன் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டவட்டமாக அறிவித்தார்.

புரட்சிகரமான மாற்றத்தை மக்கள் வேண்டி நின்றனர். அதனைச் செய்யும்போது ஏற்படும் தடங்கல்கள் மற்றும் தடைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும். ஆனாலும், அச்சவாலை வெற்றிகொள்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் எனவும் ஜனாதிபதி கூறினார்.

புனர்நிர்மாணம் செய்யப்பட்ட 1,500 வீதிகளை ஒரே நாளில் மக்கள் பாவனைக்குக் கையளிக்கும் நிகழ்வு, மண்டாடுவ பொதுவிளையாட்டரங்கில் நேற்று பிற்பகல் நடைபெற்றது. 2

## 617 பேருக்கு கொரோனா

நாட்டில் மேலும் 617 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 44 ஆயிரத்து 630 ஆக அதிகரித்துள்ளது. 2

## 20 பேர் மரணம்

நாட்டில் மேலும் 20 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 10 ஆண்களும், 10 பெண்களும் அடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 3 ஆண்களும், 3 பெண்களும் என 6 பேர் மரணித்துள்ளனர். 2

## சப்ரியின் இராஜிநாமாவை ஏற்க மறுத்தார் ஜனாதிபதி



நிதி அமைச்சர் பதவியை இராஜிநாமா செய்வதாகக் கூறி, அலி சப்ரி கையளித்த இராஜிநாமாக் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்க மறுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு நாடு – ஒரு சட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணிக் குழுவின் தலைவராக கலகொட அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டமைக்கு 29

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன் வந்துள்ளார் என்று வெளியான செய்தி தவறல்ல.

நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நீதி அமைச்சர் அலி சப்ரி சந்தித்தார். நீதி அமைச்சர் மற்றும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை இராஜினாமாச் செய்யும் தனித்தனி இரண்டு கடிதங்களை அவர் ஜனாதிபதியிடம் நேரில் கையளித்தார் எனத் தெரிகின்றது.

ஆனால், அந்தக் கடிதங்களை ஏற்க ஜனாதிபதி மறுத்து விட்டார் என்றும், ஞானசார தேரரின் நியமினம் குறித்து நீதி அமைச்சர் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று தெரிவிக்கும் சில காரணங்களை நீதி அமைச்சருக்கு ஜனாதிபதி விளக்கினார் என்றும் சில தகவல்கள் தெரிவித்தன.

நீதி அமைச்சர் அலி சப்ரி என்ன முடிவு செய்திருக்கின்றார் என்பது தெரியவில்லை. இன்று அல்லது நாளை நிலைமை தெளிவாகும் என நம்பலாம்.

★ ★ ★

அமுல்பேபி அண்ட் கோ'வின் குளறுபடி தொடர்கின்றது.

வடக்கு, கிழக்கு புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான இணைப்பாளர் ஒருவரைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நியமித்தமையை அடுத்து அமுல்பேபி அண்ட் கோவின் அட்டகாசங்கள், அராஜகங்களுக்கு முட்டுக் கட்டைப் போடப்பட்டதும், அவை பற்றிய விவரங்கள் அம்பலமாகத் தொடங்கியமையும் தெரிந்தவையே.

தாங்க முடியாத அமுல்பேபி' குற்றச்சாட்டு விரலை திருப்பி விடும் சதித்திட்டத்தில் இறங்கினார். புனர்வாழ்வு அமைச்சின் நடவடிக்கைகள் மூலம் மேற்படி இணைப்பாளர் பெரும் ஊழல் புரிந்து, கோடி கோடியாகச் சம்பாதிக்கின்றார் என்ற பாணியில் வெற்றுவேட்டுக் குற்றச்சாட்டை முன்வைத்தார் அவர். அப்படிக் குற்றம் சுமத்தினால் இணைப்பாளரின் பெயர் சிக்கலில் மாட்ட, அவர் அடங்கி விடுவார் என்பது அமுல்பேபியின் நம்பிக்கை. ஆனால் அவர் பிள்ளையார் பிடிக்கப்போக விடயம் குரங்காகி விட்டது.

முறைப்பாட்டுக் கடிதம் கிடைத்ததும் சம்பந்தப்பட்ட கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாளர் உயர்மட்டக் குழு ஒன்றை நியமித்து விசாரணை நடத்தியிருக்கின்றார்.

அந்த விசாரணையில் வெளியான முடிவை பிரதமரின் செயலாளர், பிரதமரின் பணியாளர் தொகுதியின் சிரேஷ்ட அதிகாரி, சம்பந்தப்பட்ட இராஜாங்க அமைச்சரின் தனிப்பட்ட செயலாளர் மற்றும் முறைப்பாடு செய்த அமுல்பேபி ஆகிய தரப்புகளுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார்.

அமுல்பேபி தரப்புக்கு யாரோ தவறான தகவல்களை வழங்கியிருக்கின்றனர். அதனை நம்பி அமுல்பேபி அண்ட் கோ முழுத் தவறான முறைப்பாட்டைச் செய்திருக்கின்றது என்று விசாரணை அறிக்கை முடிவு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றது.

பாவம் அமுல்பேபி அண்ட் கோ. அபாண்டக் குற்றச்சாட்டுக்குப் பதிலடி இப்படித் திரும்பி வந்து விழும் என்று எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்தான்...!

★ ★ ★

யாழ்.மாவட்டச் செயலகத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நேரில் சென்று மாவட்டச் செயலாளரைச் சந்தித்து, மாவட்டத்தில் என்ன நடக்கின்றது, விடயங்களுக்கு யார் பொறுப்பு என்பன போன்ற கேள்விகளைத் தொடுத்துள்ளார். ஊடகங்கள் எப்போதோ எழுப்பிய சர்ச்சைகள் இவை. இப்போதுதான் சுமந்திரனிற்கு இந்தச் சந்தேகங்கள் வந்தனவோ அல்லது இனியும் இப்படியே விட்டால் மாவட்டமே உருப்படாது என்று நினைத்துக் களத்தில் இறங்கினாரோ தெரியவில்லை. நல்லது. இப்போதாவது விழிப்பு வந்ததே, கேள்வி கேட்க ஒருவராவது இருக்கிறாரே என்ற நம்பிக்கை வந்துள்ளது. மாவட்ட அபிவிருத்திப் பணிகள் வெறுமனே அரசியல் பம்மாத்தாக இல்லாமல் விடயங்கள் சரிவர நிறைவேற வாய்ப்பு ஏற்பட்டால் சரி.

இவை ஒரு புறமிருக்க, இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் தொடுத்த வினாக்களில் ஒன்று முக்கியமானதாகிறது.

மாவட்டத்திலே அரச நிதியுதவியுடன் வீட்டுத் திட்டத்திற்கு தேர்வாகும் பயனாளிகளிற்குக் கட்டம் கட்டமாக அரசு செலுத்தும் பணத்தை வைப்புச் செய்யும் வங்கிக் கணக்கு புத்தகங்களை மாவட்டச் செயலகத்திற்கு வாங்குகின்றீர்களா என சுமந்திரன் வினாவியுள்ளார்.

இதில் முக்கியமான ஒரு விடயம் உள்ளது. வீட்டுத்திட்ட பயனாளிகளின் வங்கிக் கணக்குப் புத்தகம் அவர்களுக்கு உரியது. அரசின் வீட்டுத்திட்ட உதவி அரச செயலகத்தினால் சம்பந்தப்பட்ட பயனாளியின் வங்கிக் கணக்குக்கு நேரடியாக அனுப்பப்படும். அதுதான் வழமையான ஒழுங்கு முறை ஏற்பாடு. ஆனால் சட்ட விரோதமாக அந்த வங்கிக் கணக்குப் புத்தகங்களைப் பயனாளிகளிடம் இருந்து அதிகாரிகள் பிடுங்கித் தம் வசம் வைத்துக் கொள்வதும், பணத்தை அந்த வங்கிக் கணக்கில் போட்டதும், அந்த பணத்துடன் கூடிய அந்த வங்கிப் புத்தகத்தை அமுல்பேபி மூலம் அல்லது அவரது பிரதிநிதி மூலம் பகிரங்க நிகழ்ச்சி நடத்தி, ஆரவாரம் பண்ணி, சம்பந்தப்பட்ட பயனாளிகளிடம் கையளிப்பதும், இடையில் 'புரோக்கர்களாக' இருக்கும் அரச அதிகாரிகளின் இழிசெயல் பணி.


நேரடியாக பயனாளியின் வங்கிக் கணக்குக்கு நிதி போனால் 'அமுல் பேபி அண்ட் கோ' இடையில் ஆரவாரம் பண்ண முடியாது. அதனால்தான் வங்கிப் புத்தகத்தை வாங்கி, அதில் அரசாங்கம் போட்ட பணத்தை 'அமுல் பேபி' போட்டது போல படம் காட்டி, ஆரவாரம் பண்ணும் அரசியல் சின்னத்தனத்துக்கு செயலக அதிகாரிகள் துணை போகின்றார்கள் என்று குற்றச்சாட்டு. அது பற்றிதான் சுமந்திரன் கேள்வி எழுப்பினார். ஆனால் மாவட்டச் செயலாளர் பம்மிக் கொண்டார்.

அவசர அவசரமாக சமாளித்துப் பதிலளித்த மாவட்டச் செயலாளர், சத்தியம் செய்யாத குறையாக அவ்வாறு வங்கி கணக்கு புத்தகங்களைத் தாங்கள் பெறுவதேயில்லை என்று பதிலளித்துள்ளார்.

இதனை சுமந்திரன் எம்.பி. ஏற்றாரோ இல்லையோ, ஆனால் அவ்வாறு ஒருவரின் வங்கிக் கணக்கு புத்தகத்தை அதிகாரிகள் கையேற்றால் அது சட்டவிரோதமான செயல் என மாவட்டச் செயலாளருக்கு அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சும்மா சந்தேகம் எழுப்ப மாட்டார் என்ற ஐயம் எமக்கும் எழுந்தது. எமது செய்தியாளரைத் துளாவித் தேடவிட்டேன்.

மாவட்டச் செயலாளர் வங்கி புத்தகம் தொடர்பில் எழுதிய கடிதம் செய்தியாளரின் கரம் கிட்டியுள்ளது. அந்த கடிதத்தை மாவட்டச் செயலாளர் 2021/09/17 திகதி சகல பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார். அதனை அவர் மறந்திருந்தால் அதை நினைவூட்டுவதற்காக அதன் பிரதியை இணைத்துள்ளோம்.



மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்
දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - යාපනය
DISTRICT SECRETARIAT - JAFFNA

My No. JF/RES/HOUSING/01/2021(I) | Your No. | Date 2021.09.17

சகல பிரதேச செயலாளர்களிற்கும்

கடந்தகால யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடமைப்புத்திட்டம்-2021

மேற்படி திட்டத்தின் பொருட்டு தங்களினால் இறுதிப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட பயனாளிகள் பட்டியல் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர்களின் அனுமதியின் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட பயனாளிகள் பட்டியல் கிடைக்கப்பெற்றதும் தங்களிற்கு அனுப்பி வைக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

மேலும் இவ்விடயம் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் அலுவலக JF/DCC/Hou/02/01/2021 இலக்க 2021.09.15 ந் திகதிய கௌரவ அங்கஜன் இராமநாதன் -பா.உ. அவர்களின் கடிதம் சார்பானது.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளிற்குரிய கொடுப்பனவுகளினை வழங்கும் போது வங்கிப்புத்தகங்களினை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு அலுவலக உத்தியோகத்தர்கள் மூலம் பயனாளிகளிற்குரிய வீடுகளிற்கே நேரடியாக சென்று வழங்கி அரசாங்கத்தின் "சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத்திட்டங்களின்" தெளிவூட்டல்களினை வழங்கவுள்ளதாக அறியத்தந்துள்ளார்.

எனவே இவ்விடயத்திற்கு சகல பிரதேசசெயலாளர்களும் பூரண ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

க.மகேசன்
அரசாங்க அதிபர் /மாவட்டச்செயலாளர்
மாவட்டச்செயலகம்
யாழ்ப்பாணம்

பிரதி - கௌரவ அங்கஜன் இராமநாதன் ( பா.உ.)
பாராளுமன்றக்குழுக்களின் பிரதிதவிசாளர்
இணைத்தலைவர் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு

இந்த கடிதத்தின் பிரகாரம், இந்த வங்கி புத்தகங்களை வாங்கிய மாவட்டச் செயலாளர் (அல்லது அவரது பிரதிநிதி) அவற்றை எங்கு அனுப்பியுள்ளார் என்பதனை வாசகர்களே வாசித்து உணர்ந்து கொள் வார்களாக.

இப்படி ஏவல் செய்வதை விட பிச்சை எடுப்பது மேலானதோ என்றுதான் எனக்குத் தோன்றுகின்றது!

– மின்னல் –

## 20 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

60 வயதுக்கு மேற்பட்ட 7 ஆண்களும், 7 பெண்களும் என 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்றுமுன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 841ஆக அதிகரித்துள்ளது.

## 617 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, கொரோனாத் தொற்றிலிருந்து மேலும் 339 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதனடிப்படையில் நாட்டில் இதுவரை 5 இலட்சத்து 14 ஆயிரத்து 912 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர்

## புரட்சிகரமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

உலகில் ஏனைய நாடுகளைப் போன்று, இலங்கையும் கொரோனாத் தொற்றுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரத்தின் முன்னே அடையாளம் காணமுடியாத தொற்றுநோயுடன், பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்து மக்களின் வாழ்க்கையைப் பாதுகாப்பதற்காக பல திட்டங்களை நடைமுறைப்படுத்தப்பட்டன.

அன்று நாம் வழங்கிய வாக்குறுதியை அவ்வாறே நிறைவுசெய்ய முடியவில்லை. ஆனாலும், அதில் எந்தவொரு குறையையும் வைக்காது, மக்கள் எம்மீது வைத்த நம்பிக்கையைப் பாதுகாக்கின்றோம்.

கொரோனா நோய்த்தொற்று காரணமாகச் சுற்றுலா கைத்தொழில் வீழ்ச்சி கண்டுள்ளது. அதன்மூலம் இழக்கப்பட்ட நேரடி மற்றும் மறைமுகத் தொழில்கள், கிட்டத்தட்ட 3 மில்லியன்கள் ஆகும். ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் அதிகமானோர் வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளை இழக்க நேரிட்டதோடு, உயர்மட்டத்தில் இருந்து கீழ் மட்டும் வரையான வியாபாரிகள் வரை அனைவரதும் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. அத்துடன், ஏற்பட்ட பாரிய பொருளாதார வீழ்ச்சியுடனும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றன. அனைத்து அரச ஊழியர்களுக்கும் குறித்த தினத்தில் ஊதியம் வழங்கப்பட்டது.

4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டுக் கடன் தவணைகளை உரியவாறு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் தனிமைப்படுத்தப்பட்ட அனைவருக்கும் நிவாரண நிதி வழங்கப்பட்டது.

நெல்லுக்குநிர்ணயிக்கப்பட்ட விலையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவை அனைத்தையும் பாரிய பொருளாதார சிக்கல்களுடனேயே நிறைவேற்றினோம்.

சேதன விவசாயம் போன்று, மீள்பிறப்பாக்கச் சக்திவலு உற்பத்திக்கான மாற்றத்தை ஏற்படுத்துவதிலும் நாம் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை.

பயறு, கௌபி, உழுந்து, மஞ்சள் உட்பட 16 வகையான உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வது முழுமையாக நிறுத்தப்பட்டது. இன்று அதன் பிரதிபலனை விவசாயிகள் அனுபவித்து வருகின்றனர். கறுவா, மிளகு, மஞ்சளுக்கான உயர் விலையை விவசாயிகள் பெற்றுக் கொள்கின்றனர்.

விவசாயிகளின் கைகளுக்குக் கிடைக்கின்ற அந்த வருமானத்தைக் குறைக்காமல் இருப்பதற்கும் நுகர்வோரைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்நிலைமையைப் புரிந்துகொண்டு, பசுமை விவசாயச் சவாலை வெற்றிகொள்வதற்கு ஒன்றிணையுமாறு அனைத்து விவசாயிகளிடமும் கேட்டுக்கொள்கின்றோம்.

விவசாயிகள் மீதோ மக்கள் மீதோ அழுத்தங்களைப் பிரயோகித்து, இம்மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை.

நாம் அதிகாரத்துக்கு வந்தவுடன், மதில்களில் சித்திரங்களை வரைந்த இளைஞர்கள் மாற்றத்தை ஆரம்பித்தனர். மேலும் பலர், கைவிடப்பட்டிருந்த வயல்களில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். அன்று வைத்த நம்பிக்கையுடன் புரட்சிகரமான மாற்றத்துக்காக மீண்டும் முன்வருமாறு இளைஞர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன் – என்றார்.

# அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க நேற்று யாழ்.கோட்டைக்கு விஜயம்



(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,நவ.7

தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க நேற்று (சனிக்கிழமை) யாழ்பாணம் கோட்டைக்கு விஜயம் செய்தார்.

மூன்று நாள் விஜயமாக வட பகுதிக்கு வந்த அவர் அன்றைய தினம் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்ததால் இதன் ஒரு கட்டமாக யாழ்ப்பாண கோட்டை பகுதியில் உள்ள பகுதிகளை நேரில் பார்வையிட்ட அமைச்சர், அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களையும் கலந்துரையாடினார்.

இதன்போது கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அங்கஜன் இராமநாதன், இராஜாங்க அமைச்சின் செயலாளர் நிஷாந்தி ஜெயசிங்க, இலங்கை தொல்லியல் திணைக்களபணிப்பாளர்நாயகம்பேராசிரியர் அநுர மனதுங்க, யாழ்ப்பாண பல்கலைக் கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் புஸ்பரட்ணம், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


## இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

077 868 9500



*Jaffna College Institute of Technology*
*Calls for the following courses*

**Computer Certificate Courses** *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

**Commencement in November 2021**
**At Our Jaffna Centre along**
**(Jaffna College Undergraduate dept. Building)**
**464 Hospital Road**
**Jaffna.**
**For further details contact**
**Tel no: 0212250975/0212223382**
**Email: ejcit@sltnet.lk.**






### மணமகன் விபரம்

**பிறந்த திகதி** : 1988/09/29
**மதம்:** இந்து
**ஜாதி:** வேளாளர்
**நட்சத்திரம்:** பரணி
**செவ்:** இல்லை
**தொழில்** : லண்டன் PR
**எதிர்பார்ப்பு** : யாழ்ப்பாணத்தில் படித்த அழகிய பெண்

**பிறந்த திகதி** : 1987/03/02
**மதம்** : இந்து
**ஜாதி:** பள்ளர்
**நட்சத்திரம்:** உத்திரட்டாதி
**செவ்:** இல்லை
**தகைமை** : Engineer
**தொழில்:** Project Engineer
**எதிர்பார்ப்பு:** படித்த அழகிய கொழும்பு பெண்

**பிறந்த திகதி:** 1984 /03/27
**மதம்** : இந்து
**ஜாதி:** வேளாளர்
**நட்சத்திரம்:** திருவோணம்
**செவ்:** லக்கினத்தில்
**தொழில்:** சொந்த தொழில்
**எதிர்பார்ப்பு** : நற்குணமுள்ள பண்பான மணமகள் (சீதனம் தேவையில்லை)

**பிறந்த திகதி:** 1985/10/08
**மதம்** : இந்து
**ஜாதி:** விஸ்வகுலம்
**நட்சத்திரம்:** பூசம் 2ம் பாதம்
**கி.பா.** 47
**செவ்** : இல்லை
**தகைமை:** B.A
**தொழில்:** ஆசிரியர்
**எதிர்பார்ப்பு:** பட்டதாரி மணமகள்

### மணமகள் விபரம்

**பிறந்த திகதி:** 1994.01.04
**மதம்:** இந்து
**ஜாதி:** நளவர்
**நட்சத்திரம்:** அஸ்தம்
**செவ்:** சூரியன் செவ்வாய்
**தகைமை:** B.A
**தொழில்:**UDA
**எதிர்பார்ப்பு:** பட்டதாரி உத்தியோக மணமகன்

**பிறந்த திகதி:** 1992/03/15
**மதம்:** இந்து
**ஜாதி:** வேளாளர்
**நட்சத்திரம்** : பூசம்
**செவ்:** 7ல்
**தகைமை:** Physiot herapy
**தொழில்:** Physiotherapist
**எதிர்பார்ப்பு:** படித்த உத்தியோக மணமகன்

**பிறந்த திகதி:** 1995/03/18
**மதம்:** இந்து
**ஜாதி:** பள்ளர்
**நட்சத்திரம்:** அஸ்தம்
**செவ்:** இல்லை
**தகைமை:** College of Education
**தொழில்:** ஆசிரியர்
**எதிர்பார்ப்பு:** உத்தியோக மணமகன்

**பிறந்த திகதி:** 1991/10/07
**மதம்** : இந்து
**ஜாதி:** வேளாளர்
**நட்சத்திரம்:** உத்தராடம் 4ம் பாதம்
**செவ்** : 2 ல் சூரியன் செவ்வாய்
**தகைமை:** Msc Computer Science
**தொழில்** : விரிவுரையாளர்
**எதிர்பார்ப்பு:** உத்தியோக மணமகன்

**0776505097**
**0778876969**

**தலைமை அலுவலகம் ;**
**கனடா**
**001416661855**



## அமெரிக்க லொத்தர் வீசா (DV-2023)



- அமெரிக்காவில் நிரந்தர குடியுரிமை பெறுவதற்கான வீசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
- 18 வயதிற்கு மேற்பட்ட எவரும் விண்ணப்பிக்கலாம்.
- பிரதான விண்ணப்பதாரிக்கு கடவுச்சீட்டு அவசியம்.
- அமெரிக்க லொத்தர் வீசா சேவையில் கடந்த 22 வருடகாலத்தில் எம்மூடாக விண்ணப்பித்த 1000ற்கு மேற்பட்டவர்கள் தற்போது நிரந்தரமாக அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.
- தெரிவு செய்யப்படும் அதிஷ்டசாலிகளுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல் அனைத்தும் எம்மால் மேற்கொள்ளப்படும்.

**முடிவுத்திகதி - 09.11.2021**

**குறிப்பு : இறுதிநேர நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கு கடைசிவரை காத்திராது இன்றே விண்ணப்பியுங்கள்.**



தொடர்புகளுக்கு
அருள் வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

இல.01, பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.

076 4431 576

இல.10, இ.போ.ச பஸ் டிப்போ எதிரில் பிரதான வீதி, பருத்தித்துறை.

இல.09, அருள் ஜுவல்லரி புதிய மாநகர சபை கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ஜனாதிபதி செயலணிகள்!

**சட்ட ரீதியான சரியான விளக்கங்கள் இன்மையும் நாட்டில் சில பல குழப்பங்களுக்குக் காரணமாகத் தோற்றுகின்றன. இன்னும் சிலவற்றில் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு விடயத்தின் சட்ட ரீதியான நீள, அகலங்கள் புரிந்தாலும் கூட, அரசியல் தாற்பரியம் கருதி அவை தொடர்பில் புரியாதவை போல நடந்து கொள்கின்றன.**

**ஜனாதிபதியின் சில நியமனங்கள் தொடர்பில் கிளப்பப்படும் ஆரவாரங்கள், அரசியல் சில்லெடுப்புகள், அலப்பறைகள் போன்றவை சட்ட ரீதியான ஆழ, நீள, அகலங்கள் புரியாமல் – அல்லது புரிந்தும் புரியாதமை போல காட்டி – முன்னெடுக்கப்படுவை போன்றே தோற்றுகின்றன.**

**ஜனாதிபதி நியமிக்கும் விசேட ஆணைக்குழுக்கள், ஆணைக்குழுக்கள், ஜனாதிபதி செயலணிகள், ஆலோசனைக் குழுக்கள் போன்றவை தொடர்பில் இத்தகைய குழப்பம் – அல்லது மயக்கம் – நிலவுவதாகவே தோன்றுகின்றது.**

**சட்ட ரீதியாக – சட்ட அதிகாரத்துடன் – ஜனாதிபதியால் நியமிக்கப்படக் கூடியவை இரண்டு வித ஆணைக் குழுக்கள் மட்டும்தான்.**

**ஒன்று – விசேட ஜனாதிபதி ஆணைக்குழு.**

**அடுத்தது – ஜனாதிபதி ஆணைக்குழு.**

**முதலாவதைக் கட்டுப்படுத்தி, அதற்கு சட்ட அதிகாரமும் வலுவும் வழங்குவதற்கு 'விசேட ஜனாதிபதி ஆணைக்குழு சட்டம்' என்ற ஒரு தனியான ஒரு சட்டமே உண்டு. ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஆணைக்குழுக்களில் அதிக அதிகாரம் கொண்டது இதுதான். இந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு யார், யார் உறுப்பினர்களாக நியமிக்கப்படலாம், அவர்களின் தகுதி நிலைகள், தகைமைகள் யாது, அந்த ஆணைக்குழுவின் அதிகார எல்லைகள் எவை, எவை என்பனவெல்லாம் அந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழுச் சட்டத்தில் தெளிவாக வரையறுத்து விவரிக்கப்பட்டுள்ளன.**

**சில, பல வகையான தவறுகள் இழைக்கப்பட்டிருப்பதாகக் குற்றம் சுமத்தப்படின் அவை தொடர்பில், குற்றம் சுமத்தப்படும் தரப்புகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நீதிமன்றம் போல அமர்வுகளை நடத்தி, விசாரணைகளை முன்னெடுத்து, சம்பந்தப்பட்ட நபரின் அல்லது நபர்களின் குடியியல் உரிமையைக் குறிப்பிட்ட காலத்துக்கு பறிப்பது உட்பட குற்றத் தண்டனைக்கான சிபாரிசுகளை இந்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரை செய்ய முடியும். அந்தப் பரிந்துரைகளை ஏற்று நடைமுறைப்படுத்துவதா என்பது குறித்து நாடாளுமன்றம் முடிவு செய்யும்.**

**1970 முதல் 1977 வரையான காலப்பகுதியில் அதிகாரத்தில் இருந்த பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா மற்றும் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, பொத்துவில் எம்.பி. ஜலால்தீன் ஆகியோரின் குடியுரிமை சில காலத்துக்குப் பறிக்கப்பட்டமை இப்படித்தான்.**

**அடுத்தது – சாதாரண ஜனாதிபதி ஆணைக்குழு. 'விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டம்' என்ற சட்டம் இந்தக் குழுக்களைக் கட்டுப்படுத்தும். ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பதற்கான – சட்ட வலுவுள்ள – சில பரிந்துரைகளை இந்த ஆணைக்குழு செய்யலாம். அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதும், விடுவதும் ஜனாதிபதியின் தற்துணிவையும் அவருக்கு உள்ள அதிகார வலுவையும் பொறுத்தது. ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டு வெடிப்புத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய ஆணைக்குழு இந்த வகையறாவைச் சேர்ந்ததுதான்.**

**இதற்கு அப்பால் ஜனாதிபதி நியமித்த புதிய அரசமைப்புக்கான பரிந்துரையைச் செய்யும் நிபுணர்களை உள்ளடக்கிய ஜனாதிபதி செயலணி, கிழக்கு மாகாணத் தொல்லியல் தொடர்பான ஜனாதிபதி செயலணி, இப்போது நியமித்துள்ள 'ஒரே நாடு; ஒரே சட்டம்' தொடர்பான ஆலோசனைச் செயலணி எல்லாம் சட்டத்தைப் பொறுத்தவரை ஜனாதிபதி தமக்கு ஆலோசனை பெறுவதற்கான ஆள்களை – அல்லது பிரமுகர்களைக் கொண்ட அணிதான். அதற்கு மேல் அந்த அணிகளுக்கு பெரிய வலிமை – அதிகாரம் – கிடையாது.**

**எனினும் ஜனாதிபதியின் ஆலோசனைச் செயலணி என்ற முறையில் ஜனாதிபதியின் நிறைவேற்றதிகார உத்தரவினால், ஜனாதிபதியின் பணியாள் தொகுதி மற்றும் அரச பணியாளர் தொகுதி மீது, ஜனாதிபதியின் வழிப்படுத்தல் காரணமாக செல்வாக்குச் செலுத்தும் அதிகாரமும், அரச பவிசுகளை பெறும் வாய்ப்பும், அலவன்ஸ் என்ற பெயரில் கொடுப்பனவுகளும் இந்தச் செயலணி உறுப்பினர்களுக்குக் கிட்டும்.**

**கொரோனாத் தடுப்புக்கான ஜனாதிபதி செயலணி என்ற பெயரில் இராணுவத் தளபதியும், விவசாய விவகாரங்களுக்கான ஜனாதிபதி செயலணி என்ற பெயரில் பஸில் ராஜபக்ஷவும் பெரிய எடுப்பும் அலப்பறையும் பண்ணுவது கூட சட்ட வலிமையே யற்ற பம்மாத்துச் செயலணிகள் மூலம்தான்!**

# பஸிலின் மோசடி வழக்கை தொடர்வதா? இல்லையா?

## 11 ஆம் திகதி இறுதி முடிவு

நிதி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவுக்கு எதிரான மோசடி வழக்கைத் தொடர்வதா இல்லையா என்பது தொடர்பான அறிவிப்பு அடுத்த வாரம் அறிவிக்கப்படவுள்ளது.

மேற்படி தீர்மானம் எதிர்வரும் நவம்பர் மாதம் 11ஆம் திகதி நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்படும் என சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இந்த வழக்கு நேற்று மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் இதனை நீதிமன்றத்துக்குத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில், திவிநெகும திணைக்களத்தின் நிதியை பயன்படுத்தி 5 மில்லியன் நாட்காட்டியை அச்சிட்டு அரசுக்கு 29.4 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பஸில் ராஜபக்ஷ மற்றும் திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்க ஆகியோருக்கு எதிரான குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பயணப் பொதிக்குள் பெண்ணின் சடலம்; படுகொலை என்று விசாரணையில் உறுதி

* அவர் அணிந்திருந்த 8 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மாயம்
* இரு கொலையாளிகளும் அடையாளம்

சப்புகஸ்கந்த பகுதியில் பயணப் பையிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட குடும்பப் பெண், படுகொலை செய்யப்பட்ட பின்னரே வீசப்பட்டுள்ளார் என்பது பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. அத்துடன், கொலையாளிகளையும் பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேச பந்து தென்னக்கோன் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் நான்கு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பெண் அணிந்திருந்த சுமார் 8 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் காணாமல்போயுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தப் பெண் மாளிகாவத்தையை வசிப்பிடமாகக் கொண்டிருந்தவர் என்று நேற்று அடையாளம் காணப்பட்டிருந்தார்.

ராகம போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் அவரது கணவரும் இரண்டு பிள்ளைகளும் சடலத்தை பார் வையிட்டதன் பின்னர் அவர்களால் சட லம் இனங்காணப்பட்டது.

மாளிகாவத்தை, தொடர்மாடி குடியிருப்பில் வசித்துவந்த இரண்டு பிள்ளைகளின் தாயான 44 வயதுடைய மொஹமட்டாபி பாத்திமா மும்தாஸ் என்ற இந்தப் பெண், கடந்த ஒக்டோபர் 28ஆம் திகதி பிற்பகல் தனது வீட்டிலிருந்து மற்றுமொரு பெண் மற்றும் ஆண் ஒருவருடன் ஓட்டோவில் சென்றுள்ளார். இதனை அவரது உறவினர் ஒருவர் அவதானித்துள்ளார்.

வெளியில் சென்ற தனது மனைவி வீட்டுக்கு வராத காரணத்தால் காணாமல் போன பெண்ணின் கணவன், அப்பெண்ணுடன் இறுதியாக ஓட்டோவில் சென்ற பெண்ணையும் அழைத்துக்கொண்டு கடந்த முதலாம் திகதி புளூமெண்டல் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப் பாடு செய்திருந்தார்.

புளூமெண்டல் - வோல்ஸ் லேன் பகுதியில் ஓட்டோவிலிருந்து குறித்த பெண் இறங்கியுள்ளார் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த பெண் வட்டித் தொழில் மற்றும் சூதாட்டத்தில் ஈடுபட்டு வந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண் சடலமாக மீட்கப்பட்ட பின்னர் அவருடன் ஓட்டோவில் பணித்த இருவரும் (ஓட்டோ சாரதி, பெண்) தலைமறைவாகியுள்ளனர்.

கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் பயணப் பையிலிருந்து குறித்த பெண் ணின் சடலம் மீட்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பொலிஸார் பலகோணங்க ளில் விசாரணைகளை முன்னெடுத்தனர். இப் பெண் கொலை செய்யப்பட்டுள்ளார் என்பதைப் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலத்தின் மீதான பிரேத பரிசோதனை நேற்று இடம் பெறவுள்ளது என்றும் பொலிஸார்மேலும் குறிப்பிட்டனர்.

# இலங்கையில் கொரோனா பாதிப்பால் வெளிநாட்டு இருப்புகள் வீழ்ச்சி

இலங்கையில் கொரோனா பாதிப்பால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் வெளிநாட்டு இருப்புக்கள் வீழ்ச்சியடைந்து வருகின்றன.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் மத்திய வங்கி பணத்தை அச்சிடுவதன் மூலம் எந்த நேரத்திலும் நாடு முழுமையாக நிலை குலைந்துபோகலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி ஒக்ரோபர் மாதத்தில் மாத்திரம் 130 பில்லியன் ரூபாவை அச்சிட்டுள்ளது. அத்தோடு 2019 டிசெம்பர் முதல் 2021 ஓகஸ்ட் வரை, இலங்கையின் பண விநியோகம் 2.8 டிரில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது.

12 லட்சம் அரச துறை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கும், ஓய்வூதியம் வழங்குவதற்கும் அதிகப் பணம் செலவிடப்பட்ட நிலையில் இந்த நடவடிக்கைக்கு மட்டும் ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கத்துக்கு ஒரு டிரில்லியன் ரூபா செலவாகின்றது. இருப்பினும் ஸ்திரத்தன்மையை பேணுவதற்கு பணத்தை அச்சிடுவதற்கான முடிவை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் அண்மையில் ஆதரித்த அதேவேளை உயர் பணவீக்கம் கவலையளிக்கிறது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை இலங்கையின் பணவீக்க விகிதம் இந்த ஆண்டு சுமார் 4 வீதத்தில் இருந்து சுமார் 7 வீதமாக அதிகரித்துள்ளது.

2020 ஆம் ஆண்டில், அரசாங்க வருமானம் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தோராயமாக 9.6 வீதம் ஆக இருந்தது, இது வரிக்குறைப்புகளுக்கு முன்னதாக 2019 இல் 12.6 வீதம் ஆக இருந்தது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2021



'ஒருமரம் பட்டுப்போகுமாக இருந்தால்
பட்ட அந்த மரத்துக்குப்
பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை
நாட்டுங்கள்

– கரோலஸ் இலினேயஸ் (தாவர வகைப்பாட்டியலாளர்)

# நாகலகம் வீதி நீர்ப் பம்பி நிலையத்தினை சென்று பார்வையிட்ட ஜனாதிபதி கோட்டா

கொழும்பு - நாகலகம் வீதி நீர்ப் பம்பி நிலையம், கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் உலக வங்கி பிரதிநிதிகளால் கண் காணிக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டில் கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக



இருந்த போது, கொழும்பு தலைநகரம் சார்ந்த நகர அபி விருத்தித் திட்டம் உருவாக்கப்பட்டது. அதில், 55 உப திட் டங்கள் உள்ளடக்கப்பட்டதோடு, நாகலகம் வீதி நீர்ப் பம்பி நிலையத் திட்டமும் அதில் உள்வாங்கப்பட்டிருந்தது.


கொழும்பு நகரில் மழை நீர் நிரம்புவதை தடுத்தல், ஏனைய காலங்களில் வடிகால்களில் நீர் குறைவதால் ஏற்படும் அசுத்த நிலைமையைத் தடுத்தல் என்பன இந்த உப திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும். ஒரு செக் கனுக்கு 30 கனமீற்றர் களனி ஆற்றுக்கு பாய்ச்சக்கூடிய வகையில் 05 பம்பிகள் மற்றும் ஒரு செக்கனுக்கு 12 கனமீற்றர் அளவு நீரைக் களனி ஆற்றிலிருந்து கால் வாய்களுக்கு எடுத்துவரக்கூடிய இரண்டு பம்பிகள் இங்கு பொருத்தப்பட்டுள்ளன. இரண்டு தானியங்கி கத வுகள் மற்றும் கட்டுப்பாட்டு கட்டமைப்பும் இதில் அடங்கும்.

முழுமையான திட்டத்துக்கும் 32.1 கோடி அமெரிக்க டொலர்கள் செலவிடப்படுவதோடு, உலக வங்கி 21.3 கோடி டொலர்களை இலகு கடனாக வழங்கியுள்ளது. இலங்கை அரசாங்கம் அதற்காக செலவிட்டுள்ள தொகை 10.8 கோடி அமெரிக்க டொலர்களாகும்.

முழுமையான நிர்மாணப் பணிகளை எதிர்வரும் ஓரிரு மாதங்களில் நிறைவு செய்ய முடியுமென்று இந்தத் திட்டத்தின் பணிப்பாளர் ஏ.எம். துஷாரி, ஜனாதிபதி உள் ளிட்ட குழுவினருக்கு இந்தத் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போது குறிப்பிட்டார்.

இதற்கு இணையாகத் தெரிவுசெய்யப்பட்ட பல பிர தேசங்களில் 47 கிலோமீற்றர் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படும். விஹாரமகாதேவி, காக்கைத்தீவு கடற்கரை மற்றும் பெத்தகான சதுப்பு நிலப் பூங்காவை மேம்படுத் துவதும் இந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் தெற்காசிய வலயத்தின் உப தலைவர் ஹார்ட்விக் ஷெஃபர் உள்ளிட்ட பிரதிநிதிகள், இராஜாங்க அமைச்சர்களான நாலக்க கொடகேவா மற் றும் மொஹான் பி. டீ சில்வா ஆகியோருடன் அதிகாரிகள் சிலரும் இந்தச் சந்தர்ப்பத்தில் இணைந்திருந்தனர்.



# மாங்கல்யா

## லக்ஷ்மி நாராயணா

இல:- 266 பலாலி வீதி,
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

திருமண சேவை
077 197 1667
077 316 4796

### மணமகன் விவரம்

பிறந்த திகதி - 17.12.1987 மதம் - இந்து
ஜாதி -N பகுதி நட்சத்திரம் - சுவாதி 4
கி.பா - 33 செவ் - 3 இல்
தகைமை - B.FA
தொழில் - விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள்

பிறந்த திகதி -30.08.1983 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பரணி
கி.பா - 42 செவ் - 12இல்
தகைமை - BA தொழில் - அரசசேவை (G.S)
எதிர்பார்ப்பு - A/L படித்த அரச or தனியார் சேவை மணமகள்

பிறந்த திகதி - 07.04.1988 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - கேட்டை 3
கி.பா - 13 செவ் - 9 இல்
தகைமை - BSc Eng தொழில் - Singapore
எதிர்பார்ப்பு - Eng, Cima பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி - 02.09.1982 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 18 செவ் -11 இல்
தகைமை - B.Com
தொழில் -Assistant Accountant
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி - 25.03.1993 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அச்சுவினி
கி.பா - 47 செவ் 8 இல்
தகைமை - IT Diploma தொழில் - Station master
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி - 31.05.1984 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - ரோகிணி 4
கி.பா - 48 செவ் - 5 இல்
தகைமை - G.C.E.A/L தொழில் - UK PR
எதிர்பார்ப்பு - UK மணமகள் or ஐரோப்பா மணமகள்

பிறந்த திகதி - 21.11.1988 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - புனர்பூசம் 4
கி.பா - 50 செவ் - 8 இல்
தகைமை - Computer Diploma தொழில் - Company
எதிர்பார்ப்பு - Company or அரச சேவை மணமகள்

பிறந்த திகதி -02.03.1987 மதம் - இந்து
ஜாதி - P பகுதி நட்சத்திரம் -ரேவதி
கி.பா - 30 செவ் - 12இல்
தகைமை - B.Sc, M.Sc தொழில் - USA, PR
எதிர்பார்ப்பு - Doctor or Eng. பட்டதாரி மணமகள்

### மணமகள் விவரம்

பிறந்த திகதி - 30.05.1979 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பூசம் 2
கி.பா - 17 செவ் 5 இல்
தகைமை - BA (Hons) தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - அரசசேவை or தனியார் தொழில் மணமகன்

பிறந்த திகதி - 04.10.1988 மதம் - இந்து
ஜாதி - விஸ்வகுலம் நட்சத்திரம் - அச்சுவினி
கி.பா - 51 செவ் 3 இல்
தகைமை - BA
தொழில் - ஆசிரியர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரசசேவை மணமகன்

பிறந்த திகதி - 21.10.1985 மதம் - இந்து
ஜாதி - விஸ்வகுலம் நட்சத்திரம் - திருகோணம்
கி.பா - 14 செவ் - 5 இல்
தகைமை - BA தொழில் - D.O அரசசேவை
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி - 27.08.1994 மதம் - இந்து
ஜாதி -விஸ்வகுலம் நட்சத்திரம் - பரணி 3
கி.பா - 32 செவ்- 3 இல்
தகைமை - B.Sc தொழில் -அரசசேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்


பிறந்த திகதி - 27.09.1988 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ரேவதி 4
கி.பா - 51 செவ் - 5 இல்
தகைமை -BA தொழில் - அரசசேவை
எதிர்பார்ப்பு - Bank, Eng. அரசசேவை மணமகன்

பிறந்த திகதி - 25.04.1988 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 69 செவ் - 7இல்
தகைமை - B.Com தொழில் - Post Master
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்

பிறந்த திகதி -19.091991 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - உத்தராடம் 4
கி.பா - 11 செவ் - சூரி 11 இல்
தகைமை - B.Com தொழில் - D.O அரசசேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 12.08.1993 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - கார்த்திகை 4
கி.பா - 46 செவ் - 5 இல்
தகைமை - BBA, MBA
தொழில் - அரச சேவை (கொழும்பு)
எதிர்பார்ப்பு - கொழும்பில் அரசசேவை மணமகன்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.



ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

காலைக்கதிர்
தொலைபேசி
021 222 3000

# 44 ஆயிரம் பேருக்கு இதுவரை பூஸ்டர்!

நாட்டில் இதுவரை 44 ஆயிரத்து 111 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ் போடப்பட்டுள்ளதாக சுகா தார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு குறிப்பிட் டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு தொற்று நோயியல் பிரிவு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் இதுவரை ஒரு கோடியே 57 லட் சத்து 72 ஆயிரத்து 276 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் முதலாவது டோஸும், ஒரு கோடியே 35 லட்சத்து 40 ஆயிரத்து 350 பேருக்கு கொவிட் தடுப்பூசியின் இரண் டாவது டோஸும் போடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட் டுள்ளது.

# சிறுவர்கள் மத்தியில் தொற்று அதிகரிப்பு

இலங்கையில் சிறுவர்கள் மத்தியில் கொவிட் - 19 பரவல் மீண்டும் தீவிரமடைந்து வருவதாக சீமாட்டி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் குழந்தைகளுக்கான ஆலோசகர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது, கொவிட் - 19 இற்காக, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறுவர்க ளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் புறக்க ணித்து சுதந்திரமாக நடமாடினால் மீண்டும் பாடசாலை களை மூட வேண்டியிருக்கும்.


சிறுவர்கள் கல்வி கற்க பாடசாலைகளைத் திறந்து வைக்க வேண்டும். இந்த சூழ்நிலையில், பயணங்களுக் குச் சென்றால், உறவினர்களைப் பார்க்க முயன்றால், மீண்டும் பாடசாலை அமைப்பை மூட வேண்டியிருக் கும். சாலையில் வாகனங்களின் எண்ணிக்கை அதி கரித்துள்ளது. பஸ்களில் மீண்டும் கூட்டம் நிரம்பி வழிகிறது.

எனவே பொதுமக்கள் வீட்டிலும், வெளியில் செல் லும்போதும் சுகாதார நடைமுறைகளை கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளும் சுகாதார வழிகாட்டுதல்களை முறையாக பின்பற்றுவதை உறுதி செய்ய வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

**கந்தசஷ்டி சிறப்புப் பிரார்த்தனை**

# வாணாளில் நல்வழியைக் காட்டிடுவாய் முருகா!



திருப்புகழை மனமுருகி பாடுகிறார் பலபேர்
தெருமுனையில் மதுவெறியில் திரிகிறார் சிலபேர்
திருவருளை அறியாமல் திரிகிறார் மனத்தில்
திருப்பமது வருவதற்கு திருமுருகா அருள்வாய்!

அருணகிரி மனந்திரும்ப அருள்சுரந்த முருகா
அறமழிய நடப்பாரை ஆட்கொள்வாய் ஐயா
வருமடியார் துயர்களையும் வள்ளி மணவாளா
வானவரைச் சிறைமீட்டாய் வழிவகுப்பாய் ஐயா!

ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுகிறார் உலகில்
கூடாத கூட்டமதைக் கூட்டுகிறார் நிதமும்
கோணாத மனமதனை கொடுத்தவர்க்கு ஐயா
வாணாளில் நல்வழியைக் காட்டிடுவாய் முருகா!

**- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா -**
**(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)**



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அங்கம் - 184

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**464. இந்தக் கூற்றுக்கள்தானா தீர்ப்பாயத்துக்கு முன் வைக்கப்பட்டன?**

இதைப் போல காலவாரியாக சொல்லப்பட்ட பல கூற்றுக்கள் வைக்கப்பட்டன. முள்ளிவாய்க்கால் நாள்களில் அங்கு அகப்பட்டுள்ளோர் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள், அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற கடமையில்லை, அவர்கள் அவர்களின் பொறுப்பு என்று அரச தரப்பினால் அறிவிக்கப்பட்டமை எல்லாம் தீர்ப்பாயத்தின் முன் இருந்த நோக்கத்தைப் பற்றி சம்பவங்களின் அடிப்படைகளில் கேள்விகளாக வைக்கப்பட்டன.

ஸ்ரீலங்காவின் இராணுவம் நவாலி தேவாலயத்துக்கு குண்டு வீசியபோது அவர்கள் அந்த தேவாலாயத்துக்குத் தான் குண்டு போட நினைத்தார்களா அல்லது தற்செயலானதா? விபத்தா? (Accident) பல பெண்கள் எத்தனையோ சம்பவங்களில் கற்பழிக்கப்பட்டபோது அவர்களைக் கற்பழிக்க நினைத்தார்களா? அல்லது அவையும் தவறுதலா? ஸ்ரீலங்காவின் இராணுவத்தினர் ஆஸ்பத்திரிகளுக்கு குண்டு வீசி அங்கு செய்த அட்டூழியங்கள் எல்லாம் திட்டமிட்டுச் செய்ய நினைத்தவையா? அல்லது அவையும் தவறுதல்கள்தானா?

தமிழ் மக்களைக் கடத்திப் பலவந்தமாக கப்பங்கள் கேட்டு, வேற்றிடங்களுக்கு அனுப்பி, காணாமலாக்கப்பட்டனர் எனச் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்கள் அந்த நோக்கங்களுக்காக செய்யப்





பட்டனவா அல்லது தவறுதலாக மேற்கொள்ளப்பட்டனவா?

ஸ்ரீலங்கா அரசும் அவர்களது இராணுவமும் மக்களுக்கு அத்தியாவசிய தேவையான உணவு, நீர், மருந்து போன்றவைகளைத் தடுத்தமை, அதனால் அவர்கள் பட்டினி, வருத்தங்களால் இறக்கிறார்கள் எனத் தெரிந்தும் அதனைத் தொடர்ந்தது அந்த நோக்கத்திலா அல்லது நிவாரண வாகனங்கள் தவறுதலாக அந்த இடங்களைச் சென்று அடைய முடியாததாலா?

இவற்றால் ஏற்பட்ட அனர்த்தங்களையும் அதில் இழைக்கப்பட்ட கொலைகளையும் அழிப்புக்களையும் அப்படியாகத் தொடர்ந்து லட்சக்கணக்கான மக்கள் அவர்களது மனோ நிலைகளைப் பாதித்து அதனை உடைப்பதற்காகச் செய்யப்பட்டனஎனஆதாரப்படுத்தப்பட்டது.

அவை அந்த மக்களுக்குப் பயத்தை ஊட்டி, அவர்களை மனிதாபிமான ரீதியில் நடத்தாமல் அவர்கள் எது விதத்தில் நடத்தப்பட்டாலும் அதனை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கவேசெய்யப்பட்டவை என்பன சமர்ப்பிக்கப்பட்டு இவையெல்லாம் கூட்டாக இனப்படுகொலைக்காக பொதுவெளியில் செய்யப்பட்ட தூண்டுதல்களாக கருதப்பட்டன.

ஆதலால் தீர்ப்பாயம் ஏகமனதாக ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலை நடத்தியது எனத் தீர்ப்பும் அபிப்பிராயங்களும் தந்தது. அதில் இந்த இனப்படுகொலையானது ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுப்பதற்காகவும் அவர்கள் அதற்காக ஓர் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்கக் கூடாது, அது அழிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே நடத்தப்பட்டது என்ற சமர்ப்பணத்துக்கும் ஒப்புதல் தெரிவித்தது.

**465. அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா இந்த இனப்படுகொலைகளுக்கு ஆதரவாக இருந்தன என்ற குற்றச்சாட்டுக்களை தீர்ப்பாயம் ஏற்றுக் கொண்டதா?**

அவை மூன்றுமே இவை இனப்படுகொலையில் முடியும் என அறிந்தும் அவற்றுக்குத் துணைபோயிருந்தன என்று தீர்ப்பாயம் அபிப்பிராயங்கள் தெரிவித்தது. அவற்றில் முக்கியமாக அமெரிக்காவே தனது சுய நலன்களுக்காக இதை முன்னின்று நடத் தியது, அதற்கு வேறு வழியில்லாமல் இந்தியா புதிதாக எழுந்துள்ள இந்திய பிராந்தியத்தின் சூழ்நிலைகளால் சேர்ந்து போக வேண்டியிருந்தது என்ற குறிப் புக்களையும் இந்தியாவுக்கெதிராக எழும் ஆதாரங்களை மேலும் ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்ள வேண்டும் என அபிப்பிராயம் கொண்டது.

இந்தியப் பிராந்தியத்தில் காலூன்ற வேண்டி, இந்தியாவுடன் நட்புறவை ஏற்படுத்தி, மஹிந்த ராஜபக்ஷ கொடுத்த வாக்குறுதிகளையும் நம்பி, அமெரிக்கா போருக்கு முழு ஆதரவையும் தந்து, அதே சமயம் மனிதாபிமான செயல்கள் இருக்க வேண்டும், அவை மதிக்கப்பட வேண்டும் எனவும் வெளிப்படையாக அறிவிப்புக்கள் தந்தன எனச் சுட்டிக்காட்டியது.

ஆனால் போரை ஊக்குவித்து, விடுதலைப் புலிகள் முற்றாக அழிக்கப்படுவதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் அமெரிக்கா தானும் தனது நேசநாடு




களை கட்டுப்படுத்தியும் பெற்றுக் கொடுத்தது.

போரை முடித்து சகல அதிகாரங்களும் தங்களது கைகளுக்கு வந்தபின் ராஜபக்ஷக்கள் பழைய பாணியிலேயே அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா, இந்தியா எல்லோரையும் ஏப்பமிட, அவர்களெல்லோரையும் பின் தள்ளி, சீனாவுக்கு வாசல் திறந்து விட அவர்கள் எப்படி தங்களது நிலையை உறுதிப்பட வைத்திருப்பது என்று தமிழர் பிரச்சினையை கையிலெடுத்திருக்கிறார்கள். ஏனெனில் அமெரிக்காவுக்கு அவர்களது ஆசிய பசுபிக் கடல் பிராந்திய அதிகாரத்தை நிலைநிறுத்தி, மேலும் பலப்படுத்த ஸ்ரீலங்கா அவசியமாகிறது. அதன்மேல் உள்ள அதிகாரத்தை அவர்கள் விட்டுக் கொடுக்கத் தயாராகவில்லை.

அமெரிக்காவின் இந்த அரசியலைப் புரிந்து கொள்ள, அது தமிழ் மக்களின் உடைமைகள், உயிர்கள் பற்றிக் கூட கவலைப்படாமல் அவர்களது அரசியல் கோரிக்கைகளைப் பற்றி எதுவித அக்கறையும் கொள்ளாது போரின் வெற்றி என்ற ஒன்றையே நோக்கித் தங்களது காய்களை நகர்த்தியது என்பதைக் கவனிக்க வேண்டும்.

அதில் அதன் ஆதாரம் ஸ்ரீலங்காவின் மேல் தேவையாயிருந்த அதிகாரப் பிடி, போரை வெற்றி கொண்டு நாடு முழுவதையும் மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பெற்றுக் கொடுத்துவிட்டால் அவர் தங்களுக்கு ஆதரவாக இந்து மகா சமுத்திரப் பிராந்தியத்தில் இயங்குவார் என்பதே. ஆனால் அமெரிக்கா ஒன்றே ஒன்று மட்டும் சொன்னது. அதாவது இந்த அழிவுகள், அட்டூழியங்கள், கொலைகளைச் செய்யும் போது சட்டத்திற்கு அமைய மனிதாபிமானமாக செய்யுங்கள் என்பதுதான். அமெரிக்கா வியட்நாமில் செய்யாததா, இஸ்ரேலுக்கு பக்கபலமாக நின்று மத்திய கிழக்கில் பலஸ்தீனர்களுக்கு நடத்ததாக அட்டூழியங்களா?

அமெரிக்காவின் பார்வையில் ஈராக், லிபியா, அதேபோலவே எத்தனையோ தென் அமெரிக்கா, ஆபிரிக்கா நாடுகளிலிருந்து அறியப்படாத அட்டூழியங்களுக்கு மேலானதா தமிழ் மக்களுக்கு நடப்பது? தற்சமயம் அமெரிக்கா தமிழர் பற்றி செய்யும் கரிசனையை நம்பி அவை ஆணித்தரம் என கால் வைத்து புதுயுகம் போகிறோம் என்ற அரசியல் மனப்பாங்கு உண்டு. அந்த புது யுகத்துக்கு போகும் பாதைக்கு அமெரிக்காவைப் பற்றி தீர்ப்பாயம் பதிவிட்டவை சில புத்திமதிகள் தரலாம். வழித்துணையாக அன்றி வழிகாட்டியாகவுமாகலாம். கம்பளங்கள் விரித்து வரவேற்று, விருந்துகளும் நடக்கலாம். இவையெல்லாம் நோர்வேயூடான விடுதலைப் புலிகளின் பேச்சு வார்த்தைகளிலும் இருந்தன. அதனால் அமெரிக்காவில் மேற்கொள்ளப்படவிருந்த விருந்திலேயே கம்பளம் காலிற்கடியிலேயே இழுத்து விடப்பட்டது. ராஜபக்ஷகளுக்கு குழிவெட்ட அமெரிக்கா தற்சமயம் தமிழர் பிரச்சினை என்ற மண்வெட்டியைக் கையில் எடுத்திருக்கிறது.

மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள் போன்றவற்றைத்தான் சர்வதேசத்துக்கூடாக தங்கள் மேல் சுமத்தி அழுத்தம் தருவார்கள் என்பது ராஜபக்ஷக்கள் அறிந்தே நடந்து, தங்களது வலையை பின்னத் தாங்களே உதவி, போருக்குப் பின் சீனாவின் அணியில் இயங்குகிறார்கள். இந்த மண் வெட்டி சரிவராவிட்டால் அதைக் கைவிட்டு வேறொன்றை எடுப்பார்கள். அங்கு அமெரிக்கா நீதி என்றஅச்சாணியில் நிற்கப்போவதில்லை.

(வளரும்......)

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I — Sunday the 07th of November 2021



We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com


## An exercise on Joining Words for Grades 6 and 7.

### Underline the correct words in the brackets

01. She was very ill **(but, and , so)** we phoned for the doctor.
02. It is very late **(so, but, and)** we can still catch the last bus.
03. We must leave now **(and , so , or)** we shall miss the train.
04. She may be very poor **(so, but ,or)** she is genuine.
05. I have my rain coat **(so, but ,because)** it doesn't matter if it rains.
06. You make a model your way **(or , and, so)** I'll make one my way.
07. Vinod is a fast runner **(because, so , but)** he didn't win the race.
08. Duran is very unhappy **(but, because, so)** he has lost his dog .
09. You don't need to come with us **(so , unless , but)** you wish to.
10. Meena toasted the bread **(but , because , while)** Nila boiled the eggs.




Yesterday I was playing video game in my room when I heard people screaming . I went out and saw my neighbour's house on fire. In less than ten minutes the firemen arrived and fought against the fire for one hour until they could make it. " Wov " they are really brave! One of them entered the house and saved John's dog that was trapped in the fire.

I made a decision that I want to be a fireman when I grow up. I will be strong and brave enough to fight against the fire , to savepeople's lives and property. I can't wait. I can already see it in the newspaper.Brave firemen rescue a family of four." Mom will be really proud.

**Say TRUE or FALSE. Ring 'T' or ' F'**

| | | |
|---|---|---|
| 1. The boy's house was on fire. | T | F |
| 2. The boy thinks the firemen are brave. | T | F |
| 3.He admires the firefighters. | T | F |
| 4. It took long the firemen to arrive. | T | F |
| 5. It took one hour to put out the fire. | T | F |
| 6. The boys neighbours have a pet. | T | F |
| 7. A fireman saved the dog's life. | T | F |
| 8. The boy wants to be a fireman one day. | T | F |

**Answer these questions.**

1. What was the boy doing when his neighbour's house caught fire ?
2. Did he want to be a fireman before that ?
3. Why did he want to become a fireman in future?
4. What qualities does he think are essential for being a fireman?
5. What can he already see in the newspaper?
6. What do you think is the newspaper refering to ?
7. How does the boy think his mother would feel?

Answers:- 1 - Playing video games / 2 - No / 3 - He wanted to save people / 4 - Strong and brave / 5 - Firemen rescuing a family / 6 - A fire accident / 7 - Feel proud.

Answers:- 1- F / 2 - T / 3 - T / 4 - F/ 5 - T / 6 - T/ 7 - T / 8 - T

## Success

**Read and enjoy**



Success is something to work for ,not to wait for. You cannot climb the ladder of success with your hands in your pocket.One has to set a goal and toil along long roads to finally reach his destination. Success ,they say is not a destination but it is a journey. Once you cease to strive to maintain your success you may fall down.

You are responsible for your present codition-a successful one or a plight of penury. To be successful in life one should discover himself; he should know what interest him or her and how good he is at it.Then he has to explore all the avenues which can lend to his development in that direction.

It is also very important to get closer to people who can offer him the expertise and encouragement to March forward and achieve what he wants to be. It is essential that he has to be with people who have a positive attitude and confidence because confidence is contagious ; so is lack of it. Suppose you need help financially or otherwise . Do not hesitate to ask

## A Sentence Comprehension Exercise for O/L and A/L students.

**Read the following sentences and underline the correct statements under each of them .**

**1. If Ravi hadn't overslept he wouldn't have missed his flight.**

(a) Ravi didn't miss the flight.
(b) Ravi missed the flight.
(c) Ravi is going to miss the flight.

**2. If Meena had eaten a good breakfast she wouldn't be so hun gry now.**

(a) Meena didn't have a good breakfast.
(b) Meena had a good breakfast.
(c) Meena is now having a good breakfast.

**3. Father would have bought that new car if had saved some more money.**

(a) Father saved more money and bought that new car.
(b) Father is going to save more and buy that new car.
(c) Father didn't buy that new car because he didn't save more money.

**4. Veera wouldn't have lost the race , if he hadn't sprained his leg.**

(a) Veera sprained his leg but he won the race.
(b) Veera sprained his leg so he didn't win the race .
(c) Veera didn't sprain his leg but he won the race.

**5. If Myoora hadn't listened to his parents he wouldn't have suc ceeded in his life.**


(a) Myoora listened to his parents and he succeeded in his life.
(b)Myoora didn't listen to his parents so he succeeded in life.
(c) Though Myoora ignored his parents's advice , he succeeded in his life.

Answers :- 1 - b / 2 - a / 3 - c / 4 - b / 5 - a

## Idioms with parts of the body. Match the meanings with the sentences

1. You are the apple of my eye.
2. Don't pork your nose into my affairs.
3. They are leading a hand to mouth existence.
4. Haran gave me a cold shoulder at the party.
5. John has all the formulas at his fingers' end.
6. We go to school on foot.
7. High officials are guilty of an itching palm.
8. Farmers are the backbones of our country.

(a) We walk.
(b) they accept bribe.
(c) you're very precious .
(d) He is very through with it.
(e) A very poor life.
(f) They are very important.
(g) stop interfering in my matters
(h) He simply ignored me.



Answers :- 1- c /2 - g /3 - e / 4 - h / 5 - d / 6 - a / 7 - b / 8 - f

**Don't argue with idiots; they will drag you down to their level - Mark Twain**

# Sri Lankan Church opposes 'one country, one law' plan



While denouncing the government's 'one country, one law' concept, the country's Catholic bishops are calling for a new constitution to ensure members of all minority communities are treated equally before the law.

Sri Lankan bishops have urged the government to abandon its "one country, one law" plan for the predominantly Buddhist nation and instead draft a new constitution.

President Gotabaya Rajapaksa last month appointed a 13-member presidential task force under the chairmanship of hardline Buddhist monk Ven. Galagodaaththe Gnanasara Thera to study the concept and prepare a draft law.

The 'One Country, One Law' concept was an election slogan of Rajapaksa in 2019 when he was elected president with overwhelming support from the nation's Buddhist majority. According to an extraordinary gazette notification issued by the president, the task force is required to submit reports to the president once a month and the final report on or before February 28, 2022.

Bishop Winston Fernando of Badulla, president of the Catholic Bishops' Conference of Sri Lanka (CBCSL), has taken a strong exception to the government's move and has urged the repeal of the gazette notification appointing the task force. In a statement issued on November 2, he described the omission of Tamil, Hindu, Catholic, and other Christian minority groups from the task force as a lost opportunity.

"The Catholic Bishops' Conference of Sri Lanka, wishes to express its deep concern about the erosion of the democratic principles and values in our country," the CBCSL statement said. It lamented that "despite the promise made by the President and the Government before and after the elections, the formulation of a new Constitution for the country is put on the back burner with the adoption of the unholy, manipulative 20th Amendment to the Constitution." He added, "It is being exploited beyond its limit to the detriment of the well-being of the country."

**A controversial chairman**

Ven. Gnanasara Thera is a controversial figure in Sri Lanka. His Bodu Bala Sena (BBS) or the Forces of Buddhist Power, was implicated in the anti-Muslim riots in 2013. He was sentenced to a six-year prison term for contempt of court last year after shouting at a judge for holding him guilty of accosting the wife of missing journalist Prageeth Ekneligoda. However, he was accorded a presidential pardon within a few months of starting the prison term.

**Flawed process**

"To appoint a person without giving any consideration to his past records to chair the Presidential Task Force is adding insult to injury," Bishop Fernando said in the statement. The CBCSL statement criticized the purpose of the task force and the manner in which it was appointed. "No one would oppose the 'One Country, One Law' objective in governance provided it stems as a corollary of the Constitution of the country," the CBCSL statement said. "But to appoint by a special Gazette a Presidential Task Force comprising hand-picked individuals from outside without any reference to the democratically elected Legislature is unacceptable." The bishops said, "The Parliamentary process has been ignored in a matter of such grave concern."

The Sri Lankan bishops' made a strong appeal for the repeal of the gazette notification, saying instead "a new constitution should be drafted to ensure that all the citizens are treated equally before the law".



# China considered setting up military base in Sri Lanka – Pentagon

The Pentagon says China has likely considered setting up a military base in Sri Lanka.

This was revealed when the Pentagon released a report titled "Military and Security Developments Involving the People's Republic of China" yesterday.

The report said China is seeking to sustain military power at greater distances, and added that China may have have considered establishing military bases or logistic facilities in 13 countries including Sri Lanka.

Other countries include Singapore, Pakistan, Myanmar, United Arab Emirates and Thailand.

The Pentagon said China may establish these facilities to increase the strength of its naval, air, and ground forces.

# MAMANGAPILLAYAR TEMPLE - BATTICALOA

The Mamanga easwarar temple is one of the oldest Hindu Kovils (temples) in Batticaloa as well as in the eastern province of the country is situated around three kilometers from Batticaloa town According to some historical records and myths, this temple belongs to the period of 2nd to 3rd Century AD, and constructed at the place where Prince Rama had performed his prayers towards Lord Shiva during his search for Princess Seeta and had placed a handful of rice to denote Lord Shiva. This lump of rice had become a lingam and the area derived its name Maamanga-Easwara According to an ancient book named Mattakalappu Maanmium, the history of the temple is associated with the story of a Dravidian queen by the name of Aadakasavundary who ruled Batticaloa in the 2nd and 3rd centuries AD.

This queen was supposed to have had a grotesque, ungainly appearance but when she bathed in the Maamangam River she became a very lovely lady. Since this great lady bathed in the river it was renamed Maamangai nathi. The queen paid much courtesy to the temple and did major renewal work to the temple. That was a time when temples received Majestic acknowledgment and Maamanga temple too received the same. The temple had the name of Maamanga Eashwara earlier, but for some reason, the name changed and is now known as Maamangam Pillayar. Thousands of pilgrims around the world gather at the Maamangam Pillaiyar temple during its annual festival.

The weeklong colorful festival includes the thear structure pulling and many thanam and religious special blessings and worship. The festival falls during the months of June and July every year. The area is jam-packed with roadside shops with plenty of clothing, toys, and foodstuff. On the final day of the festival called the theetham, pilgrims take a bath in the pond located within the Kovil compound believing that all their sins are washed out. The mamangam temple can be reached by driving through bar road and taking the left at the temple junction.

Mamangam Temple is a historically important temple for Hindus living around the world.The temple is believed to be built at the exact spot where "Raman" performed his prayers to Lord Siva. The lump of rice that he placed turned into a lingam, this caused the temple to be called Mamanga Easwara Temple. This occurred during the time Raman visited Sri Lanka in search of his wife Seetha.The temple draws thousands of pilgrims for its annual 10-day long 'theertham' festival in July.



Apart from the main Mamangam Festival, regular daily poojas and special poojas are conducted during main Hindu festivals such as Deepavali, Tamil new year, Navarathri and Thiruvamba etc. The large pond next to the temple adds beauty and significance to this Kovil. On the final day of the annual Mamangam festival, an important religious ceremony takes place in the pond where the devotees take a quick dip in as part of the Hindu ritual.

# Deepavali

Diwali or Deepavali is one of the biggest and auspicious festivals celebrated by Hindus all around the globe. The festival of lights signifies peace and joy, the victory of good over evil, and light over darkness every day. It is one of the most symbolic Hindu festivals, and all the communities in the country celebrate it with much pomp. During this festival, people clean their homes, decorate every corner with lights, lamps, diyas, flowers, rangoli, and candles.

Diwali is observed on the 15th day of the Kartik month as per the Hindu Lunar calendar. According to Hindu mythology, the Prince of Ayodhya, Rama, returned home with his wife Sita and brother Lakshmana on the auspicious occasion of Diwali. They came back to Ayodhya after spending 14 years in exile and defeating the King of Lanka, Ravana. People of Ayodhya had celebrated their return with great enthusiasm by lighting rows of lamps. The tradition has continued till date and is celebrated as the festival of Diwali.

**Significance Of Deepavali:**

Deepavali is the festival of lights which signifies the victory of good over evil and the eradication of dark shadows, negativity, and doubts from our lives. It is a celebration of prosperity in which people give gifts to their loved ones. The festival also sends the message of illuminating our inner selves with clarity and positivity. Lakshmi Puja is one of the most significant rituals of Diwali celebrations. People pray to the Goddess of wealth on this day to receive blessings from her and wish for health, wealth, and prosperity.

The Hindu festival of lights, known as Deepavali or Diwali is the biggest and the brightest of all festivals. A festival marked by four days of celebration, Diwali is witnessed all around India and also celebrated in different parts the world. A beautiful and one of the most pious occasions, Diwali is the time that illuminates the country with its sheer magic and brilliance and dazzles people everywhere with joy and celebration.

Diwali is most often celebrated around late October or early November. According to the Hindu calendar, in the month of Kartik, Diwali falls on the 15th day, and hence it varies every year. All the four days in Diwali have their unique traditions that fill people with good hope, love, peace and a rejuvenated mind, not to forget unadulterated happiness.

In Bengal, the Deepavali, or Deepabali, is dedicated to the wor-





ship of the powerful goddess Kali, the dark goddess of strength. the elephant god Lord Ganesha is also worshipped in some homes on Diwali, because he is a symbol of auspiciousness and wisdom.

Diwali is not only important to Hindus, For Hindus, it often signifies the return of Lord Rama to Ayodhya, after his 14 years of exile and victory over Ravana.

Ram, on that special day, was welcomed to the kingdom of Ayodhya with rows of lights throughout the kingdom. Thus, the tradition of lighting oil lamps on Diwali symbolizes the victory of good over evil and freedom from spiritual darkness.

Importance and Significance: With all the lights eradicating dark shadows and evil, and all the prayers and love among people create a wonderful atmosphere full of goodness and purity.

Diwali is not just the lights, gambling, and fun-filled surprises and gifts; Diwali is also a time to reflect on one's life, past deeds and making the right changes for the upcoming year. Diwali is also a celebration to give and forgive. It is a common practice in Diwali for people to forget and forgive the injustices and grudges. People celebrate with an air of freedom, festivity, and friendliness everywhere.

Diwali marks the birth of a new and rejuvenated soul. A happy and refreshed mind during Diwali charges up a person to make changes as a healthy, ethical individual, who will be more efficient in their work, and will also be spiritually advanced. Diwali is a celebration that unites people from every corner, A celebration of prosperity, promising us success and prosperity. Thus, people give gifts to employees, family, and friends. Most importantly, Diwali illuminates our inner self.

# Covid Pill gets Approval in UK





Molnupiravir is the first oral antiviral treatment for Covid to report clinical trial results. The first pill designed to treat symptomatic Covid has been approved by the UK medicines regulator. The tablet - molnupiravir - will be given twice a day to vulnerable patients recently diagnosed with the disease. In clinical trials the pill, originally developed to treat flu, cut the risk of hospitalisation or death by about half. Health Secretary Sajid Javid said the treatment was a "gamechanger" for the most frail and immunosuppressed. In a statement he said: "Today is a historic day for our country, as the UK is now the first country in the world to approve an antiviral that can be taken at home for Covid."

**First oral treatment**

Molnupiravir, developed by the US drug companies Merck, Sharp and Dohme (MSD) and Ridgeback Biotherapeutics, is the first antiviral medication for Covid which can be taken as a pill rather than injected or given intravenously. The UK has agreed to purchase 480,000 courses with the first deliveries expected in November. Initially it will be given to both vaccinated and unvaccinated patients through a national study, with extra data on its effectiveness collected before any decision to order more. The drug needs to be given within five days of symptoms developing to be most effective. It's not immediately clear how it will be distributed so quickly by the NHS. It's thought some care homes may be offered supplies while other elderly or vulnerable patients may be prescribed it by their GP after testing positive for Covid.

The new treatment targets an enzyme that the virus uses to make copies of itself, introducing errors into its genetic code. That should prevent it from multiplying, so keeping virus levels low in the body and reducing the severity of the disease. Merck said that approach should make the treatment equally effective against new variants of the virus as it evolves in the future. The UK regulator, the MHRA, said the tablet had been authorised for use in people who have mild to moderate Covid and at least one risk factor for developing severe illness such as obesity, old age, diabetes or heart disease.

The organisation's chief executive, June Raine, described it as "another therapeutic to add to our armoury against Covid-19". "It is the world's first approved antiviral for this disease that can be taken by mouth rather than administered intravenously," she said. "This is important, because it means it can be administered outside of a hospital setting, before Covid-19 has progressed to a severe stage." England's deputy chief medical officer, Prof Jonathan Van-Tam, warned on Wednesday of some "hard months to come" in the pandemic. He said that while Covid cases appeared to have stabilised, deaths were rising and there were signs infections were starting to "penetrate" older age groups. The UK recorded 41,229 Covid cases on Wednesday and 217 deaths within 28 days of a positive test.

## Western Wall or Wailing Wall - Pilgrimage Site, Jerusalem



*Tours and Activities to Experience Western Wall (Wailing Wall)*

Western Wall, Hebrew Ha-Kotel Ha-Maʿaravi, also called Wailing Wall, in the Old City of Jerusalem, a place of prayer and pilgrimage sacred to the Jewish people. It is the only remains of the retaining wall surrounding the Temple Mount, the site of the First and Second Temples of Jerusalem, held to be uniquely holy by the ancient Jews. The First Temple was destroyed by the Babylonians in 587–586 BCE, and the Second Temple was destroyed by the Romans in 70 CE.

The authenticity of the Western Wall has been confirmed by tradition, history, and archaeological research; the wall dates from about the 2nd century BCE, though its upper sections were added at a later date. Texts explaining the survival of the wall vary; one suggests that God saved this fragment for the Jewish people, while another holds that Titus left it as a painful reminder of the Roman defeat of Judea.

Because the wall now forms part of a larger wall that surrounds the Muslim Dome of the Rock and Al-Aqṣā Mosque, Jews and Arabs have frequently disputed control of the wall and, often, right of access to it. That conflict has been particularly heated since the Israeli government took full control of the Old City in the wake of the Six-Day War of June 1967.

As it is seen today, the Western Wall measures about 50 metres (160 feet) long and about 20 metres (60 feet) high; the wall, however, extends much deeper into the earth. Jewish devotions there date from the early Byzantine period and reaffirm the rabbinic belief that "the divine Presence never departs from the Western Wall." Jews lament the destruction of the Temple and pray for its restoration, and it has long been a custom to push slips of paper with wishes or prayers on them into the wall's cracks. Such terms as Wailing Wall were coined by European travelers who witnessed the mournful vigils of pious Jews before the relic.

Arab and Jewish sources both confirm that, after the Arab capture of Jerusalem in 638, Jews led the conquerors to the site of the Holy Rock and Temple yard and helped clear away the debris.

## Greta Thunberg in Glasgow for COP 26 Summit



The environmental activist Greta Thunberg is in Glasgow where the COP26 summit is taking place. The 18-year-old Swede is one of the world's best known climate campaigners. Greta Thunberg told ahead of the summit that people needed to demonstrate "massive public pressure" on politicians in Glasgow to ensure they did enough to reduce carbon emissions.

She defended the recent actions of Insulate Britain protesters, who have been blocking roads, saying "sometimes you need to anger people". She also criticised the construction of the UK's first deep coal mine in 30 years. Thunberg has called for people in power across the world to act with more urgency in tackling harmful emissions.

For example, she called EU plans to reduce harmful emissions by 2050 a "surrender", and said, "We don't just need goals for just 2030 or 2050. We, above all, need them for 2020 and every following month and year to come." However, she has avoided getting into the detail of what action should be taken, saying "it is nothing to do with me". Greta Thunberg says she is still hopeful the world can achieve "massive changes" to combat climate change.

Her small campaign had a global effect, inspiring thousands of young people across the world to organise their own strikes. By December 2018, more than 20,000 students - from the UK to Japan - had joined her by skipping school to protest. A year later, she received the first of three Nobel Peace Prize nominations for climate activism.

In 2019, Thunberg sailed across the Atlantic on a yacht to attend a UN climate conference in New York. Delivering what is probably her most famous speech, she angrily told world leaders they were not doing enough. "You all come to us young people for hope. How dare you? You have stolen my dreams and my childhood with your empty words," she said.

Alok Sharma, the president of the COP26 summit, has said that Thunberg's UN speech in 2019 had made him feel "really uncomfortable" because it held up a "mirror" to his generation. onald Trump tweeted that she should "work on her anger management problem" while Russian President Vladimir Putin described her as a "kind but poorly informed teenager".

# எழில் கதிர்





## எடை குறைக்க செய்யவேண்டியது

பருமனாக இருப்பவர்கள் எடையை குறைக்க தினமும் காலையில் ஒரு குவளை வெதுவெதுப்பான வெந்நீரில் பாதி எலுமிச்சை பழச்சாற்றை பிழிந்து அதனுடன் அரை தேக்கரண்டி தேன் கலந்து சாப்பிட்டால் எடை குறையும்.

**திங்கள் - முதல் நாள்**

காலையில் எழுந்தவுடன் வெதுவெதுப்பான நீரில் சில துளிகள் எலுமிச்சைச் சாற்றைக் கலந்து குடிக்கவும். முதல் நாள் முழுவதும் திட உணவு எதுவும் சாப்பிட வேண்டாம். நிறைய தண்ணீர் அருந்தவும். பழச்சாறு அல்லது பழக்கூழ் போன்றவற்றை பசிக்கும்போது பருகவும். உடலில் இருக்கும் நச்சுப்பொருள்கள் எல்லாம் வெளியேறிவிடும்.

**செய்வாய் - பழங்கள்**

இரண்டாம் நாள் முழுவதும் விருப்பப்பட்ட பழங்களை உண்ணலாம். இது ஜீரண சக்தியை மேம்படுத்தும். அப்பிள், மாம்பழம், திராட்சை, கொய்யா, பலா, தர்பூசணி, தோடை, போன்றவற்றை சாப்பிடலாம். வாழைப்பழத்தை தவிர்த்துவிடவும்.

**புதன் - நார்ச்சத்து**

காலையில் எழுந்ததும் நடைப்பயிற்சி செய்ய வேண்டும். அதன்பின் நாள் முழுவதும் காய்கறிகளை மட்டுமே உணவாக எடுத்துக் கொள்ளவும். கோவா, ப்ரக்கோலி போன்ற நார்ச்சத்து மிக்க காய்கறிகள் மிகவும் நல்லது. எவ்வளவு முடியுமோ அவ்வளவு தண்ணீர் குடிக்கவும். உடல் சுத்தமாகும்.

**வியாழன் - கல்சியம்**

நான்காவது நாளில் உடம்புக்கு நிச்சயம் கல்சியம் சத்து தேவைப்படும். பால் இரண்டு கப் மற்றும் கொஞ்சம் பாலாடைக்கட்டி சாப்பிடலாம். இன்று வாழைப்பழத்தை நிச்சயம் சாப்பிடவும். இது உடல் சக்தியை அதிகரிக்க உதவும்.

**வெள்ளி - மாவுச்சத்து**

ஐந்தாவது நாளில் உடல் இப்போது எடையற்று இருப்பதைப் போலத் தோன்றும். மெலிவதற்கான அறிகுறிகள் தென்படும். இப்போது சிவப்பு அரிசி சாதம் மற்றும் சத்தான காய்கறிகளைச் சாப்பிடலாம். மதிய உணவாக இதைச் சாப்பிட்டு மற்ற வேளைகளில் அல்லது பசிக்கும் போது காய்கறிகளை மட்டும் சாப்பிட வேண்டும்.

**சனி - புரதச்சத்து**

புரதச் சத்துமிக்க கோழி இறைச்சி, மீன், முட்டை, பாலாடைக்கட்டி, பருப்பு வகைகள் போன்றவற்றை இன்றைய தினம் மூன்று வேளையாகப் பிரித்துச் சாப்பிடலாம். ஆனால் அரை மணி நேரமாவது உடற்பயிற்சி செய்யவேண்டும்.

**ஞாயிறு - இறுதி நாள்**

சிவப்பரிசி சாதம், காய்கறிகள் மற்றும் பழங்கள் மட்டுமே சாப்பிடவும்.

இப்போது உடல் எடை ஓரளவு சமன்நிலைக்கு வந்திருக்கும். ஆனால் இது முதல் படி மட்டும்தான்.



இதற்கு பின் மேலும் உடல் எடையைக் குறைக்க தொடர்ந்து நடைப்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். சத்தான உணவுப் பழக்கம், எட்டு மணி நேரம் உறக்கம் மற்றும் தினமும் 45 நிமிட உடற்பயிற்சி அல்லது யோகாவைக் கடைப்பிடித்தால் உடல் எடை தானாகவே குறைய ஆரம்பிக்கும்.

## அழகுக் குறிப்புகள்

தேங்காய் எண்ணெயில் மஞ்சள்தூளை போட்டுக் குழைத்து உடம்பிற்கு தடவி, பயத்தமாவை தேய்த்துக் குளித்தாள் தோல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.

தோடம்பழத்தை இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து, பத்து நிமிடம் கழித்து கழுவ வேண்டும். தினம் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளப்பாகவும், இளமையுடனும் இருக்கும்.

முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க அடிக்கடி எலுமிச்சை சாற்றை தடவ வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழகு பெறும்.



நகங்களை வெட்டும் முன் எண்ணெயை தடவி விட்டு, சிறிது நேரம் கழித்து நகத்தை வெட்டினால், விரும்பும் வடிவத்திலும், அழகாகவும் வெட்ட இயலும்.

கூந்தலில் எண்ணெய் பசை அதிகமாக இருந்தால், கோழி முட்டையில் கொஞ்சம் சர்க்கரையை கலந்து தலையில் லேசாக தடவிக்கொண்டு பிறகு குளிக்க வேண்டும். இதனால் எண்ணெய் பசை நீங்கி முடி அழகு பெறும்.


தேநீரில் வடிகட்டிய பின், மிஞ்சும் தேயிலைத் தூளில் எலுமிச்சை சாறை பிழிந்து, தலையில் தேய்த்துக் குளித்தால், தலைமுடி பளபளப்பாகும்.

வேப்பிலை, புதினா, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலைகளை காயவைத்து, தூளாக்கி வைத்துக்கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குழைத்து, முகத்தில் பூசி, 20 நிமிடம் ஊற வைத்து குளித்தால் வெளியில் கறுத்துப் போகாமல் இருக்கும்.

கை, கால் முட்டிகளில் கறுப்பு நிறம் அதிகமாக இருந்தால், தொடர்ந்து அந்த இடத்தில் எலுமிச்சம்பழ சாற்றை தேய்த்து சோப்பு போட்டு குளிக்க வேண்டும் நாளடைவில் கறுப்பு நிறம் போய் விடும். தோல் வறண்டும், சுருக்கமும் இருந்தால் ஒலிவ் எண்ணையை பூசி, சிறிது நேரம் ஊற வைத்து, சோப்பு போட்டு குளிக்க வேண்டும்.

இரவு படுக்கும் முன், புதினா சாறு இரண்டு தேக்கரண்டி, பாதி எலுமிச்சம்பழ சாறு ஆகியவற்றுடன் பயிற்றம்பருப்பு மாவை கலந்து முகத்தில் தடவிக் கொண்டு பத்து நிமிடம் ஊறிய பிறகு ஐஸ் ஒத்தடம் கொடுக்க முகம் சுத்தமாகும். பருவினால் ஏற்பட்ட தழும்பும் மறையும்.

## ஆரோக்கியமே அழகு



பருவ வயது பெண்கள் பல நேரங்களில் மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும், சமுக ரீதியாகவும் குழப்பங்களுக்கு ஆளாகிறார்கள்.

இந்த மாதிரியான நேரங்களில் இவர்களுக்கும் நல்ல ஆலோசகர்கள் இல்லாத நிலையில்தான் தீய நபர்களின் சகவாசத்தால் போதை, பாலியல் உறவு என தவறான பழக்கவழக்கங்களை நோக்கி அவர்களின் பயணம் தொடங்குகிறது. இதனால் அவர்களுடைய எதிர்கால வாழ்க்கை சிக்கல் மிகுந்ததாக மாறுகிறது.

பெரும்பாலும் ‘அழகாக இல்லை, குட்டையாக இருக்கிறேன், தலைமுடி நீளமாக இல்லை, பற்கள் வரிசையாக இல்லாமல் துருத்திக் கொண்டு இருக்கின்றன, குண்டாக இருக்கிறேன், முகப்பருக்கள் அதிகமாக உள்ளன’ போன்ற பிரச்சினைகளே அவர்களை கவலையடையச் செய்கின்றன. நாளாக நாளாக கவலைகளின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இதனால் தங்களை பற்றிய தாழ்ந்த சுயமதிப்பீட்டிற்கு ஆளாகிறார்கள். விளைவு? படிப்பில் நாட்டம் குறைந்து, தனிமையை விரும்பி மற்றவர்களிடம் இருந்து விலகத் தொடங்குகிறார்கள். இவ்வாறு பெண்கள் தனிமையை நாடத் தொடங்கினாலே, அவர்கள் மிகப்பெரிய பிரச்சினையில் சிக்கித் தவிக்கிறார்கள் என்பதை நீங்கள் உணர வேண் டும் என்கிறார்கள் மனநல மருத்துவர்கள்.

இந்த பருவத்தில் தங்களுக்கு ஏற்படும் மாற்றங்களை தெளிவாகத் தெரிந்து கொண்டு, தங்களுடைய உடல்நல பராமரிப்புக்குத் தேவையான பொறுப்பையும், வழிமுறைகளையும் சுயமாக வளர்த்துக் கொண்டாலே போதும். பிரச்சினைகளில் இருந்து சுலபமாகத் தப்பி விடலாம்.

பெரும்பாலான பெண்கள் அதிகம் சாப்பிடுவதில்லை. அதிலும் குறிப்பாக பருவ வயதுகளில் உள்ளவர்கள் ‘ஸ்லிம்மாக இருந்தால்தான் அழகு என நினைத்து பட்டினி கிடக்கிறார்கள். இதனால் உடலுக்குத் தேவையான சத்துகள் கிடைக்காமல் ரத்த சோகை போன்ற நோய்க்கு ஆளாகின்றனர்.

எனவே சத்தான காய்கறிகள், பழங்கள் சாப்பிட அவர்களை பழக்கப்படுத்த வேண்டும். உயரமாக இல்லாமல் குட்டையாக இருக்கிறோம் என்ற கவலை சிலருக்கு வரும். இது இவர்களே தானாக வரவழைத்துக் கொண்ட கவலைதான். உயரம் குறைவாக இருப்பதற்கு ஹார்மோன் கோளாறு, உணவுபற்றாக்குறை இப்படி பல காரணங்கள் இருக்கின்றன. சிலருக்கு வளர்ச்சி தள்ளி போவதும் உண்டு. இவர்கள் சில வருடங்கள் சென்றபின் வேகமாக வளர்ந்து, தங்களின் சராசரி உயரத்தை அடைவர்.

பருவ வயதுகளில் உடலில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி அவர்களுக்குத் தெளிவு ஏற்படும் வண்ணம் பெற்றோர்கள் பேச வேண்டும். பேச கூச்சமுள்ள பெற்றோர் அது தொடர்பான புத்தகங்களை அவர்களுக்கு படிக்கத் தரலாம்.

உடல் மாற்றங்கள், பழக்கவழக்கங்கள், சமுக, கலாச்சார மாறுதல்கள் போன்ற விடயங்கள் பற்றி பெற்றோர்கள் குழந்தைகளிடம் சுதந்திரமாக பேச வேண்டும். இவ்வாறு பேசுவதற்கு பெரும்பாலான பெற்றோர் தயங்குகிறார்கள். அப்படித் தயங்கிக் கொண்டிராமல் பிள்ளைகளிடம் சகஜமாக பேசி அவர்களை வழிப்படுத்த வேண்டும்.

# விருந்துக்கதிர்






# மூக்கிரட்டைக் கீரை

இளைச் செடி என விவசாயிகள் ஒதுக்கும் ஒரு செடிதான், மனிதர்களுக்கு, அரிய மூலிகையாக, அவர்களின் ஆயுளை காக்கும் மூலிகையாக விளங்குகிறது. இன்றைக்கு நகரங்களில் மூலிகைகளின் மேல் உள்ள ஈர்ப்பு, கிராமங்களில் இன்னும் பரவலாகவில்லை.

எதன் மீதும் பற்றிப் படராமல், நிலத்தில் படர்ந்து, தனித் தன்மையாக வளரும் ஒரு செடிதான், மூக்கிரட்டை. அடர் நீல வண்ணத்திலும், வெண்மை வண்ணத்திலும் பூக்கும் மலர்களைக் கொண்ட இருவேறு விதமான மூக்கிரட்டை செடிகளின் இலைகள் பசுமை வண்ணத்தில், தண்டுகளில் தனித்தனியே காணப்படும். சாரணைக் கொடி, சாரணத்தி என்றும் அழைக்கப்படும் மூக்கிரட்டை, அரிய தன்மைகள் உடைய ஒரு நற்செடியாகும். உடலுக்கு வியாதி எதிர்ப்பு சக்தி அளித்து, உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றும் ஆற்றல் மிக்க இதன் இலைகளில், பத்துக்கும் மேற்பட்ட அமினோ அமிலங்கள், விற்றமின்கள் மற்றும் தாதுக்கள் போன்றவை மிகுந்துள்ளன.

### மருத்துவப் பயன்கள்

1.மூக்கிரட்டை செடி, கல்லீரல் மற்றும் சிறுநீரகம் உள்ளிட்ட முக்கிய உறுப்புகளின் கழிவுகளை, முழுவதும் வெளியேற்றி, மனிதர்களின் உடல் நலம் காக்கும் வல்லமை பெற்றதாகத் திகழ்கிறது.

2. மூக்கிரட்டை உடலில் இறங்கும்போது, அங்கே, வாத வியாதிகள் எல்லாம் அடங்கி, வாதம் உடலில் சீராகும். இரத்த சோகையால் ஏற்படும் உடல் வீக்கம், மூச்சிரைப்பைப் போக்க, கல்லீரல், மஞ்சள் காமாலை பாதித்தவர்களின் வயிற்று உப்புசம் குறைந்து நச்சு நீர் வெளியேற, மூக்கிரட்டை உதவி செய்யும்.

3.புற்று நோய்கள் புற்று வியாதிகளை ஏற்படுத்தும் நச்சுக் கிருமிகளை அழிக்கும், தொற்று வியாதிகளின் பாதிப்பை சரி செய்யும், உடல் திசுக்களை சரி செய்து, உடலில் ஏற்படும் முதுமைத் தன்மையை போக்கி, உடல் இளமையை தக்க வைக்கும்.

4.மூளைக்கு ஆற்றலை அளித்து, உடலுக்கு சுறுசுறுப்பையும், மனதிற்கு உற்சாகத்தையும் உண்டாக்கும்.

மூக்கிரட்டை இலைகள், பொன்னாங்கன்னி இலைகள் மற்றும் கீழாநெல்லி இலைகள் ஆகியவற்றை ஒரே அளவில் எடுத்துக் கொண்டு, அவற்றை நன்கு அரைத்து, சிறிதளவு மோரில் கலந்து தினமும் சாப்பிட்டு வர, கலங்கலான பார்வை மற்றும் வெள்ளெழுத்துக் குறைபாடுகள் விலகி, கண் பார்வை தெளிவாகும்.

5.மூக்கிரட்டை, சிறுகுறிஞ்சான், நெருஞ்சில், மிளகு, சீரகம், திப்பிலி இவற்றை சமமாக எடுத்துக் கொண்டு, தூளாக்கி, தினமும் இரு வேளை தேனில் கலந்து உண்டு வர, உடல் எடை குறைந்து, உடல் வனப்பு மிகுந்து காணப்படும்.

6.மூக்கிரட்டை சமூலம் எனும் முழுச் செடியையும் உலர்த்தி, தூளாக்கி, தினமும் இரு வேளை, சாப்பிட்டு வர, மலச்சிக்கல் நீங்கி உடல் புத்துணர்வாகி, இளமைப் பொலிவுடன் காணப்படும்.

7.மூக்கிரட்டை இலைகளை சுத்தம் செய்து சமைத்து சாப்பிட்டு வர, சுவாச பாதிப்புகள் சரியாகும்.

மூக்கிரட்டை வேர்கள் சற்று நீளமாக, சிறிய மரவள்ளிக் கிழங்கு போல காணப்படும். இரத்தச் சோகை, இதய பாதிப்புகள் போன்ற வியாதிகளுக்கு, சிறந்த மருந்தாகிறது. மூக்கிரட்டை வேரை நீரில் இட்டு ஆற வைத்து பருகி வர, இரத்த சோகை, சளித் தொல்லை நீங்கும்.

8.மூக்கிரட்டை வேரை சற்று இடித்து, விளக்கெண்ணையில் இட்டு காய்ச்சி, காலையில் வெறும் வயிற்றில் பருகி வர, வயிற்றுப் போக்கு ஏற்படும். இதன் மூலம், உடலில் சேர்ந்து இருந்த நச்சு நீர், நச்சுக்கிருமிகள் யாவும் மலத்துடன் வெளியேறி விடும். இதுநாள் வரை இந்த நச்சுக்களால், உடலில் ஏற்பட்டிருந்த சரும வியாதிகள், அரிப்பு மற்றும் வாதம் சார்ந்த வியாதிகள் அனைத்தும் சரியாகி விடும்.

9.உடலில் வியாதிகளால் ஏற்பட்ட நச்சு நீரால், சளியும், மூச்சுத் திணறலும் ஏற்பட்டு, அவை தினசரி இயல்பு வாழ்க்கையை பாதிக்கும். இதை சரி செய்ய, முன் சொன்ன முறையில் காய்ச்சிய மூக்கிரட்டை வேர் நீரில், சிறிது மிளகுத்தூள் கலந்து பருக, மூச்சுத் திணறல் பாதிப்புகள் சரியாகி விடும்.

10. இந்த மருந்தை எடுக்கும் போது, மலக்குடலை சுத்தம் செய்யும் மூக்கிரட்டை வேரின் தன்மையால் மலம் இளகி, வயிற்றுப்போக்கு ஏற்படும், இதனால் பாதிப்பில்லை, உடலுக்கு நன்மைதான் உண்டாகும்.

11. சிறுநீரகம் ஆரோக்கியமாக இருக்க மூக்கிரட்டை கீரை மற்றும் அதன் தண்டுகளையும் அடிக்கடி சாப்பிட்டு வருவது நல்லது. சிறுநீரகங்களில் கற்கள் உருவாவது, சிறுநீரக தொற்று நோய்கள் போன்றவற்றிற்கு சிறந்த நிவாரணமாக மூக்கிரட்டை கீரை விளங்குகிறது.

12. மூக்கிரட்டை கீரை செடியின் வேர்களை நன்கு காய வைத்து, அரைத்து பொடியாக்கி அதை இளம் சூடான நீரில் கலந்து, பருகி வந்தால் கண்கள் சம்பந்தமான அத்தனை குறைகளையும் நீக்கும்.

13. மூக்கிரட்டை கீரையை பக்குவம் செய்து சாப்பிட்டு வருபவர்களுக்கு அவர்களின் ஈரல் நன்கு பலம் பெறும். ஈரலில் ஏற்பட்டிருக்கும் எப்படிப்பட்ட குறைபாடுகளையும் போக்கும். பித்தநீர் சுரப்பை ஊக்குவிக்கும். உடலை பல்வேறு விதமான நோய்கள் தாக்குவதிலிருந்து நம்மைப் பாதுகாக்கும்.

14. மூக்கிரட்டை கீரை மற்றும் அதன் வேர்களை காய வைத்து, பொடி செய்து நீரில் வேகவைத்து ஆற்றி குடித்து வந்தால் ரத்தத்தில் உள்ள நச்சுகள், கழிவுகள் எல்லாம் நீங்கி ரத்தம் சுத்தமாகும்.

மூக்கிரட்டைக் கீரையைக் கொண்டு அதைச் சுத்தம் செய்து, அம்மியில் வைத்து மைய அரைத்து நெல்லிக்காய் அளவு எடுத்து அரிசி மாவுடன் கலந்து தண்ணீர் விட்டு கெட்டியாக பிசைந்து அடைபோல தட்டி சாப்பிடலாம். காலை, மாலை தொடர்ந்து ஏழு நாள்கள் தொடர்ந்து சாப்பிட்டு வர அனைத்து வகையான மூல நோய்களும் குணமாகும்.



# மூக்கிரட்டைக் கீரை பொரியல்

### தேவையான பொருள்கள்

1 பெரிய வெங்காயம்
2 கைப்பிடி அளவு மூக்கிரட்டை கீரை
1/4 கப் வெங்காயத்தாள்
4 பல்பூண்டு
1 துருவிய கரட்
2 பச்சை மிளகாய்
2 முட்டை
1 தேக்கரண்டி கடலை எண்ணெய்
1/4 தேக்கரண்டி சீரகம்
1/4 தேக்கரண்டி மஞ்சள் தூள்
தேவைக்கேற்பஉப்பு
1/4 எலுமிச்சை சாறு

**தாச்சியில் கடலை எண்ணெய் ஊற்றி சூடானதும் சீரகம் சேர்த்து சீரகம் பொரிந்ததும், நறுக்கிய வெங்காயம் பூண்டு, பச்சைமிளகாய் சேர்த்து வதக்கவும்.**

**வெங்காயம் வதங்கிய பின் கரட் துருவலை சேர்த்து வதக்கவும் கரட் லேசாக வதங்கிய பின் நறுக்கிய கீரை மற்றும் வெங்காயத்தாள் சேர்த்து நன்கு வதக்கவும் பின்பு 2 முட்டையை உடைத்து ஊற்றி சேர்த்து வதக்கவும்**

**பின் மஞ்சள் தூள் மற்றும் உப்பு சுவைக்கேற்ப சேர்த்து நன்கு கிளறி விடவும்.**

**அடுப்பை அணைத்து விட்டு இறுதியாக எலுமிச்சை பழச்சாறு சேர்த்து கிளறி விட்டு இறக்கவும்.**

**இது சோற்றுடன் கலந்து சாப்பிட நன்றாக இருக்கும் பொரியலாகவும் சாப்பிடலாம்.**

# மருத்துவக் கதிர்


## மூட்டுவலிக்கு பயிற்சி



நம் உடலில் சுமாராக 600க்கும் மேற்பட்ட தசை கள் அமைந்துள்ளன.பொதுவாக தசைகள் உடல் இயக்கத்திற்கு உதவுகின்றன. நாம் செய்யும் அனைத்து வேலைகளுக்கும் தசைகள் உறுதுணையாக இருக்கின்றன. மனிதன் உடம்பு முழுவதும் தசைகள் அமைந்து நம் உடலுக்கு ஒரு அழகான வடிவமைப்பைத் தருகிறது. தசைகளும் அது செய்யும் வேலைக்கேற்ப அவற்றை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

அதாவது நம் இதயம் தொடர்ந்து துடித்துக் கொண்டே இருப்பதற்கு காரணம் நம் இருதயத்தை சுற்றி அமைந்துள்ள தசைகள் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருப்பதே.

நாம் நடப்பதற்கு, சாப்பிட, ஓட, நடக்க என்று நம் அனைத்து வேலைகளுக்கும் நம் தசைகள் இயக்கம் மிக முக்கியம். நாம் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருப்பதால் உடல் சோர்வடைகிறோம் சில நேரங்களில் அதே போல் நாம் தொடர்ந்து இயங்கும் போது, நம் தசைகளும் தசை நார்களும் சோர்வடைகிறது. இதனை ஆங்கிலத்தில் fatigue என்று கூறுவார்கள். இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. இங்கே நாம் முன் தொடை தசைக்கும் மூட்டுவலிக்கும் என்ன உறவு என்று பார்க்கலாம்.



முன் தொடையில் அமைந்துள்ள தசையை quadriceps என்று கூறுவார்கள். இது மொத்தம் நான்கு தசைகளால் ஆனது, அதனால் தான் இதனை quadri என்ற பெயர் கொண்டு அழைக்கின்றனர். உடலில் உள்ள பல்வேறு வலுவான தசைகளில் இதுவும் ஒன்று. இந்தத் தசை மிகுந்த வலுவுடன் இருந்தால் நமக்கு பிற்காலத்தில் வரப்போகும் மூட்டுவலியை அறவே தவிர்க்கலாம்.

### மூட்டுவலியை தவிர்க்கும் முறைகள்

நீங்கள் நடக்கும் போது பல்வேறு விசைகள் உடல் இயக்கத்திற்கு உதவுகின்றன. அதில் முக்கியமான ஒன்று புவி ஈர்ப்பு விசை. இந்த விசை நம் உடலில் இயங்கவில்லை என்றால் நாம் ஆகாயத்தில் மிதந்து கொண்டு இருப்போம். இந்த விசை பல்வேறு வகையில் மனிதனுக்கு உதவினாலும் சில சமயங்களில் பிரச்சினையையும் ஏற்படுத்துகின்றன. அதாவது, நாம் நடக்கும் போது, நம் முழங்கால் மூட்டு முன்னும் பின்னும் இயங்கி, நம் உடலை முன்னே கொண்டு செல்ல உதவுகின்றன. தொடை எலும்பும் கெண்டைக்கால் எலும்பும் மடங்கி விரிவதை கட்டுப்படுத்தும் தசைதான் நம் முன் தொடையில் அமைந்துள்ள quadriceps . நாம் நடக்கும் போதும், ஓடும் போதும், நிற்கும் போதும் மூட்டுகளுக்கு உள்ளே ஏற்படும் உராய்வை மிக நேர்த்தியாக கட்டுப்படுத்தும் இந்தத் தசையை நாம் ஒழுங்காகக் கவனிப்பதில்லை.

10 அல்லது 15 வருடங்களுக்கு முன் நாம் மிதிவண்டி மிதித்துக் கொண்டிருந்தன. இந்த தசைகள் வலுவாக இருக்க உதவியது. இந்த அவசர உலகில் நாம் எவரும் மிதிவண்டி மிதிக்கத் தயாராக இல்லை.

இது போன்ற உடற்பயிற்சிகள் மிகுந்த வேலையை நாம் அறவே தவிர்த்து விட்ட சூழ்நிலையில் மூட்டுத் தேய்மானம் என்பது ஒரு பொதுவான பிரச்சினையாகி விட்டது. இந்தத் தசை வலுவை இழந்து தொய்வடையும் போது மூட்டு தேய்மானமாகத் தொடங்குகிறது. நாம் நடக்கும் போது, தரையில் இருந்து மூட்டுக்கு பரவும் உராய்வு இந்த தசைகள் மூட்டுக்குள் பரவாமல் தாங்கிப் பிடித்து மூட்டுக்களில் ஏற்படும் தேய்மானத்தை தடுக்கிறது.

முன் தொடைத் தசை வலுவிழக்கும் போது மிக அதிகமான விசைகள் மூட்டுக்களை தாக்கத் தொடங்கும். இதனால் மூட்டு எலும்புகள் சிறிது சிறிதாகத் தேயத் தொடங்குகின்றன. இதனைப் பொதுவாக மருத்துவர்கள் மூட்டுத் தேய்மானம் ஆகிவிட்டது, இனி ஒன்றும் பண்ண முடியாது என்று கூறுவார்கள்.

ஆனால் நாம் இதனைத் தடுக்க முடியும், ஒரே வழி தகுந்த சக்தியுடன் அதாவது போதிய வலுவுடன் முன்தொடைத் தசையை வைத்து இருந்தால் நாம் இந்த மூட்டு வலியை தவிர்க்கலாம். இந்தத் தசையை வலுவாக வைப்பது எப்படி என்பதற்கான உடற்பயிற்சி குறித்த தகவல்களைப் பார்த்தால்–

முதலில் நீங்கள் தரையிலோ அல்லது படுக்கையிலோ கால் நீட்டியவாக்கில் அமர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் முழங்கால் மூட்டுக்கு பின்புறம் உங்கள் உள்ளங்கை முஷ்டி அளவுக்கு துண்டை (துணி) மடித்து வைத்துக் கொள்ளுங்கள்.

பிறகு உங்கள் முழங்கால் தசையை இறுக்கி, உங்கள் முழங்காலைக் கீழ் நோக்கி அதாவது காலுக்கு அடியில் உள்ள துண்டை அழுத்துங்கள்.

நீங்கள் துண்டை அழுத்தும் போது உங்கள் முன் தொடை தசை இறுகுவதை நீங்கள் உணர முடியும்.

இறுக்கிப் பிடித்து ஒன்றில் இருந்து பதினைந்து வரை எண்ணிக் கொண்டு பிறகு மெதுவாக இறுக்கத்தைத் தளர்த்துங்கள்.

இதே போல் தொடர்ந்து இருபது முறை காலையிலும், மாலையிலும் செய்து வாருங்கள்.

உங்கள் மூட்டுவலி மெல்ல குறைவதை நிச்சயமாக உணர முடியும்.

**டாக்டர். தி. செந்தில்குமார் - இந்தியா**



## முள்முருங்கை மருத்துவம்

முள்முருங்கை மர வகையைச் சார்ந்தது. இந்தமரத்தைவேலிஅமைப்பதற்காகவளர்க்கிறார்கள். முள்களை கொண்ட மென்மையான கட்டைகளை உடையது இந்த மரம். இதன் இலைகள் அகன்று பெரியதாக இருக்கும். ஒரு காம்பில் மூன்று இலைகள் காணப்படும். மேல் பகுதியில் ஒன்றும், இரு பக்கமும் இரண்டும் காணப்படும். இதன் பூக்கள் சிவப்பு நிறத்தில் பார்க்க அழகாக தோன்றும். இதற்கு கல்யாண முருங்கை என்ற பெயரும் உண்டு.

இது துவர்ப்பும், கசப்பும் கலந்தது. பெண்களுக்கு மாதவிலக்கு நாள்களில் கடுமையான வலி ஏற்படும். இதற்கு முள்முருங்கை இலைசாற்றை 50 மி.லீ எடுத்து, மாதவிலக்கு ஆரம்பிக்கும் ஐந்து நாள்களுக்கு முன்பிருந்து தினமும் பருகவேண்டும். வலி கட்டுப்படும். இந்த சாற்றில் 10 மி.லீ. எடுத்து, வெந்நீர் கலந்து பருகினால் கபம், இருமல் நீங்கும்.

ஒரு தேக்கரண்டி முள்முருங்கை இலை சாற்றை மோரில் கலந்து சாப்பிட்டால் சிறுநீர் கழிப்பதில் ஏற்படும் எரிச்சல் நீங்கும்.

முள் முருங்கை இலைசாற்றில் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து சாப்பிட்டால் வயிற்று பூச்சிகள் தொந்தரவு கட்டுப்படும்.

பத்து இலைகளை நறுக்கி, 50 கிராம் சிறிய வெங்காயத்தையும் சிறிதாக நறுக்கி, நல்லெண்ணெய்யில் வதக்கி பிரசவமான தாய்மார்கள் சாப்பிட்டால் தாய்ப்பால் அதிகரிக்கும்.

பெண்களுக்கு நாற்பது வயது நெருங்கும் போது இடுப்புப் பகுதி பெருத்துப்போகும். அவர்கள் கல்யாண முருங்கை கீரையை உணவில் சேர்த்து சாப்பிட்டால் இடுப்பு கொழுப்பு நீங்கி இடை மெலியும்.

முள்முருங்கை பூ கர்ப்ப நோய்களுக்கு சிறந்த மருந்து. சுவாசகாசம் என்னும் மூச்சிரைப்பு நோய் அதிகரிக்கும்போது அரிசிக்கஞ்சியில், பூண்டை வேகவைத்து அதில் 30 மி.லீ முள்முருங்கை சாறு கலந்து சாப்பிட்டால் கபம் வெளியேறி மூச்சிரைப்பு கட்டுப்படும்.

முள் முருங்கை இலையை ஆமணக்கு எண்ணெய் தடவி இளஞ்சூட்டில் வீக்கம் உள்ள இடத்தில் கட்டினால் வீக்கம் குறையும். மூட்டு வலிக்கு இலையை வதக்கி ஒத்தடம் கொடுக்கவேண்டும்.

முள்முருங்கை கீரை காய்கறி அங்காடிகளில் கிடைக்கும்.

**முள் முருங்கை இலை - 1 கட்டு**
**மிளகு - 1 தேக்கரண்டி**
**சித்தரத்தை - 10 கிராம்**
**புழுங்கல் அரிசி - 200 கிராம்**
**உப்பு - தேவைக்கு**
**எண்ணெய் - பொரிப்பதற்கு எடுத்து கொண்டு**

முள் முருங்கை இலையை நரம்புகள் நீக்கி பிரித்து வைத்துக்கொள்ளுங்கள்.

புழுங்கல் அரிசியை இரண்டு மணி நேரம் நீரில் ஊறவையுங்கள்.

மிக்சியில் மிளகு, சித்தரத்தையை கொட்டி தூளாக்கி, அத்துடன் முள் முருங்கை இலை, புழுங்கல் அரிசியை சேர்த்து சற்று பிசிறாக அரைத்துக் கொள்ளவும்.

எண்ணெய் ஊற்றி சூடாகியதும், எலுமிச்சம்பழ அளவு மாவு எடுத்து வடையாக தட்டி எண்ணெய்யில் இட்டு பொரித்தெடுக்கவும். இந்த வடை மிகவும் சுவையாக இருக்கும். குழந்தைகளுக்கு உண்டாகும் சளி, இருமலுக்கு இது ஒருவகையில் மருந்தாகவும் செயல்படும். உடல் வலியும் நீங்கும்.






# திருக்குறளின் சிறப்புகள்




தமிழில் உள்ள நூல்களிலேயே சிறப்பிடம் பெற்ற நூல் திருக்குறள். இது அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூல். மனித வாழ்வின் முக்கிய அங்கங்களாகிய அறம் அல்லது தர்மம், பொருள், இன்பம் அல்லது காமம் ஆகியவற்றைப் பற்றி விளக்கும் நூல்.

திருவள்ளுவரை நாயனார், தேவர், தெய்வப்புலவர், பெருநாவலர், பொய்யில் புலவர் என்றும் சில சிறப்புப்பெயர்களால் அழைப்பர்.

பழந்தமிழ் நூல்களில் நான்கு பெரும் பகுப்புகள் உள்ளன.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவை அடங்கிய பதினென்மேல்கணக்கு
**பதினென்கீழ்க்கணக்கு**
**ஐம்பெருங்காப்பியங்கள்**
**ஐஞ்சிறு காப்பியங்கள்**

ஆகியவை அவை. அவற்றில் பதினென்கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் வரிசையில் முப்பால் என்னும் பெயரோடு இந்நூல் விளங்குகின்றது. அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பால்களும் கொண்டமையால் முப்பால் எனப் பெயர் பெற்றது. முப்பால்களாகிய ஆகிய இவை ஒவ்வொன்றும் இயல் என்னும் பகுதிகளாக மேலும் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இயலும் சில குறிப்பிட்ட அதிகாரங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. ஒவ்வொரு அதிகாரமும் பத்துப்பாடல்களைத் தன்னுள் அடக்கியது. இப்பாடல்கள் அனைத்துமே குறள் வெண்பா என்னும் வெண்பா வகையைச் சேர்ந்தவை. இவ்வகை வெண்பாக்களால் ஆகிய அக்காலத்திய முதல் நூலும் ஒரே நூலும் இதுதான்.

குறள் வெண்பாக்களால் ஆனமையால் குறள்' என்றும் 'திருக்குறள்' என்றும் இது பெயர் பெற்றது. பாயிரம் என்னும் பகுதியுடன் முதலில் அறத்துப்பால் வருகிறது. அதிலும் முதலில் காணப்படுவது, கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரம். தொடர்ந்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், ஆகிய அதிகாரங்கள். அடுத்துவரும் இல்லறவியல் என்னும் இயலில் 25 அதிகாரங்கள் அடுத்துள்ள துறவறவியலில் 13 அதிகாரங்களுடன் முதற்பாலாகிய அறத்துப்பால் பகுதி முடிவுறுகிறது.

அடுத்து வரும் பொருட்பாலில் அரசு இயல், அமைச்சு இயல், ஒழிபு இயல் ஆகிய இயல்கள் இருக்கின்றன. அரசு இயலில் 25 அதிகாரங்கள் உள்ளன. அமைச்சு இயலில் 32 அதிகாரங்களும், ஒழிபு இயலில் 13 அதிகாரங்களும் உள்ளன. கடைசிப்பாலாகிய இன்பத்துப் பால் அல்லது காமத்துப்பாலில் இரண்டு இயல்கள் களவியலில் 7 அதிகாரங்களும், கற்பியலில் 18 அதிகாரங்களும் உள்ளன. ஆகமொத்தம் 7 இயல்கள், 133 அதிகாரங்கள், 1330 பாடல்கள். திருக்குறளை மொத்தம் 12,000 சொற்களில் வள்ளுவர் பாடியுள்ளார். ஆனால் இவற்றில் ஐம்பதுக்கும் குறைவான வட சொற்களே உள்ளன.

### திருக்குறளின் சிறப்பு

'அகரம் முதல வெழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு' என்று தமிழ் நெடுங்கணக்கின் முதல் எழுத்தாகிய அளவில் ஆரம்பித்து, 1330 ஆம் குறளாகிய,
'ஊடுதல் காமத்திற்கின்பம், அதற்கின் பம்,
கூடி முயங்கப்பெறின்' என்று தமிழ்மொழியின் கடைசி எழுத்தாகியன்னுடன் முடித்திருக்கிறார். வாழ்வியலின் எல்லா அங்கங்களையும் திருக்குறள் கூறுவதால், அதைச் சிறப்பித்துப் பல பெயர்களால் அழைப்பர் திருக்குறள், முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், பொதுமறை, பொய்யா மொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை, திருவள்ளுவம் என்ற பெயர்கள் அதற்குரியவை.

பழங்காலத்தில் இதற்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அவற்றில் புகழ் வாய்ந்ததாக விளங்குவதும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதும் பரிமேலழகர் உரைதான். தற்காலத்திலும் பலர் உரை எழுதியுள்ளனர். அவற்றில் தற்சமயம் சிறப்பாகக் கருதப்படுவது திருக்குறள் முனுசாமியின் உரை.

தனிமனிதனுக்கு உரிமையானது இன்பவாழ்வு, அதற்குத் துணையாக உள்ளது பொருளியல் வாழ்வு, அவற்றிற்கெல்லாம் அடிப்படையாக விளங்குவது அறவாழ்வு. மனதே எல்லாவற்றிற்கும் ஆதார நிலைக்கலன், மனத்துக்கண் மாசிலன் ஆதலே அனைத்து அறம், அறத்தால் வருவதே இன்பம். அறவழியில்நின்று பொருள் ஈட்டி, அதனைக்கொண்டு இன்பவாழ்வு வாழ வேண்டும். அவ்வாறு உலக மாந்தரும் இன்பமுறச் செய்யவேண்டும். பொருளியலாகிய பொதுவாழ்வுக்கும் இன்ப இயலாகிய தனிவாழ்வுக்கும் அடிப்படை அறம்தான் என்பது திருக்குறளின் மொத்தமான நோக்கு.

உலகிலேயே அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல்களில் மூன்றாம் இடத்தைத் திருக்குறள் வகிக்கிறது. இதுவரை 80 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

**இறைவன் மனிதனுக்குச் சொன்னது கீதை**
**மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்**
**மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்**



# அன்பை பொழியும் அம்மா

**அன்பை பொழியும்**
**அம்மா தெய்வம்**
**போற்றி வளர்க்கும்**
**அப்பா தெய்வம்**
**அறிவை கொட்டும்**
**குருவும் தெய்வம்**
**அம்மா அப்பா குரு**
**இம்மூவரும்**
**தெய்வம் நம் தெய்வம்**

# குரங்கு நல்ல குரங்கு



**குரங்கு நல்ல குரங்கு**
**குத்தாலத்து குரங்கு**
**மரத்தின் மீது ஏறும்**
**மலையின் உச்சி சேறும்**
**பொட்டுக்கடல பொறுக்கும்**
**பொருளையெல்லாம் எடுக்கும்**
**குட்டிக்கரணம் போடும்**
**கும்பை கண்டால் ஆடும்**
**குட்டிக்கரணம் போடும்**
**குறும்பை கண்டால் ஆடும்**
**குரங்கு நல்ல குரங்கு**
**குத்தாலத்து குரங்கு**

# சிறந்த வர்ணத்துக்கு பரிசு தரும் எண்ணம்



கீழ்வரும் ஓவியத்துக்கு பொருத்தமாக வர்ணம் தீட்டி அனுப்புங்கள் சிறந்த வர்ணம் தீட்டலுக்கு பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

**முகவரி**
**காலைக்கதிர்**
**சிறுவர் பகுதி**
**இல - 30,**
**கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்**

(ஒவ்வொரு வாரமும் உங்கள் படைப்புகளை அனுப்பி பெறுமதியான பரிசுகளை வெல்லுங்கள்.)

சிறுவர் ஆக்கங்களையும் மேலுள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள் சிறந்த ஆக்கங்களுக்கு பரிசுகளை நீங்கள் வெல்லலாம்.

# கலைக் கதிர்



## கவிக்குயில் சிவரமணி

எம் மண்ணில் விடுதலைக் கனவில் வேர்படர்த்தி விருட்சகமாய் நிற்க வேண்டியே முளைத்த விழுதுகள் சில மண்ணைத் தொடும் முன்னே பிடுங்கி எறியப்பட்டன. இப்படித் தளர்ந்து போய் மடிந்த விழுதுதான் கவிக்குயில் சிவரமணி. யாழ்ப்பாணத்திலே பிறந்த இவர் ஈழத்துப் பெண்கவிகளுள் ஒருவர். மிகக் குறுகிய காலத்திலே தன்னை ஒரு கவிஞராக நிலை நிறுத்தியவர். சிறிய வயதிலே புகழ் பூக்க வளர்ந்த அந்தச் செடி தனது மலர்ச்சியை முழுமையாக உணரும் முன்னே தன்னை வேரோடு பிடுங்கிக் கொண்ட கவிதைச் செடியவர்.

**நான்**
**நாளை தோன்றுகின்ற**
**சூரியன் பற்றி**
**எண்ண முடியாது**
**இரவு எனக்கு**
**முக்கியமானது**
**நேற்று போல்**
**மீண்டும் ஒரு நண்பன்**
**தொலைந்து போகக் கூடிய**
**இந்த இருட்டு**
**எனக்கு மிகவும்**
**பெறுமதியானது**

மேற்கூறிய கவிதை தனது 23வது வயதில் தற்கொலை செய்து கொண்ட ஈழத்துக் கவிஞர் சிவரமணியுடையது. மத்திய தர வீடுகளிலிருந்து பொது வெளிக்குள் நுழையும் பெண்கள் உள்ளும் புறமுமாக சந்திக்க வேண்டிய பல்வேறு பிரச்சினைகளால் அவர் மனரீதியான அழுத்தங்களை அதிகமாகவே பெற்றாரென்றும் இதனாலே இவர் தற்கொலை செய்து கொண்டாரென எண்ணத் தோன்றுகிறது. தன் கவிதை யாரிடமிருந்தாலும் அதை அழித்து விடும்படியும் கைக்கெட்டிய வரை எனது அடையாளங்கள் யாவற்றையும் அழித்து விட்டேன் என்ற கடிதத்தோடு 1991 மே 05 அன்று தன்னிடமிருந்த கவிதைகளை அழித்துத் தானும் உடன் கட்டை ஏறிக் கொண்டார்.

**ஆடையின் மடிப்புக்கள்**
**அழகாக இல்லை என்பதற்காக**
**கண்ணீர் விட்ட நாட்களை**
**மறப்போம்**

**சரிகைச் சேலைக்கும்**
**கண்ணிறைந்த காதலர்க்கும்**
**காத்திருந்த காலங்கள்!**



**அந்த வெட்கம் கெட்ட**
**காலத்தின் சுவடுகளை**
**அழித்தே விடுவோம்**

**சுதந்திர கீதம் இசைத்துக்**
**களிப்போம் தோழிகளே!**

- என்ற விடுதலைக் கனவையும், போர்க் குணத்தையும் மட்டுமல்ல, இச் சிந்தனைக்குத் தடையாக விளங்கும் பெண் அழகு சாதனங்களையும், ஆசைகளையும் கூட விசிறி எறிந்த போர்க்குணத்தாளின் வரிகள் இவை. பெண் இப்படியிருந்தாள், பெண்தான் இப்படியிருப்பாள், பெண்ணென்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற கருத்தை ஆழமாகக் கொண்டே எம் மனித சமூக அமைப்பு வேரூன்றியிருக்கின்றது. புராண, இதிகாச காலம் தொட்டு இன்று வரை புற அழகே முக்கியம் பெற்றிருக்கின்றது. இன்று தமிழ்ப் பெண்களிடம் ஆழமான உணர்வுச் செறிவும், திண்ணமான தேடுதலையும், தரமான மொழியாளுகைகளையும் காணக்கூடியதாக இருந்தாலும், உலகின் பெண் கவிஞர்களின் நிலையும் சித்தரிப்புக்களும், மாறுபால் நிலைப்பட்டதாக அமைந்து விடுவதைக் காணக் கூடியதாகயிருக்கின்றது.

சிவரமணியின் தரமான எழுத்தாளுகையும், பெண்ணியம் சார்ந்த கவிதைகளும், நம்பிக்கையும், சிந்தனைக் கிளர்ச்சியும் கொண்டதாக அமைந்துள்ளது. சிவரமணி பெண்ணிய இயக்கங்களோடு இணைந்து வீரியமாக செயற்பட்டவர். பல கவியரங்குகளைக் கண்டவர். இவர் எண்பதுகளில் எழுத்துலகில் நுழைந்தாலும் அவருடைய பாடுபொருளும், வெளிப்பாடுகளும் ஒரு மாறுகாலகட்டத்தைக் புலப்படுத்துகின்றன. மட்டக்களப்புப் பேராசிரியை சித்திரலேகா. மௌனகுருவினால் தொகுக்கப்பட்ட 'சொல்லப்படாத சேதிகள்' என்ற ஈழப் பெண் கவிஞர்களின் கவிதை நூல் மூலம் எம்மிடம் கொடுக்கப்பட்டிருக்கும் சிவரமணியின் கவிதைகள் மிகவும் குறைந்ததே. சிவரமணி அழித்தவையும், அழிக்கச் சொன்னவையும் போக, சிவரமணி தொகுக்கவும் வாசிக்கவும் கொடுத்துப் போனவைகளில் சில கைகளில் எஞ்சிக்கிடக்கும் இந்த ஈழத்துக் குயிலின் கவிதைகள் இவை மட்டுமே.

எமது சமூகத்தில் பெண்களின் உரிமை, கால அடிப்படையில் பெரிதும் வேறுபடுகிறது. முப்பது வருடங்களாய்ப் போருக்கு முகம் கொடுத்து இறந்து போன பெண் குவியல்களுள் தொட்டெடுத்த ஒருத்தியாய்த்தான் சிவரமணி இருக்க வேண்டும். போர்க்களச் சூழலில் தன்னை இணைத்துக் கொண்டு மரணத்தையும், வாழ்வையும் பற்றிய எதிர்பார்ப்புக்களையும் அருகே வைத்துக் கொண்டு எழுதப்பட்ட கவிதைகளாகவே சிவரமணியின் கவிதைகள் பார்க்கப்படுகின்றன. ஈழத்து எழுத்துலக வரலாற்றில் சிவரமணி பேசப்பட வேண்டிய பெண் எழுத்தாளர் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்தவகையில் இக்காலத்துப் பெண்கள் பிரவேசிக்க வேண்டும். பெண் எழுத்தாளர்களின் இடைவெளி நீண்டு கொண்டிருக்கும் இக்காலத்தில் இவ் இடைவெளிகளைப் பூரணப்படுத்த உணர்வுப் பூர்வமாகவும், அறிவுப் பூர்வமாகவும், இன்றைய தேவைகள் என்ன என்பதனை முன்நிறுத்தியும் எழுதுங்கள் பெண்களே! உங்களையும் இவ்வுலகம் திரும்பிப் பார்க்கும்.

இன்று சிவரமணியிருந்திருந்தால் மிகப்பெரிய கவிஞராக இருந்திருப்பார். இன்றும் சமூகத்தில் பெண்களுக்கெதிராக நடக்கக் கூடிய பிரச்சினைகளின் கோரப் பிடியில் சிக்கிக் கொண்டு பல பெண்கள் வாழ்கின்றனர். அவர்கள் தற்கொலை என்ற முடிவினைக் கைவிட்டு, புதிதாக எதையேனும் சாதிக்க வேண்டும் என்ற திடமான நோக்கில் செயற்பட வேண்டும்.

சிவரமணியின் தற்கொலையும் ஏதோ ஒரு வகையில் சமூகத்தினின்று தம்மை மீட்டுக் கொள்ள எத்தனித்த ஒரு முயற்சியாகவே காட்சியளிக்கின்றது. சிவரமணி என்ற கவிஞர் சமூகத்திற்குக் கூற விழைந்த செய்தியாக சமூக முரண்பாடுகளினின்றும் எம்மைக் காத்துக் கொள்வோம். அதிலும் குறிப்பாக பெண்கள் என்பதே அவரது கவிதைகளின் ஒலிப்பு. நமது சிந்தனைக்கும் நடைமுறை வாழ்க்கைக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் முகமாகவே தற்கொலையில் இறங்கினார். துக்கம், விரக்தி, கோபம் நிறைந்த கவிக்குயில் மீதமாய் தந்து சென்ற காலத்துடன் ஒத்துப் போகும் கோர்த்தெடுத்த கவிதைகளின் மூலம் அவரை நினைவு கூர்ந்து கௌரவிப்போம்.

**- க.மங்களேஸ்வரி -**

## குழந்தைகள்



**நான் உரத்து சத்தமிடுகிறேன்...!**
**ஓலமிடுகிறேன்...!**
**ஒப்பாரியும் வைக்கிறேன்...!**

**பிரசவ வலியின் உச்சத்தில்...**
**வார்த்தைகள் வசமாகிட பிரசவிக்கின்றேன்..**
**அழகிய குழந்தைகளை...!**

**முடிந்ததும்...**

**அசையாத மயக்கம்...**
**ஆத்மார்த்தமான திருப்தி..**
**ஆசுவாசப்படும் மூச்சும்..**
**அரவமற்ற அமைதியில்..!**

**மெல்ல தட்டி எழுப்பப்படுகின்றேன்...!**

**ஆஹா...!**
**விழிகள் அகல திறந்தும் ...**
**பின்னர்..**
**மெல்ல பனித்தும் போகின்றன..!**

**ஒவ்வொன்றும் அழகழகான..**
**அர்த்தம் பொதிந்த குழந்தைகள்...!**

**அள்ளி.. அள்ளி.. கொஞ்சுகிறேன்..**
**ஆனந்தத்தில் ஆர்ப்பரிக்கும் மனதிடம்...கேட்கிறேன்...**
**இவை... எல்லாம்**
**எனக்கானவையா என்றும்**
**என்னால் எப்படி இது சாத்தியமானது... என்றும்...!**

**ஆம்.. அவர்கள் அப்படியே தான் சொல்லியிருந்தார்கள்...!**

**உன்னால் ஒன்றும் முடியாது...**
**நீ.. கெட்டிக்காரியில்லை...**
**நீ படிக்கவே போவதில்லை...**
**உனக்கு வாழ்வதற்கான அழக்கில்லை என்று கூட..!**

**பாவம் அவர்கள்...**
**சுயநினைவில்லாமல் தான்**
**இப்படி சொல்லியிருக்கக் கூடும்...!**
**அவர்கள்...**
**வெளுத்ததையெல்லாம்...**
**பால்...என்று நினைக்கும் வெள்ளந்திகள் போலும் ...!**

**சொன்னவர்களுக்கு சொல்கிறேன்...**
**யாரை போலவோ நீங்கள் வாழ்ந்து விட்டுப் போகலாம்...**
**அவர்களை ஆராய்ச்சி செய்தே ஆயுளையும் கழிக்கலாம்..**
**போலி புன்னகையில்..**
**பேச்சிழந்தும் நிற்கலாம் ...**
**தங்கள் பெயர்..பெருமை அத்தனையும்**
**இழந்தும் வாழலாம்...!**

**ஆனால்...**
**காலம் உணர்த்துகையில்**
**உயிர் அன்பைதேடி...**
**மறுபடியும்..வந்துவிடாதீர்கள் ...!**

**பேனை என்னும் வாளால் வீழ்த்திவிடுவேன்...**
**பாவம்.. பழி எல்லாம் பாராமல்...!**

**இப்போதெல்லாம்...**
**என் புதிய குழந்தைகளை அணைத்துக்கொள்ளவும்**

**ஆசையாக பேசவும்..**
**உச்சி முகரவும்..**
**உணர்ச்சி பொங்கி..**
**கொஞ்சிப் பேசவும்...**
**மாத்திரமே நேரமிருக்கிறது...!**

**அவர்கள் ஒருநாளில்**
**புரிந்து கொள்வார்கள்...!**

**எவ்வளவு முற்போக்கானவள் என்பதையும்...**
**எல்லையற்ற பொறுமையானவள் என்பதையும்...!**

**அத்தனை அவமதிப்புக்களுக்கும் உரியவரின்...**
**பிறப்பிலோ...வளர்ப்பிலோ...**
**தான் தவறுள்ளது என்பதையும் ...!**

**என் குழந்தைகளைப் பார்த்து..**
**எல்லோரும் பாராட்டுகிறார்கள்..**
**ஒரு சிலர்...**
**குறை..நிறையும்... பேசுகிறார்கள்..**
**எல்லாம் காதுகளில்**
**முழுமையாக கேட்கிறது...!**

**இருந்தும்...**

**என் மொத்த வலிகளையும்**
**மறக்கச் செய்யும்**
**வாழ்க்கைப் பயண**
**வழிகாட்டிகளாய்...**

**என் உயிர் கவிக் குழந்தைகள்..!!!**

**- வசுமதி நிர்மல் -**




# கோழி நோய்கள்




திருமதி .G.S.பிருந்தா
NVQ 5&6
JCIA

விலங்குகளுக்கு ஏற்படும் அசாதாரன நிலையே நோய் எனப்படும். ஆகவே நோய் நிலைமைகளை இனங்காண்பதற்கு விலங்குகளை அவதானிப்பது அவசியமாகும். விலங்குகளுக்கு நோய் ஏற்படுவதால் பண்ணையின் உற்பத்தி குறைதல், இனப்பெருக்கம் தடைப்படல், விலங்குகள் இறத்தல், பண்ணையாளர்கள் நட்டமடைதல் போன்ற பாதிப்புக்கள் ஏற்படலாம்.

சிறந்த ஆரோக்கியத்தைக் கொண்ட விலங்குகள் இயல்பான தன்மைகளைக் கொண்டிருப்பதுடன் நோயுற்ற விலங்குகள் இத்தன்மைகளிலிருந்து மாற்றம் கொண்டவையாக காணப்படும்.

கோழிகளுக்கு நோய்கள் ஏற்படுவதை கட்டுப்படுத்த கீழ் காணும் செயற்பாடுகளை பின்பற்ற வேண்டும்.

* பண்ணைகளைச் சுகாதாரமாக பேணவேண்டும்
* உரிய நேரத்தில் தடுப்பு மருந்துகளை கொடுத்தல்
* நோய்வாய்ப்பட்ட கோழிகளுக்கு சிகிச்சை அளித்தல்
* நோய்வாய்ப்பட்ட கோழிகளை அகற்றுதல்

கோழிக் குஞ்சுகளுக்கு தடுப்பு மருந்து வழங்குதல் கட்டாயமானது.

**கோழிக் குஞ்சுகளுக்கு தடுப்பு மருந்து வழங்கப்படும் திட்டம்**

| வழங்கப்படும் வயது | தடுப்பு மருந்து |
|---|---|
| 1 ஆம் நாள் | மரெக்ஸ் ,கம்போரா மருந்து |
| 3 ஆம் நாள் | 1 ஆம் முறை ரனிக்கற் மருந்து |
| 4 ஆம் நாள் | 1 ஆம் முறை புழு மருந்து |
| 6 ஆம் வாரம் | 1 ஆம் முறை கோழி அம்மை மருந்து |
| 13 ஆம் வாரம் | 2 ஆம் முறை ரனிக்கற் மருந்து |
| 14 ஆம் வாரம் | 2 ஆம் முறை புழு மருந்து |
| 18 ஆம் வாரம் | 2 ஆம் முறை கோழி அம்மை மருந்து |

**கோழிகளுக்கு ஏற்படும் நோய்கள்**

**1.தொற்று நோய்கள்**

* பற்றீரியா நோய் - புள்ளோரம் (salmonellosis)
* வைரசு நோய் - கம்போறா
  - கோழி அம்மை
  - மரெக்ஸ்
  - ரனிக்கற்
* புரட்டசோவன் நோய் - கொக்சிடியோசிஸ்
* பூச்சி நோய்கள் - கொழுக்கிப்புழு
  - வட்டப்புழு

2.தொற்றாத நோய்கள் - கால் முடமாதல் (Curly toe paralysis)
- தன்னினமுன்னல் (canabolism)

| நோய் | நோய் அறிகுறி | கட்டுப்பாடு | சிகிச்சை |
|---|---|---|---|
| கொக்சிடியோசிஸ் | இரத்தம் கலந்த கழிச்சல், வயிற்றோட்டம் , உணவில்விருப்பமின்மை, உற்பத்தி குறைவடைதல் , குஞ்சுகள் இறத்தல் | நோயுற்ற கோழிகளை அகற்றுதல் , மனையையும் உபகரணங்களையும் சுத்தமாக பேணுதல் | கொக்சிடியோசிஸ்ரற் எனும் மருந்தை வழங்குதல் , வைத்தியரின் ஆலோசனைப்படி சிகிச்சை அளித்தல் |
| புள்ளோரம் | கழிவறையைச் சுற்றி வெள்ளிறக் கழிவுகள் ஒட்டிக் காணப்படும் , கோழிகள் சோர்வாகக் காணப்படும் , சுவாசிக்க சிரமப்படும் உற்பத்தி குறைவடைதல் | அடை வைப்பதற்கு நோயற்ற முட்டைகளை தெரிவு செய்தல் அடைப்பொறியை தொற்று நீக்கல் | கால்நடை வைத்தியரின் ஆலோசனைப்படி சிகிச்சை அளித்தல் |

| | | | |
|---|---|---|---|
| கோழியம்மை | பூக்கள் ,தலை, தாடை,காதுச்சோணை ஆகிய பகுதிகளில் சிறிய கொப்பளங்கள் ஏற்படும். உணவில் விருப்பமின்மை சோர்வாக இருக்கும் | முறையாக தடுப்பூசி வழங்குதல். | நோய் ஏற்பட்ட பின்னர் சிகிச்சை இல்லை |
| கம்போறா | நிணநீர் தொகுதி சார்ந்த நோய் ஆகும் , கழிவறையைச் சுற்றி ஈரமாகக் காணப்படும் , உடல் வெப்பநிலை முதலில் அதிகரித்து பின்னர் குறைவடையும் , திடீர் இறப்பு ஏற்படும் | முறையாக தடுப்பூசி வழங்குதல். பண்ணை சுகாதாரத்தை பேணல் | நோய் ஏற்பட்ட பின்னர் சிகிச்சை இல்லை |
| மரெக்ஸ் | நரம்புத்தொகுதி பலவீனமடையும் , இறகுகள் குழம்பிய நிலையில் காணப்படும் , கால்கள் சோர்ந்த நிலையில் காணப்படும் , 15-50% இறப்பு ஏற்படும் | நோயுற்ற கோழிகளை அகற்றுதல் , 1ஆம் நாள் முறையாக தடுப்பூசி வழங்குதல். | நோய் ஏற்பட்ட பின்னர் சிகிச்சை இல்லை |
| ரனிக்கற் | உடல் வெப்பநிலை உயரும் பச்சை கழிச்சல் கழுத்தை கீழாக தொங்கப்போடல் புரண்டு படுத்தவாறு கால்களை அடிக்கும் 90-100% இறப்பு ஏற்படும் | முறையாக தடுப்பூசி வழங்குதல். | நோய் ஏற்பட்ட பின்னர் சிகிச்சை இல்லை |

**புழு நோய்**

**நோய் அறிகுறிகள் -**

* குஞ்சுகளின் வளர்ச்சி மந்தமடையும்;
* கோழிகள் சோர்வாக காணப்படும்
* இறகுகளை சிலிர்த்தவாறு காணப்படும்
* பூஜி தாடை ஆகியன நிறம் மங்குதல்
* முட்டையிடுதல் குறைவடையும்
* மலத்துடன் குருதி கலந்து காணப்படும்

**சிகிச்சையும் கட்டுப்பாடும்**

* 2 - 3 மாதங்களுக்கு ஒரு தடவை புழு மருந்து கொடுத்தல்
* கனகூழத்தை உலர்வாகவும் சுத்தமாகவும் பேணுதல்
* சுத்தமான சமநிலை உணவை வழங்குதல்

# பஞ்ச காலத்தை எதிர்கொள்ள அக்கறையுடன் இருப்போம்

பஞ்சகாலத்தை எதிர்கொள்ள பரவலாக அனைத்து மக்களும் தத்தமது வீட்டுத் தோட்டங்களை தயார்ப்படுத்த முன் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயமே.

எமது மக்களை பொறுத்த வரையில் ஒருவர் ஒரு விடயத்தை செய்தால் அதை அப்படியே கண்மூடி பின்பற்றுவதை அனைத்து விடயங்களிலும் சாதாரணமாக காண முடியும்.

வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கைக்காக தயாராகியுள்ள எம் சமூகம் இங்கேயும் ஒரு தவறு விடுவதை காண முடிகிறது. அதாவது வீட்டுத் தோட்டங்களில் பயிர்ச்செய்கை செய்வதற்காக முன் வந்துள்ள அனேகமானவர்கள் மரக்கறி வகைகளை நடுவதை தீர்மானித்து செயல்படுவதை அவதானிக்க முடிகிறது.

இப்படியானவர்கள் மறக்கறி என்பது எமது வயிற்றுப் பசியை போக்கும் அடிப்படை உணவல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால் மறக்கறி நடுகை செய்யாதீர்கள் என்று சொல்ல வரவில்லை. அனைவருமே மரக்கறி நடுவதில் பயனில்லை என்பதே உண்மை.

எந்த ஒரு பொருளும் தேவைக்கு அதிகமாகி விட்டால் அப்பொருளை கஷ்டப்பட்டுதான் உற்பத்தி செய்திருப்பினும்; தேவைக்கு அதிகமானதை வீசுவதை தவிர வேறு வழியில்லை. குறித்தஒருமரக்கறியின் விலை அதிகரித்தால் அனைவரும் அந்த மரக்கறியை நடுவதும், பின்னர் குறித்த பொருளின் விளைச்சல் அதிகரிப்பால் பிரயோசனமின்றி மலிந்த விலையில் விற்பதும், எஞ்சியவைகளை குழி தோண்டிப் புதைப்பதும் சர்வ சாதாரணமாக காண முடிகிறது. இந்நிலைக்கு காரணம் தேவையை உணர்வதைவிட பிறர் செயலில் கவரப்படுவதேயாகும்.

பஞ்ச நிலை ஏற்படும் பட்சத்தில் எமக்கு அவசியமாகும் பல்வகையான உணவுகளும் விளைச்சலில் இருக்க வேண்டும். அப்போதுதான் பண்டமாற்று முறைகளில் எம் தேவைகளை எமக்கு ஓரளவுக்கேனும் சமாளித்துக் கொள்ள முடியுமான வாய்ப்பு ஏற்படும்.

பொதுவாக நகர்ப் பகுதிகளில் வாழுக் கூடியவர்களுக்க வீட்டுத் தோட்டங்கள் மிகக் குறைவு. அவர்கள் தங்களது வீடுகளில் ஓரமாக கிடைக்கும் சிறிய பகுதிகளையும், பெல்கனிகளையுமே பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்துவர். இது போன்றவர்கள் மறக்கறி போன்ற சிறு பயிர் வகைகளை தெரிவு செய்வதை தவிர வேறு வழியில்லை.

ஆனால் கிராமங்களில் வாழ்வோர் தமது தேவை குறித்து மாத்திரம் சிந்திக்காமல் பொது நலத்துடன் பயிர்ச்செய்கைகளை முறைப்படுத்த வேண்டிய அவசியமுள்ளது. இது அவர்களது பொறுப்புமாகும்.




# காடுகள்

மரங்களின் அடர்ந்த நிலப்பகுதி காடு என்று அழைக்கப்படும். புவிமேற்பரப்பின் 9.4%அல்லது மொத்தநிலப்பரப்பின் 30%காடுகளினால் சூழப்பட்டுள்ளது. முற்காலத்தில் காடுகள் நிலப்பரப்பில் 50%வரை மூடியிருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. பூமியின் உயிர்த்தொகுதியில் 80% ஐ காடுகள் கொண்டிருக்கின்றன.

உலகளாவிய ரீதியில் காடுகளை ஏழு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்.

**1. அயனமழைக்காடுகள்:-**

தென் அமெரிக்கா, மத்தியஅமெரிக்கா,ஆசியா,ஆபிரிக்கா,பசுபிக் சமுத்திர தீவுகள்

**2. இடைவெப்பவலயக்காடுகள் :-**

வடஅமெரிக்காவின் கிழக்குப்பகுதி, ஐரோப்பாவின் வடக்குப்பகுதி,மத்தியபகுதி, ஆசியாவின் கிழக்குப்பகுதி (கொரியா, ஜப்பான்,கிழக்குசீனா) ஆஸ்திரேலியாவின் கிழக்கு மற்றும் தென்கரையோரப்பகுதி, தென் அமெரிக்காவின் மேற்கு கரையோரத்தை அண்டியபகுதி

**3. மத்தியத்தரைக்காடுகள் :-**

மத்தியத்தரைக்கடலை சூழ்ந்த ஐரோப்பாவின் தென் பகுதி மற்றும் ஆபிரிக்காவின் வடபகுதி, வடஅமெரிக்காவின் கலிபோர்னியாக்கரையோரம், தென் அமெரிக்காவின் மேற்குக்கரையோரம்,தென்ஆபிரிக்காவின் கேப்டவுன் பகுதி ஆஸ்திரேலியாவின் பேர்க் அட்லான்டா சேர்ந்த பகுதி

**4.தைக்காகாடுகள்:-**

கனடாவின் வடக்கு கரையோரம் ,வடஐரோப்பாவில் இருந்து சைபீரிஸ் வரையான பகுதி

**5.துந்திராக்காடு**


i. ஆட்டிக் துந்நிரா :- வடஅமரிக்கா,ஐரோப்பா,ஆசியா,கிறின்லாந்தின் வட துருவத்தை அண்டியபகுதி

ii. அல்ப்பைன் துந்திரா :- எவரஸ்ட், அல்ப்ஸ்மலை சிகரங்கள்

**6. புல்நிலங்களும்,சவன்னாக்களும்**

**7. பாலைவனங்கள்**

## காட்டின் நன்மைகள்



1. காடுகள் அதிகளவு உயிர்ப்பல்வகைமை கொண்டதாக காணப்படுவதுடன் வாழ்வதற்கு உகந்த சூழலை உருவாக்குவதில் காடு மிகமுக்கியப் பங்கு வகிக்கின்றது.

2.உலகில் உள்ள கால்நடைகள் தமது தீவனத்திற்கு காடுகளையே நம்பியுள்ளன.

3. பெரும்பாலான தொழிற்சாலைகள் காடுகளையே நம்பியுள்ளன.

i. காகிதம் - மூங்கில்,தைலமரம்,குடைவேல்
ii. ரேயான் - தைலமரம்
iii. பட்டைமரம் - வாட்டில் மரம்
iv. மரப்பொம்மைகள் - மஞ்சக்கடம்பு, செஞ்சந்தனம்
v. தீக்குச்சி - அயிலை, முள், இலவூ
vi. பஞ்சு - இலவம் மரம்
vii. வாசனை எண்ணெய் - சந்தனமரம்
viii. தைல எண்ணெய் சோப்பு - வேம்பு,புங்கம், இலுப்பை

3.காபனீரொட்சைட்டின் அளவை குறைத்து ஒட்சிசனின் அளவை அதிகரிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

4.ஆவியுயிர்ப்புத் தொழிற்பாட்டின் மூலம் வளிமண்டலத்தில் நீராவியின் செறிவை அதிகரிக்கச் செய்வதுடன்,உயர்ந்தகாடுகள் காற்றுக்களை தடுத்து மழை வீழ்ச்சியை கொடுக்கின்றன.

5.காடுகள் எரிபொருள்களும், தளவாடங்களுக்குரிய மூலப்பெருள்களுக்காகவும் பயன்படுவதுடன் மருந்துகளுக்காகவும் பயன்படுகின்றன.

6.தாவரப்போர்வை மிகுந்த பகுதிகளில் காற்றின் வேகம் கட்டுப்படுத்தப்பட்டதாகவும் காணப்படும். அத்துடன் புயற் காற்றுக்கள் விருத்திபெறுவதும் தாவரப் போர்வையினால் கட்டுப்படுத்தப்படும்.

7.காடுகள் மண்ணரிப்பு, மண் வறட்சி,மண்சரிவு போன்றவற்றை குறைவடையச் செய்து மண்ணை பாதுகாக்கின்றது.

8.மழைநீர் பெருமளவு கழுவு நீரோட்டமாக செல்வதனைப் பாதுகாத்து தரை கீழே பெசிவுநீராக செல்வதற்கு தாவரங்கள் துணைபுரிகின்றன.

9.நதிகளுக்கருகில் மரங்கள் காணப்படுவதனால் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதுடன் நீரானது வேகமாக பாய்ந்து நதிக்கரையோரத்தை அரிப்புக்குள்ளாகாது பாதுகாக்கின்றது.

## காடழிப்பிற்கான காரணங்கள்

1.இன்றைய உலகில் சனத்தொகை அதிகரிப்பிற்கு ஏற்ப அவர்களின் தேவைகளும் அதிகரிக்கின்றன. அதனால் காடுகள் அழிக்கப்பட்டு குடியிருப்பு நிலங்களாக மாற்றப்படுகின்றன. அதுமட்டுமன்றி அதற்குரிய போக்குவரத்து பாதைகளை அமைப்பதற்காக காடுகளை ஊடறுத்துச் செல்லக்கூடிய வீதிகள் அமைக்கப்படுகின்ற போது அருகாமையில் உள்ள காடுகள் அழிக்கப்படுகின்றன.

2.உணவுற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவையும், வர்த்தக விருத்தியும் ஏற்பட்ட காரணத்தினால் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை பெருமளவில் அதிக நிலப்பரப்பில் மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. இறப்பர்,தேயிலை,கோப்பி எண்ணெய்த் தாவரங்கள் முதலியவற்றால் காடு நிலப்பரப்புக்கள் குறைவடைகின்றன.

3.மரப்பலகைகள், மரக்குற்றிகள், மரக்கூழ், கடதாசி போன்ற காட்டு உற்பத்திகளின் அளவு அதிகரிப்பதனால் காடுகள் அழிக்கப்படுவதுடன் பெருமளவில் வைரமான மரங்களான முதிரை,தேக்கு,பாலை முதலிய பலகைகள்,தளபாடங்கள் போன்றவற்றுக்காக காடுகள் அழிக்கப்படுகின்றன.

4.இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ ஏற்படுகின்ற காட்டுத்தீயினால் காடுகள் அழிவடைகின்றன.

5.இரத்தினக்கல் அகழ்வு,காரிய அகழ்வு, இரும்பு அகழ்வு முதலிய நடவடிக்கைகளினாலும் காடுகள் அழிக்கப்படுகின்றன.

6.விறகுகளை எடுத்தல், இலாபமீட்டும் நோக்கில் சட்டவிரோதமான முறையில் மரங்களை எடுத்தல் போன்றவற்றினாலும் காடுகள் அழிக்கப்படுகின்றன.

7.யுத்த நடவடிக்கையினாலும் பெருமளவிலான காடுகள் அழிக்கப்படுகின்றன.

8.மின்சார நடவடிக்கையினாலும் காடுகள் அழிக்கப்படுகின்றன.

## காடழிப்பினால் ஏற்படும் விளைவுகள்

1.பிரதேசங்களில் மழைவீழ்ச்சி நீடிப்பதும் குறைவடைவதும் காடுகளிலேயே தங்கியுள்ளது.

2.தாவரங்கள் நிலப்பரப்பில் ஒரு போர்வையாக காணப்படுவதனால் மழை வீழ்ச்சியானது நேரடியாக நிலத்தில் விழுவதனை தடுக்கிறது. அத்துடன் தாவரவேர்கள் தமது எல்லைக்குட்பட்ட பகுதியில் மண் அரிக்கப்படுவதில் இருந்து பாதுகாக்கின்றது.

3.புவிவெப்பமடைவதில் பச்சைவீட்டுவாயுக்கள் முக்கியம் பெறுகின்றன. பச்சைவீட்டு வாயுக்களில் காபனீரொட்சைட்டு வாயு மிக முக்கியமானது. காடுகள் அழிக்கப்படுகின்ற போது காபனீரொட்சைட்டை உறிஞ்சும் செயற்பாடு குறைவடைந்து வளிமண்டல சமநிலை பாதிப்படைந்து புவிவெப்பம் அதிகரிக்கும்.

4.காடுகள் அழிக்கப்படும் பிரதேசத்தில் நேரடியாக ஆவியாக்கம் இடம்பெறுவதனால் குறிப்பிட்ட பிரதேசத்தில் வறட்சி நிலைமை உருவாகும்.

5.உற்பத்தியாலரான தாவரங்கள் அழிவடைவதனால் அதனை தங்கியுள்ள விலங்குகள் அழிவடைந்து உயிர்ப்பல்வகைமை பாதிப்படைகின்றது.

6.மண்ணின் ஈரத்தன்மை குறைவடைதல்.

7.காற்றின் வேகம் அதிகரித்தல்.

8.வெள்ளப் பெருக்கு ஏற்படல்.

## காட்டுவளத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகள்

1.மழைக்காடுகளைபேணிப் பாதுகாப்பதற்கான கொள்கைகள்,சட்டங்கள்,முதலான நடைமுறைச்செயற்பாடுகளை சரியான முறையில் முன்வைக்க வேண்டும்.

2.காடுகளின் பயன்பாடு,அவற்றின் முக்கியத்துவம் என்பவற்றைம க்கள் மத்தியில் எடுத்துரைப்பதுடன் காட்டுவளங்களின் பரப்பளவு குறைவடைகின்ற போது எதிர்நோக்கும் பிரச்சினைகளை தெளிவாக எடுத்துரைப்பதுடன் கருத்தரங்கு மற்றும் பல் ஊடகங்களின் துணையுடன் அவற்றை மக்கள் விளங்கிக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்துதல்.

3.மீள்காடாக்கம் செய்வதன் மூலம் காட்டுவளத்தை அழிவிலிருந்து ஓரளவு மீட்கக்கூடியதாயிருக்கும்.

4.வறியநாடுகளில் பெரும்பாலும் விறகுகளையே எரிபொருளாகப் பயன்படுத்துகின்றனர். இதனைத் தவிர்ப்பதற்காக விறகுக்கு பதிலாக வேறு சூழலுக்கு சார்பான எரிபொருளை பயன்படுத்துவதன் மூலம் விறகுக்காக அழிக்கப்படும் காடுகளை பாதுகாக்க முடியும்.

5.வறிய நாடுகளில் தெழில்வாய்ப்பின்மையால் வருமானத்திற்காக சட்டவிரோதமான முறையில் மரங்களை எடுத்தல்,விறகுசேகரித்தல் முதலிய தொழில்களில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கு தொழில்வாய்ப்பினை வழங்குவதன் மூலம் இவ்வாறு அழிக்கப்படும் காடுகளை பாதுகாக்க முடியும்.

6.சூழலின் தாங்குதிறனை தாண்டக் கூடிய வகையில் மந்தைகள் மேய்ப்பதனை தடைசெய்தல் வேண்டும்.

7.காட்டுத்தீ பரவுவதனை முறையாக செய்மதிகள் மூலம் கண்காணித்து அதனை மிகவேகமாகவும், காடுகளுக்கு அதிக சேதத்தை ஏற்படுத்தாத வண்ணமும் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

8.சனத்தொகை அதிகரிப்பினால் ஏற்படுகின்ற காடழிப்பை தடுப்பதற்கு அரசினால் முறையாக திட்டமிடப்பட் குடியேற்ற திட்டங்களை காடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அமைத்தல் வேண்டும்.

9.கரையோரகண்டல் தாவரங்களை பாதுகாத்தல்.

# தீபாவளிப் பரிசு….

நேரம் மதியம் 12 மணியைத் தாண்டிக் கொண்டிருந்தது. வெய்யில் பெரிதாக இருக்கவில்லை. மந்தமாகவே இருந்தது. மழைக்காலமாகியபடியாலும் இரண்டு நாள்களாக அடித்துப் பெய்த மழை இன்றுதான் கொஞ்சம் விட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தது. நிலாவெளி நகரம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. ஹரீம், ஹாஜியாரின் சாப்பாட்டுக் கடையிலிருந்து இலங்கை வானொலி, தென்றல் அலைவரிசையில் கலிஸ்ரா லூக்கஸ்ஸின் கவர்ச்சிக் குரலில் 'சித்திரகானம்' ஒலி பரப்பாகிக் கொண்டிருந்தது. வண்டிக்காரன் மகள் திரைப்படத்திலிருந்து வாணிஜெயராம், S.P.B யும் மேடையில் ஆடிடும் மெல்லிய பூங்காற்று' என்று டூயட் பாடிக் கொண்டிருந்தனர். 8ம் கட்டை நகரில் பிரதான வீதியோரம் அந்த மதவோரம் அமர்ந்திருந்தார் சதாசிவத்தார். 'என்ர முருகாமணியும் பன்னிரண்டு தாண்டிட்டுது. இன்னும் ஒருவேலை கூடக் கிடைக்கல்ல... பிள்ளைகள் பாவம். சேத்து வைச்ச காசோட இண்டைக்கும் கொஞ்ச வேலை செய்துட்ட இரண்டு பேருக்கும் உடுப்பு எடுத்துடலாம். இவள் வாணியும் காளிகோயில் போக வேணும் என்றவள். நாளைக்கு காப்பு எடுக்கிற நாளுமல்லோ. ஆண்டவரே இண்டைக்கு நீதான் கண் திறக்க வேணும்' முருகனையும் ஆண்டவரையும் இன்னும் என்னென்ன தெய்வங்கள் உண்டோ யாவற்றையும் கும்பிட்டபடியே கவலை தோய்ந்த முகத்தோடு அந்த சீமெந்துக் கட்டிலில் சாய்ந்து அமர்ந்தார் சதாசிவத்தார்.



சுமார் 65 வயது மதிக்கத்தக்க உருவம் அவரது. வைரம் பாய்ந்த உடம்பும் உழைத்து இரும்பாகிப் போன கரங்களும் தீர்க்கமான பார்வையும் தளர் வில்லாத நடையும் கொண்டவர் அவர். விவசாயமே பிரதான தொழிலாகக் கொண்டு யானை கட்டிப் போரடிச்சு மொத்த திருகோணமலைக்குமே சோறுபோட்ட வீர மறவர்கள் வாழ்ந்த 'திரியாய்' தான் அவரது பூர்வீகம்.

அடிக்கடி ஏற்பட்ட போர்க்கால சூழல்கள், இடமாற்றங்கள், இடப்பெயர்வுகள், அழிவுகள் எனத் திரியாய் ஊரையே சின்னாபின்னமாக்கிய அந்தக் கலவரத்தில் மனைவி பிள்ளைகளோடு கையில் கிடைத்த பொருள்களோடு உயிர் தப்பினால் போதும் என்று ஓடி வந்தவர் தான். பிறகு ஊர்ப்பக்கம் போகவில்லை. நிரந்தரமாக அப்பப்போ போய் நிலபுலன்கள் பார்த்து வந்தாலும் நிரந்தரமாகப் போய்க் குடியிருக்க அவரால் முடியாமல் தான் போனது. தற்போது நிலாவெளியில் 20 ஆம் கட்டைப் பிரதேசத்தில் குடியேற்றத் திட்ட வீட்டு இலக்கம் 25 இல் மகளோடும் அவள் பெற்ற செல்வங்கள் இரண்டினோடும் வாழ்வை வாழ்ந்து கொண்டு போகின்றார். மனைவியும் பாரிசவாதம், நீரிழிவு என நோய்வாய்ப்பட்டு படுக்கையில் கிடந்து இரண்டு வருடங்களுக்கு முன்னர்தான் இறந்து போனாள். அதன்பிறகு கணவனில்லாத அவரது மகள் வாணியும் அவள் பெற்ற செல்வங்களான சாத்வீகனும் தனஞ்சயாவும் அவரது சொத்தாகினர். வாணிக்கும் இப்போது 39 வயதாகிறது. 26 வயதில் கட்டிக் கொடுத்து விட்டார் சதாசிவத்தார். கோணநாதன் (வாணியின் கணவர்) சிறந்த குணநலன் மிக்கவர். உதவியென்று வந்து நின்றால் தான் உண்ண வைத்திருக்கும் உணவையே தூக்கிக் கொடுத்து விடுவான். ஆனால் அநியாயத்தைக் கண்டு பொங்குவதிலும் முந்திக் கொள்வான். கோபம் அதிகமாக வரும் அவனுக்கு. தமிழ்ப்பற்று இரத்தத்தில் ஊறப்பெற்றவன். விதிவரைந்த கோட்டை யாரால் அழிக்க முடியும். குழந்தைகள் இரண்டும் ஐந்து வயதிலும் 3 வயதிலும் இருக்கும்போது 'விசாரணைக்கு வரவேணும் நீர்' என்று ஓர் நள்ளிரவில் கூட்டிச் செல்லப்பட்டவன் இன்று வரை வினாவாகிப் போனான். தேடாத இடமுமில்லை போகாத இராணுவ முகாம்களும் இல்லை. எல்லா இடத்திலிருந்தும் பதில் பூச்சியமே. அப்பாவைப் பற்றிக் கேட்கும் குழந்தைகளுக்கு கண்ணீரோடு மௌனமே பதிலாகியது அவளிடமிருந்து. அன்னையின் அழுகை கண்டு மூத்தவள் சாத்வீகன் தங்கையைக் கூட்டிச் சென்றுவிடுவான். காலச்சக்கரம் சுழன்று இன்றுடன் வருடங்கள் 9 கடந்துதான் போய் விட்டன. தந்தையின் அரவணைப்பிலும் தன் குழந்தைகளின் அந்தக் கள்ளமில்லாச் சிரிப்பிலும் தன்னைத் தொலைத்து வாழப் பழகிவிட்டாள் வாணி. விடிந்தால் தீபாவளி. தந்தையற்ற குழந்தைகள் இரண்டும் அம்மப்பாவிடமே தமது உரிமையை எடுத்துக் கொள்வர். 'அம்மப்பா இந்த முறை தீபாவளிக்கு உடுப்பு வாங்கிறதில்லையோ... அம்மாவும் ஒண்டும் சொல்லுறாவில்ல. பட்டாசும் பலகாரமும் வாங்கித் தரவேணும் நீங்க. தருவியள் தானே? நாளண்டைக்குத் தீபாவளி. நாளைக்கு வேலையால வரும்போது வாங்கிக் கொண்டு வாங்கோ. சரிதானே' என பேர்த்தி தனஞ்சயா வந்து உரிமையுடன் கேட்டபோதும் ஓம் இராசாத்தி. கட்டாயம் வாங்கித் தாறன். என்ர குஞ்சுகளுக்கில்லாததா. அம்மப்பா வரும்போது உனக்கு வடிவான சட்டை, புதுக்காப்பு, அண்ணாவுக்கு வடிவான சேட் அதோட அவனுக்கும் உனக்கும் புதுச் சப்பாத்து, சான்ரில் எல்லாம் வாங்கிக் கொண்டு வருவன். சரியோ...: என்றவரின் குரலை இடைமறித்த வாணி. 'அப்பா... நீங்க இந்தமுறை இரண்டு சாறமும், இரண்டு சேட்டும் உங்களுக்கு வாங்குங்கோ அப்பா. அவளின்ர கதையை விட்டுப்போட்டு எல்லாம் பழசாகிப் போய்க்கிடக்குது. உங்களின்ர உடுப்புக்கள் என்றாள். ஓம்... ஓம்.. பிள்ளை இந்தமுறை வாங்கிடுவன். நீ பேசாமல் போ. நான் செய்யுறன் என்று மகளின் வேண்டுகோளுக்குப் பதில் சொன்னவர். இஞ்ச மகள் ஒரு பனங்கட்டியும் சாயமும் போட்டுத் தாவன். குடிச்சுப்போட்டு நான் வெளிக்கிடுறன்' என்று வந்தவர் தான் அந்த சீமெந்துக் கட்டில் ஏறி அமர்ந்திருக்கிறார். எந்தவேலையும் கிடைக்காமல்.

என்ன சதாசிவமண்ணை, மிச்ச நேரமா இருக்கிறீங்க போல. நான் இஞ்ச நாநாட கடைப் பக்கமா வந்தன். பள்ளி பாங்கு சொல்லப் போறாங்க. லேட்டா ஒரு அரை அவர் பின்னால பார்க்குறன். வாறன். பள்ளிக்குப் போயிட்டு எனச் சொன்ன பாரூக்கை. 'ஓம் தம்பி இண்டைக்கு ஒரு வேலையும் கிடைக்கேல்ல. அதுதான் இருக்கிறன் அப்பு... என்று கவலை தோய்ந்த முகத்துடன் கூறினார் சதாசிவர். திருகோணமலையைப் பொறுத்தவரை மூவின மக்களும் வசிக்கின்ற ஒரு பல் கலாச்சாரச் சூழலின் தாக்கம் அதிகமாகிய பிரதேசமாகும். இன மட்டத்தில் பிரிவினைகள் இருந்தாலும் பல இடங்களில் அண்ணன் தம்பி போல தமிழ் முஸ்லிம் பாகுபாடில்லாமல் பழகுவது இல்லாமலும் இல்லை. அந்த வழியில் திருகோணமலை நகரிலிருந்து கும்புறுப்பிட்டி ஈறாகவுள்ள பகுதிகளில் மக்கள் ஒற்றுமையுடன் வாழ்வதை இன்னும் காணலாம். பண்டிகைக் காலங்களில் உணவுப் பரிமாற்றம் முதல் வாழ்த்துச் சொல்வது வரை நண்பர்களாகவும் சகோதரர்கள் போலவும் பழகுவதில் நிலாவெளி மக்கள் சிறந்தவர்கள் என்றே சொல்லலாம். என்ன செய்வது என்று தெரியவில்லை சதாசிவத்தாருக்கு. எந்த வேலைக்கும் யாரும் கூப்பிட்டது போல இல்லை. வைத்திருக்கும் காசு பிள்ளைகளுக்கு உடுப்பு எடுக்கவே போதாது. அதைவிட பட்டாசு, பலகாரம் இவைகளும் வாங்க வேணும். அதோட நாளைக்கு காளி கோவில் போய் காப்பெடுக்கிற மகளுக்கும் செலவுக்குக் காசு வேணும். என்னதான் செய்வது சிந்தித்தபடியே எழுந்து நடந்து ஹாஜியார் கடைக்குப் போய் ஹாஜியார் ஒரு பிளேன்ரீ தாங்கோ. அப்படியே இரண்டு பீடியும் தாங்கோ என்று கேட்டபடியே வாங்கில் அமர்ந்து கொண்டார். ஓம் அண்ணா மிச்ச நேரமா பாக்குறன். நீங்க தனியாத்தான் இருக்கிறீங்க. ஏன் வயல் வேலைக்குப் போகல்லையோ? என்றார் ஹாஜியார். ஓம் ஓம் இண்டைக்கு வேலை ஒண்டும் வரேல்ல ஹாஜியார். வீட்ட செலவும் எல்லாம் கிடக்குது. இன்னம் கொஞ்சநேரம் பார்ப்பம். இப்ப என்ன இன்னும் றேடியோ நியூஸ்ம் வரயில்லையல்லோ என்றவர் தேத்தண்ணியைக் குடிக்க ஆரம்பித்தார். மெதுவாகக் குடித்து பீடியையும் பத்த வைச்சுக் கொண்டவர் பழையபடி தனது இருப்பிடத்தில் வந்து அமர்ந்து கொண்டார். வாகனப் போக்குவரத்து அதிகமாகிக் கொண்டிருந்தது. ஆனால் வேலைக்கு மட்டும் யாரும் கூப்பிடுவதாக இல்லை. ஆனாலும் நம்பிக்கையைச் சதாசிவத்தார் இழந்துவிடவில்லை. எப்படியும் இன்று ஓர் 1,000 ரூபாவாவது கிடைத்தால் தான் செலவைச் சமப்படுத்த முடியும். எழுந்து கொண்டவர் தோளில் கிடந்த துண்டை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டார். வந்து கொண்டிருந்த லொறி ஒன்று சிறிது தூரத்தில் நின்று கொண்டது. சதாசிவத்தார் சிறிய நப்பாசையுடன் மெதுவாக லொறியை நோக்கி நடக்க ஆரம்பித்தார். கிட்ட வந்ததும் 'என்ன தம்பி ஏதாவது வேலை செய்ய வேணுமோ? ' என்று கேட்டார் நம்பிக்கையுடன். லொறிக்குள் இருந்து எட்டிப் பார்த்த அந்த இளைஞன் 'ஓம் ஐயா. எங்கட லொறி அந்த லேனுக்குள்ள போகாது. அவங்களுக்கு ஒரு பெட்டி கொழும்பிலிருந்து ட்ரான்ஸ் போட்டில வந்திருக்கு. கொண்டுபோய்க் கொடுக்க வேண்டும். நீங்க கொண்டு போய்க் கொடுத்தா காசு தருவாங்க ஐயா. ஏலுமோ?' என்றான் அவன். அவன் சொல்லி முடிக்கு முன்னமே ஓம் ஓம் ராசா தாங்கோ கொண்டு போறன். நீங்க ஒராள் என்னோட வருவீங்க தானே. விலாசம் காட்ட என்றார். ஓம் ஐயா நான் வாறன். வாங்கோ பிடியுங்கோ என அவரது முதுகில் பெட்டியை ஏற்றிய பின் அவனும் பின் நடந்தான். குறித்த இடம் வந்ததும் பெட்டியை இறக்கி வைத்து வீட்டுக்காரரை வாசலில் தட்டி அழைத்தபின் அந்தப் பெண்மணி வீட்டிலிருந்து வெளியே வந்தாள். வாகனத்தில் வந்தவன் தனக்குரிய கூலியை வாங்கிக் கொண்டு நகர்ந்தான். 'ஐயா உங்கட காசையும் வாங்கிக் கொள் ளுங்கே. அப்ப நான் வாறன் என்ன?' என்று கூறிக் கொண்டு வந்த வழியே திரும்பி நடந்தான். சதாசிவத்தாரோ.. அம்மா எனக்கு இதுக்கொரு 300 ரூபா தாறீங்களோ? என வாய்விட்டுக் கேட்டு விட்டார். அந்தப் பெண்மணியை இதுவரை அவர் அந்தப் பகுதியில் கண்டதில்லை. இன்றுதான் காண்கிறார். அவரை நிமிர்ந்து நோக்கிய அந்தப் பெண். ஐயா இருங்கோ இந்தக் கதிரையில். ஏதாவது குடிக்குறீங்களா? என்று கேட்ட வள். பொறுங்கோ வாறன் என்றவள் உள்ளே போய் கையில் ஒரு குளிர்பானம் அது ரின் வடிவில் இருந்தது. கொண்டு வந்து கொடுத்ததோடு மட்டு

யாழ். ஸ்ரீநிலவன்

மல்ல. குடியுங்கோ ஐயா.... நல்லா களைச்சிட்டியள். குடிச்சுப்போட்டு இன்னும் கொஞ்ச வேலை கிடக்கு. செய்து தரமுடியுமோ? நாங்கள் புதியதாக இஞ்ச குடிவந்திருக்கிறோம். நாங்க யாழ்ப்பாணம் தான். இவருக்கு இஞ்சதான் Bank ல வேலை மாற்றல். அதுதான் வந்திருக்கிறோம். வீடு அடுக்கவில்லை ஐயா. கூட மாட நீங்க உதவி செஞ்சால் கொஞ்சம் அடுக்கிடலாம் என்றாள். பழம் நழுவிப் பாலில் விழுந்த கதையாகியது அவருக்கு. அதுக்கென்னம்மா செய்து தாறன். பின்னேரம் வரை ஒரு 1,500 ரூபா தர முடியுமோ? என்று இரந்து கேட்டார். அதுக்கென்னையா. கட்டாயம் தாறன். நீங்க இதக் குடிச்சுப்போட்டு வாங்கோ என்றாள். வேலைகளை விரைவாகவும் சுத்தமாகவும் செய்து கொண்டிருந்தார் சதாசிவம். இந்தவேலை நடக்கும் போதே சதாசிவத்தார் குடும்பம் பற்றி முழுவதும் கேட்டு அறிந்து கொண்டாள் அப்பெண்மணி. அவரது பெயர் யசோதரா. மாலை 5 மணியைக் கடிகாரம் அடித்து ஓயவும் அவர் வேலைகளை முடித்துக் கை கழுவவும் அவளது கணவன் விமலநாதன் தனது காரினை வாசலுக்கு வெளியே நிறுத்தி உள் நுழையவும் சரியாக இருந்தது. ஓம்.. நீங்க வந்துட்டிங்களோ. இஞ்சருங்கோ இவர் சதாசிவம். இண்டைக்கு வேலைக்குப் பிடிச்சன் எனக் கூறிக் கொண்டு கணவனின் பின் உள் நுழைந்தாள். இவர் சதாசிவத்தாருக்கு இருப்புக் கொள்ளவில்லை. காசை வாங்கிக் கொண்டு கடைக்கு மலைக்கு போக வேணும் என அங்கும் இங்கும் நடக்க ஆரம்பித்தார். உள்ளிருந்து வந்த அவன் மனைவியைக் கூப்பிட்டான். யசோ.. யசோ அதைக் கொண்டு வாவன் என்றான். வந்தவளின் கையில் ஒரு பார்சல் இருந்தது. கிட்டவந்தவள் ஐயா குறை நினைக்காதையுங்கோ. இத வாங்கிக் கொள்ளுங்கோ. இதுக்க ஒரு பார்சல் இருக்கு. உங்க பேரன், பேர்த்தி, மகள் மூன்று பேருக்கும் உடுப்பு இருக்குது. ஐயா உங்களுக்கும் இந்த bag ல வைச்சிருக்கிறன் ஒருசாறம் ஒரு சேட்டு என்று கூறிக் கொண்டு அவற்றை நீட்டினாள். நின்று கொண்டிருந்த விமலநாதன் கையில் வைத்திருந்த 1,500 ரூபாவை அவரிடம் நீட்டினான். ஐயா இது உங்கட காசு. நீங்க செய்த வேலைக்கு என்றவன் தனது சட்டைப் பையிலி ருந்து இரண்டு ஐயாயிரம் தாள்களை எடுத்து இது நாங்க உங்கட பிள்ளைகள் போல. இது நாங்க தாற 'தீபாவளிப் பரிசு' ஐயா மறுக்காமல் வாங்கிக் கொள்ளுங்கோ என்று கூறியவன் மனைவியை அழைத்து அவர் பாதம் பணிந்து ஆசீர்வாதத்தினை வேண்டி நின்றான். சதாசிவத்தார் சிலையானார். கண்ணில் தாரை தாரையாக கண்ணீர் கொட்டியது. வாழ்நாளில் தனக்கு இப்படியொரு தீபாவளிப் பரிசை அவர் இதுவரை கண்டதில்லை. மகிழ்ச்சி மேலீட்டாலும் தனது இறைபக்தி மீது கொண்ட நம்பிக்கையாலும் இந்த தீபாவளிக்கு தனக்கு கிடைத்த புது உறவொன்றினையும் அவர்கள் தந்த தீபாவளிப் பரிசையும் நினைத்து மனப்பூர்வமாக அவர்களது தலைகளைத் தொட்டு ஆசீர்வாதம் வழங்கிக் கொண்டார் சதாசிவத்தார். பக்கத்தே இருந்த பிள்ளையார் கோவிலின் மணி மங்கல நாதத்தை ஒலித்துக் கொண்டிருந்தது.

# குயில் கூடு

பாகம் 03

நிர்மலா மூர்ச்சையாகி சோபாவில் சரிந்து விழுந்தாள். பக்கத்தில் நின்றிருந்த அலெக்ஸ் விழ விடா வண்ணம் பிடிக்க எத்தனித்த போதும் அவனின் கைகளையும் மீறி அவள் துவண்டு விழுந்தாள். நல்ல வேளையாக குளோறியாவும் அங்கிருந்ததால் இரண்டு எட்டில் பாய்ந்து வந்து அவளின் கன்னங்களில் தட்டினாள். ‘டேய் நிம்மி…இஞ்ச பாரன்டி’ என அவள் அவளைத் தட்டி எழுப்ப முயல அலெக்ஸ் வந்த தொலைபேசி அழைப்பில் அப்படி என்னதான் கலவரச் சேதி வந்ததோ என ஆராயமுற்பட்டு மச்சாள் ஒருக்கா இவளைப் பாருங்கோ. ரெலிபோனில் யாரென்று நான் பார்க்கிறேன் என்று கூறிக் கொண்டு போனைக் காதில் வைத்தபடி ஹலோ .. ஹலோ என நடக்க ஆரம்பித்தாள். வெளிமுற்றம் தேடி எதிர்முனையிலிருந்து திரேசம்மாவின் குரல் ஒலித்தது. தம்பி யார் கதைக்கிறது. அலெக்ஸ். ஓ என்னப்பு என்ன நடந்தது. நிர்மலா கதைச்சுக் கொண்டிருந்தவள் டக்கெண்டு கதை நிண்டு போச்சு என்றாள். இல்லை சின்னம்மா ஒண்டுமில்லை. அதுதான் நான் போனை வாங்கினனான். என்ன நடந்தது சின்னம்மா என வினவினான். இல்லை தம்பி இவள் யூலியற் பாத்றூமில வழுக்கி விழுந்து போனாள் தம்பி. இடுப்புப் பக்கம் அடிபட்டுட்டாள் போல அதுதான் பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு போனது. அதைத்தான் அப்பு சொன்னன் என்றாள். ஓம் அப்படியோ சின்னம்மா. ஏதும் பெரிய பிரச்சினையோ… இவள் வேற இப்ப ஆறு மாச மல்லோ. ஏன் கவனிக்காமல் விட்டனீங்கள். இதைக் கேட்டுப்போட்டு அவள் பயத்தில அறிவில்லாமல் விழுந்துட்டாள். ஒரு பிரச்சினையுமில்ல. தண்ணி தெளிச்சு எழுப்பிப் போட்டா. குளோறியா மச்சாள் நீங்கள் யூலியற்றுக்கு என்னவெண்டு பாருங்கோ நான் வாறன் கொஞ்ச நேரத்தால சரியோ. மாதாவே ஒண்டும் பெரிசா இராது நீங்களும் கவலைப்படாதையுங்கோ என்றான். ஓம் தம்பி செமாலை மாதாவே எண்டு பெருசா அடிபடயில்ல அப்பு. சரி சரி நீங்க நிம்மியைப் பாருங்கோ. நன் வைக்குறன் என்று போனை வைத்தாள். எதிர்த்தரப்பில் போன் அணைக்கப்பட்டதும் அலெக்ஸ் தனது கையிலே வைத்திருந்த போனை நிறுத்திக் கொண்டு நிர்மலா இருக்கும் இடத்தினை நோக்கி நடந்தான். நிர்மலாவுக்குத் தண்ணி தெளிச்சு எழுப்பி விட்ட குளோறியா .. பான் காற்றை அதிகமாகச் சுழல விட்ட பின் என்னடி அப்படி என்ன அறிவில்லாமல் விழுகிற அளவுக்குப் பெரிய பிரச்சினையோ என்ன? என்றாள். குளோறியாவின் கேள்வியைச் சற்றும் சட்டை செய்யாத நிர்மலா தன்னை நோக்கி நடந்து வந்து கொண்டு இருந்த அலெக்ஸிடம் ‘இஞ்சருங்கோ யூலியற்றுக்கு எப்படியாம் அப்பா? கேட்டனீர்களோ? சின்னமாமி என்ன சொன்னவா என்று கேட்டாள். ஒண்டுமில்லையப்பா. நீ ஒரு விசரி. எதையும் கேட்க முதல் உனக்குப் பயம் உடனே அறிவில்லாமல் வேற விழுந்து கிடக்கிறாய். அவள் கிணற்றடியில வழுக்கி விழுந்து போனாளாம். ஆஸ்பத்திரி கொண்டு போனதாம். வேற ஒரு பிரச்சினையும் இல்லையாம் என்றான். சரி இந்தா மச்சாள் கொண்டு வந்த தேத்தண்ணியைக் கொஞ்சம் குடி. நீ போட்டது தான். நீ குடிக்க முதல் விழுந்து கதிரையை வேற உடைச்சு வைச்சிட்டாய் நல்லவேளை நான் பிடிக்கல்ல. பிடிச்சிருந்தால் நானும் முறிஞ்சு போயிருப்பன் எனக் கூறிச் சிரிப்பை மூட்டி நிலைமையைக் கலகலப்பாக்கினான்.

சும்மா விளையாடாமல் விசயத்தைச் சொல்லுங்கோப்பா. என்னவாம் யூலியற்றுக்கு என்று பரபரப்புத்



தோய்ந்த கவலைக் குரலில் கேட்டாள். ஒன்றுமில்லையடி. அதுதான் சொன்னேனே. கொஞ்சம் ரெஸ்ட்ல இருக்க விட்டிருக்காம். மற்றப்படி பயப்படுறதுபோல எதுவுமில்லையாம் என்றான். அப்ப நானும் போயிட்டு வரவோடி நிம்மி. யோசிக்காமல் எழும்படி லூசி. வீட்ட வேலை கிடக்கு. நீ பேசாமல் ரெஸ்ட் எடு. யோசிக்காத என்றவள் நிம்மி எழும்பிய ஆறுதலோடு அலெக்ஸிடமும் கூறிவிட்டு நடக்க ஆரம்பித்தாள். அப்பம் வந்தால் கூப்பிடு. நான் அண்ணா மீன் கொண்டு வந்தால் கொண்டு வாறன். சரியா எனக் கூறிக் கொண்டு சென்றாள்.

நிர்மலாவுக்கும் யூலியற்றுக்கும் கிட்டத்தட்ட ஒரு வயதுதான் வித்தியாசம். யூலியற் நிர்மலாவின் சிறிய மாமியின் மகள். தந்தையின் கூடப் பிறந்த சகோதரிகள் இருவர். அதில் இளையவரே இந்த திரேசம்மா. மூத்த தங்கை கிளறம்மா. இப்போ ஒரு மகளோடு மன்னார் தாழ்வுபாட்டில் தங்கிக் கொண்டாள். இளையவள் திரேசம்மா. செம்பியன்பற்றில் தனது கணவரது ஊரில் மகள் யூலியற்றோடு வசித்து வருகிறாள். யூலியற்றுக்கு இது 3 ஆவது மகவு. மூத்தவன் சாள்ஸ். பன்னிரண்டு வயதிலும் இரண்டாவது மகள் மேக்னா பத்து வயதிலும் உள்ளனர். நீண்ட நாளின் பின் மீளவும் அவள் கருவுற்றாள். ஒவ்வொருமுறை அவள் குழந்தை பெறும்போதும் நிர்மலாவின் பங்கு எப்போதும் பெரும்பங்காகவே இருக்கும். அலெமக்ஸிடம் அதை எந்த வேளையிலும் தடுத்தது இல்லை. யூலியற்றினது குழந்தைகள் எப்போதும் அவனால் தன் குழந்தைபோலவே பார்க்கப்பட்டன. ஆனால் என்ன எப்படித்தான் அணைத்தபோதும் குழந்தைகள் மாமா, அத்தை என்றே அழைத்தன. அம்மா அப்பா என்று அழைத்தது இல்லைதானே. அந்தக் குறை அவர்களிடமிருந்து அழிக்க முடியாததாகவே இருந்தது. நிர்மலா மழலை ஒன்று அம்மா என்று அழைக்கும் அந்த இன்பக் குரலுக்காக அமுத சாகரத்துக்காக ஏங்காத நாளில்லை. போகாத கோவிலில்லை. வைக்காத நேர்த்தியில்லை. ஆனால் என்ன எந்தக் கடவுளுக்கும் அவள் குரல் எட்டி வருவதாகத்தான் இல்லை. யூலியற்றின் மிகவும் பிரியத்துக்குரிய மைத்துனிதான் நிர்மலா. பருவ வயதிலிருந்து அவர்களது அன்னியோன்யம் இன்றுவரை யாராலும் தடுக்க முடியாத இணைந்த நட்பாக அபரிமிதமான அன்பாக ஆலமரம் போல் வளர்ந்து விட்டிருந்தது. திருமணமாகிய பின்னரும் கூட அதில் எந்தத் தொய்வும் ஏற்பட்டதில்லை. அவளது வீட்டில் எந்த விஷேசமானாலும் இவள் போய் முன்நிற்பாள். இவள் வீட்டில் அவள் உரிமையுடன் அதட்டி உருட்டி வேலை வாங்குவாள். யாழ்ப்பாணத்தினுள் இருவரும் இருந்த போதும் கொஞ்ச தூரத்தூர

மதிவதனி இராஜசேகரன்
(B.A, IHD in Law)

இருந்துவிட்டதே இருவருக்குமான கவலையின் உச்சம். இன்று இந்த நிகழ்வு நிர்மலாவை நிலை குலைய வைத்ததில் ஆச்சரியம் எதுவுமில்லை. யூலியற் கூட நிர்மலாவுக்காகத்தான் இப்போ பார்த்துக் கொண்டிருந்தாள். தான் அடிபட்ட நோவை விட யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் தன்னைக் கொண்டு வந்த ஆனந்தம் யூலியற்றுக்கு. இங்கோ ஆனந்தம் மேலிடவும் ஓர் பதற்றமான மனநிலையுடனும் கணவனைத் துரிதப்படுத்தினாள். இஞ்சருங்கோ.. கெதியா குழிச்சு வாங்கோப்பா. நானும் குளிக்க வேணும். உடன போய் நான் அவளைப் பார்க்க வேணும் எனத் துரத்தினாள். அவனும் சரி சரி விடடி. வந்துடுறன். இனி உன்னைப் பிடிக்க முடியுமோ அவள் உன்ர சிநேகிதி என்ன. மாயமந்திரம் போட்டாளோ எனக் கூறிக் கொண்டு குளியலறை நோக்கி நடந்தான். நிர்மலா அவனுக்கான ஆடைகளை எடுத்து வைப்பதில் மும்முரமானாள். ஆஸ்பத்திரியில் அவளைச் சந்தித்துக் கதைக்கப் போகும் முக்கிய நபரும் அந்த முக்கிய செய்தியும் அறியாமலே…..

தொடரும்….

# இலக்கிய நயம்

தமிழ் இலக்கிய உலகில் கம்பருக்கு நிகரான கவிப் புலமையும் இலக்கியச் செறிவும் கற்பனை ஆற்றலும் கொண்ட புலவர் புகழேந்திப் புலவராவார். வெண்பாக்கள் பாடுவதில் ஒப்பாரும் மிக்காருமில்லாத விற்பன்னர். அதனால் தான் ‘வெண்பாவுக்கொரு புகழேந்தி’ எனப்புகழப்பட்டார். ஒட்டக்கூத்தரின் சமகாலத்தவர். சோழன் பாண்டியன் மகளை மணந்தபோது அறிவு திருத்தும் நல்லாசிரியனாக சோழ நாட்டிற்கு பாண்டியனால் சீதனமாக மகளோடு சோழ நாட்டுக்கு அனுப்பப்பட்டவர். அவர் மன்னன் குலோத்துங்க சோழனின் வேண்டுகோளுக்கிணங்க நளவெண்பாவைப் பாடினார்.

மகாபாரதத்தில் தருமருக்கு வியாசமுனிவரால் நம்பிக்கை கூறும்விதமாகக் கூறப்பட்டதே இந்த நளவெண்பா என்னும் நளமகராஜன் சரிதமாகும். நிடத தேசத்து மன்னன் விதர்ப்ப நாட்டு இளவரசி மங்கை தமயந்தியை மணந்து அவன் வாழ்ந்து கலியால் பீடிக்கப்பட்டு துன்பங்கள் பல அனுபவித்துப் பின் கலி அவர்களது துன்பங்களை நீக்குவதும் தான் நளவெண்பா தரும் மொத்தக் கதையுமாகும். சுயம்வர காண்டம், கலித்தொடர் காண்டம், கலிநீங்கு காண்டம் என்பவை கொண்டு 404 பாடல்களால் நிறையப்பெற்ற தமிழ்ச்சுவை ததும்பத் ததும்ப இனிக்கும் பாடல்கள் கொண்டதே இந்த நளவெண்பா ஆகும்.

நளவெண்பாவில் அன்னநடை பற்றிப் பலரும் புகழக்கேட்ட நளன் தன் தோழியரை அழைத்து தாமரைக் குளத்திலிருந்து அன்னத்தைப் பிடித்துத் தரும்படி வேண்டினாள். சேடியர் மூலம் அன்னமும் பிடித்துக் கொடுக்கப்பட்டது. அன்னம் மன்னன் அவன் கைப்பட்டதும் மறுகித் துடித்தது. மன்னன் அவன் என்ன தீங்கு செய்வானோ என எண்ணி ஏக்கம் கொண்டது. அழகிய இளமையும் இரக்கமும் கொண்ட வாலிபனான நிடதநாட்டு இளவல் நடுங்கிய அப்பறவையைப் பார்த்து தன் இனிய சொற்களை உதிர்த்தான். அன்னமே அஞ்சாதே. உன்னைத் துன்புறுத்த நான் பிடித்து வரவில்லை. உனது நடை அணி நடையது என்றும் மங்கையர் நடை மணிநடை என்றும் புலவர்கள் புகழ்ந்து பாடுகின்றார்களே. அதில் நான் தெளிவு பெறவே உன் நடை பார்க்க உன்னைப் பிடித்து வர ஏவினேன் என்றான். இக்கருத்தை



***அஞ்சல் மடவன்னமே உன்றன் அணிநடையும்***
***வஞ்சி அனையார் மணிநடையும் – விஞ்சியது***
***காணப்பிடித்தது காண்! என்றான் களிவண்டு***
***மாணப் பிடித்த தார்மன்***


என்று நளவெண்பாவில் இனிதே கூறிச் செல்கிறார் புகழேந்திப் புலவர்.

அன்னம் மன்னனை விழித்து தன் தோழியாய் விதர்ப்ப நாட்டு எழில் தாரகை நால்வகைக் குணம் கொண்ட தமயந்தி பற்றிக் கூறி. நளன் தமயந்தி மேல் காதல் வரச் செய்தது தனிக்கதை.

இன்றைய நமது இலக்கிய நயத்தில் மன்னன் நளன் அன்னம் பிடித்து அதன் நடை ஆராய்ந்த விதம் பற்றிப் பார்த்தோம். அடுத்த வாரம் இன்னொரு நயத்துடன் சந்திப்போம்…..

குந்தவி நாச்சியார்.

# மனிதனின் சில பொதுவான உளவியல்



புது உடையையோ/ பிடித்த உடையையோ அணியும் போது பலரின் கண்களில் தாம் படவேண்டுமென மனிதர்கள் விரும்புகின்றனர். இதுவே தமக்குப் பிடிக்காத உடையணியும் போது அதற்கெதிராகச் சிந்திக்கின்றனர்.

மனிதர்களிடம், அவர்கள் நன்றாகச் சாப்பிட்டு விட்டு உற்சாகமாக இருக்கும் போது ஒரு விடயத்தைப் பற்றிக் கேட்பதை விட மிகவும் சோர்வாகச் சுறு சுறுப்பின்றி இருக்கும் போது கேட்டால் அவ்விடயம் பற்றி உண்மை சொல்வதற்கான வாய்ப்புக்கள் மிக மிக அதிகம்.

ஒருவரைப் பார்த்து யாரேனுமொருவர் நீங்கள் வடிவாக இருக்கிறீர்கள்/ உங்கள் கண்களோ மூக்கோ வடிவாக இருக்கிறது என்று சொன்னால் அவரையறியாமலே அப்படிச் சொல்லும் நபரைப் பிடித்து விடுகிறது.

ஒருவர் மேடையில் நின்று உரையாற்றும் போது அதைக் கீழே இருந்து கவனிக்கும் மனிதர்களில் பெரும்பாலானவர்கள், உரையாற்றுபவர் தங்களைப் பார்த்தவாறு உரையாற்றமாட்டாரா என்று நினைப்பார்கள்.

ஒருவேளை அப்படி அவர்களையே பார்த்தவாறு உரையாற்றினால் இத்தனை பேரிருக்கும் போது என்னை மட்டும் அதிகம் கவனிக்கிறார் என்று மனதிற்குள் சந்தோசமும் பெருமையுமடைகின்ற னர்.

ஆண்கள் தம் காதலைத் தன் காதலி ஏற்பதற்கு முன்னரும் ஏற்றுச் சிலகாலம் வரைக்கும் அந்தப் பெண்ணுடன் அதிகமாக நேரத்தைச் செலவழிப்பார்கள். அந்தப் பெண் தனக்கானவள் என்ற உறுதி கிடைத்ததும், எங்கே என்னை விட்டுச் சென்றுவிடப்போகிறாள் என்று அவளுடனான நேரத்தைக் குறைத்து தம் வேலைகளில் அதிககவனஞ் செலுத்துகின்றனர். ஆனால் பெண்கள் ஒருஆணுக்குக்காதல்சம்மதம்தெரிவித்த சிலபலகாலங்கள் ஆண்களைப் போல காதலில் அவளவு ஆர்வம் இருப்பதை வெளியில் காட்ட மாட்டார்கள்.

காலம் செல்லச் செல்லத் தான் தம் அன்பையும் நேரத்தையும் அதிகம் தம் காதலர்களுக்கு வழங்குகின்றனர்.

நறுமணம் உள்ள வாசனைத் திரவியங்களை உபயோகிப்பவர்கள் மீது பெரும்பாலான மனிதர்களுக்கு தம்மையறியாமலே ஒரு வித விருப்பு வந்து விடுகிறது.

யாராவது பிடித்தவர்களுக்கு தொலைபேசியில் மடல் அனுப்பிவிட்டு அவரிடமிருந்தான பதிலுக்கு காத்திருக்கும் போது பதில் மடல் வராவிட்டால் கூட மடல் வந்தது போல தொலைபேசியில் இருந்து ஒலி வருவதாக உணர்ந்து பலர் தொலைபேசியை எடுத்துப் பல முறை பார்ப்பார்கள்.

பிடிக்காதவர்களால் அழுவதை விடப் பிடித்தவர்களுக்காக/ பிடித்தவர்களால் தான் மனிதன் அதிகம் அழுகிறான்.

ஒருவர் சொல்லி ஒரு விடயத்தை செய்வதை விடத் தாமாகச் செய்யும் போதுதான் மனிதர்கள் அதிகம் ஆர்வம் காட்டுகின்றனர்.

எவ்வளவு தான் ஒருவர் தாழ்வு மனப்பான்மையுடையவராய் இருந்தாலும் தன்னைத் தனித்தன்மையுடையவராய் தான் உணருகிறார்.

ஆண்களை விடப் பெண்கள் அதிகம்பொறாமைக்குணம்கொண்டவர்களாக இருக்கின்றனர். அதுவும் ஒரு பெண் மீது தான் இன்னொரு பெண்ணுக்கு அதிக பொறாமை உணர்வு உண்டாகிறது.

தனிமையை விரும்புவர்கள் தமக்கு மிக மிகப் பிடித்தவர்கள் மீது அதிக ஆதிக்கம் செலுத்த முனைவார்கள்.

வகுப்பறையில் பாடம் நடக்கும் போது ஒருதடவையேனும் அதைக் கண்களால் மட்டும் கவனித்த படி சிந்தனையினால் வேறுலகம் செல்லாத மாணவர்கள் யாரும் இருக்க முடியாது.

மனிதர்கள் அதிக சிந்தனையில் இருக்கும் போது அவர்களது கண்களின் இமைகள் மூடித்திறக்கும் எண்ணிக்கை சாதாரண நிலையை விடக் குறைவாகவே உள்ளன.

பெரும்பாலான மனிதர்களுக்கு ஒரு பொருள் / நபர் தமக்கு சொந்தமாகக் கிடைக்கும் வரை அதன்/ அவர்களின் மீதிருக்கும் ஆர்வம், சொந்தமான பின்னர் இருப்பதில்லை.

எதையும் சாதாரணமாக எடுக்கும் மனநிலை பெண்களை விட ஆண்களுக்கே அதிகம். பெரும்பாலான மனிதர்கள் முடிவெடுத்த பின்னரே பிறரிடம் ஆலோசனை கேட்க முயல்கின்றனர்.

பெண்கள் தமக்குப் பிடித்தவர்களுடன் தான் அதிகம் வாதிடுகின்றனர். பிடிக்காதவர்களுடன் அதற்கான ஆர்வமே குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

மனிதர்கள் தமக்குச் சொந்தமான/ தம்மால் காசு கொடுத்து வாங்கப்பட்ட பொருள்களையே அதிக கவனத்துடன் உபயோகிப்பார்கள், இதுவே இலவசமாகக் கிடைத்த/ பிறருடைய பொருள்களாயின் அவற்றின் மீது குறைந்த கவனத்தையே செலுத்துகின்றனர்.

# தெரியாததை நகர்ந்து செல்வது தான் வாழ்க்கை



வாழ்வு என்பது முன் கூட்டியே தீர்மானித்தோ, நிர்வகிப்பதோ அல்ல. தெரியாததை நோக்கி கணத்திற்கு கணம் நகர்ந்து செல்வது. இதுதான் என்று தெரிந்து விட்டால், இது தானே என்ற சலிப்பு உணர்வு ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தினால் தான் இயற்கை அதை ரகசியமாக மறைத்து வைத்திருக்கிறது

நம்முடைய ரகசியத்தை நோக்கிய பயணமாக இருந்தால் வாழ்வில் சுமை இருக்காது மாறாக ஆர்வம் இருக்கும். ஆனால் மனித மனமோ ,மற்றவருடைய ரகசியத்தில் ஆராய்ச்சி செய்வதிலேயே அதிகம் கவனம் கொள்கிறது. இதனால் தன்னுடைய வாழ்வின் அர்த்தம் புரியாமல் ரசனையும் ஆர்வம் குறைந்து விடுகிறது.

இதைத் தான் ஞானியர்கள் தன்னை அறிந்து கொண்டவர்களுக்கு தனக்கொரு கேடில்லை என்றும் தன்னை அறிந்து கொண்டால் அனைத்தையும் அறிந்து கொள்ள முடியும் என்று கூறியிருக்கிறார்கள்.

தெரியாததை நோக்கி கணத்திற்கு கணம் நகர்ந்து செல்வது தான் வாழ்க்கை.

# வெற்றிகரமாக வாழ்வதற்கு அவசியமான ஒழுக்கம்

நாம் மற்றவர்களை விட புத்திசாலியாக இருக்க வேண்டியதில்லை ஆனால் மற்றவர்களை விட நாம் ஒழுக்கமாக இருக்க வேண்டும்.

வெற்றிகரமாக வாழ்வதற்கு ஒழுக்கமான பழக்கவழக்கங்கள் அவசியம் புத்திசாலித்தனம் அத்தியாவசியம் அல்ல.

இதையே வேறு வார்த்தைகளில் கூறுவதானால்,நீங்கள் ஒரு மேதையாக இருந்தால் அதைப்பற்றி கவலையில்லை, ஆனால், ஒழுக்கம் இல்லாமல் இருந்தால் நீங்கள் எப்போதுமே தோல்வி அடைவீர்கள்.

உங்கள் திறமை எதில் உள்ளதோ, அதில் நீங்கள் விடாமுயற்சியுடன் பணிபுரிந்தால் - மற்றும் ஒருபோதும் உங்கள் முயற்சியை கைவிடாமல் இருந்தால் - இறுதியில் நீங்கள் ஒரு மேதை என்று கருதப்படுவீர்கள்.



ப்ரியமதா பயஸ்

# சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாத ‘ஒரே நாடு;ஒரே சட்டம்’ செயலணி அர்த்தமற்றது

## இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தெரிவிப்பு




இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி கத்தோலிக்க நாடாளு மன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பைத் தொடர்ந்து ‘ஒரே நாடு; ஒரே சட்டம்’ பற்றிய தனது கருத்துக்களை அறிக்கையாக வெளியிட்டுள்ளது. இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைத் தலைவர் பதுளை ஆயர் மேதகு கலாநிதி வின்சன் பர்ணாண்டோ ஆண்டகை மற்றும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவைப் பொதுச் செயலர் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு கலாநிதி ஜே.டி.அந்தனி ஆண்டகை ஆகியோர் ஒப்பமிட்ட அறிக்கையை காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களுக்குத் தருகிறோம்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையானது ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி கத்தோலிக்க நாடாளு மன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பைத் தொடர்ந்து எமது நாட்டின் ஜனநாயக விழுமியங்கள் கொள்கைகளில் ஏற்பட்டுள்ள சரிவுகள் பற்றித் தனது அக்கறையான கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது.

ஜனாதிபதியும் அரசாங்கமும் தேர்தலுக்கு முன்பும் பின்னரும் வாக்குறுதி அளித்த போதிலும் 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் சேர்க்கப்பட்ட புனிதமற்ற சூழ்ச்சியான விடயங்கள் புதிய அரசமைப்பு யாப்பு உருவாக்குவதில் பின்னடைவைக் கொண்டு வந்துள்ளன. அது நாட்டின் நலனுக்கு தீங்கு விளைவிக்கும் விதத்தில் எல்லை மீறிச் செயற்படுகிறது.

அரசமைப்பிற்கு அமைவாக நிர்வாகத்தில் ‘ஒரே நாடு; ஒரே சட்டம்’ என்பதை யாரும் எதிர்க்கவில்லை. இருந்தபோதிலும் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட சட்ட மன்றத்தை எவ்விதத்திலும் தொடர்வுபடுத்தாமல், மிகவும் சொற்பமான - இதனுடன் தொடர்பற்ற - தனி நபர்களை ஜனாதிபதி செயலணிக்கு வர்த்தமானி மூலம் நியமித்தமை ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். இவ்வாறான ஒரு மிகவும் முக்கியமான விடயத்தில் நாடாளுமன்ற செயற்பாடுகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

மேலும் ‘ஒரே நாடு; ஒரு சட்டம்’ என்ற எண்ணக் கருவை நடைமுறைப்படுத்துவதற்கான ஆராயும் குழுவில் சிறுபான்மையினரான தமிழர் - இந்துக்கள், கத்தோலிக்கர்கள், கிறிஸ்தவர்களுடைய பிரதிநிதித்துவம் இல்லா தமை அர்த்தமற்ற செயலாகும். இன்னுமாக கடந்த கால பதிவுகளை கருத்தில் கொள்ளாமல் ஒருவரை இந்த ஜனாதிபதி செயலணிக்கு தலைவராக நியமித்திருப்பது வேதனை அளிப்பதாக இருக்கிறது.

குறித்த வர்த்தமானி நீக்கப்பட வேண்டும் என்பதும், எல்லாக் குடிமக்களும் சட்டத்திற்கு முன் சமமாக நிற்கும் உத்தரவாதம் கொடுக்கக் கூடிய அரசியல்யாப்பு உருவாக்கப்படவேண்டும் என்பதும் எமது கருத்தாகும். - என அவ்வறிக்கை நிறைவு பெறுகிறது.

## ‘காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ்’ நற்பணி சேவைக்காக கத்தோலிக்க மக்களின் பெயரால் யாழ் ஆயர் நன்றி தெரிவிப்பு

காலைக்கதிர்ப் பத்திரிகையின் ஆறாவது ஆண்டு நிறைவில் யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை வாழ்த்து தெரிவிக்கும் போது பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

ஞாயிறு தினங்களில் காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் ஒன்றை வெளியிடுவது சமயங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும் நல்லெண்ணத்தை வளர்க்கும் ஒரு நல்ல செயலாகும். பத்திரிகை தொடங்கிய காலம் முதல் வெளியிடப்படும் இந்த காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் பணிக்காக கத்தோலிக்க மக்கள் பெயரால் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம்.

உண்மையில் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களுக்கு காலைக்கதிர் பத்திரிகையின் காலை மற்றும் மாலை இணையப் பதிப்புக்கள் ஒரு பெரிய வரப்பிரசாதமாகும். எந்தக் கட்டணமும் இன்னும் இன்றி மின் அஞ்சல் மற்றும் சமூக வலைத் தளங்கள் மூலம் வீட்டிலிருந்தவாறு காலைக்கதிர் பத்திரிகையின் காலை மற்றும் மாலை இணையப் பதிப்புக்களைப் பெற்று பயன் பெறுகின்றனர். - என்று குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

## திருக்குடும்ப கன்னியர் இளவாலை பிரதேசத்தில் கால் பதித்த 125வது ஆண்டு

போர்தோவின் திருக்குடும்ப கன்னியர் துறவற சபையினர் இளவாலை பிரதேசத்தில் பணிகளை ஆரம்பித்து அங்கு துறவற மடத்தை நிறுவியதன் 125 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்ட நிகழ்வுகள் 30 ஒக்ரேபர் 2021 அன்று இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடத்தில் யாழ்ப்பாணம் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞனப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நன்றித்திருப்பலி கலை நிகழ்வுகள் மற்றும் 125 ஆவது ஆண்டு மலர் வெளியீடு என்பவற்றுடன் கொண்டாடப்பட்டது.

## வட - கிழக்கு மறைமாவட்டங்கள் இணைந்த மேய்ப்புப் பணி மாநாடு

யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய வடக்கு, கிழக்கு மறைமாவட்டங்கள் இணைந்த மேய்ப்புப் பணி மாநாடு ஒன்றை 2022ஆம் ஆண்டு உயிர்ப்புப் பெருவிழாவின் பின்னர் நடத்த வடக்கு கிழக்கு ஆயர் மன்றம் திட்டமிட்டுள்ளதாக வடக்கு கிழக்கு ஆயர் மன்றச் செயலரும் யாழ்ப்பாணம் மறை மாவட்டக் குருமுதல்வருமாகிய கலாநிதி பி.ஜே. ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

தற்போது வடகிழக்கு மறைமாவட்டங்களில் நடைபெறும் உலக ஆயர்மாமன்ற தயாரிப்புப் பணிகளில் பெறப்படவுள்ள தரவுகளின் அடிப்படையில் இம்மேய்ப்புப்பணி மாநாடு ஒழுங்கமைக்கப்படும் என்றும், இது இலங்கைத் தமிழ்த் திரு அவையின் இருப்பு, வளர்ச்சி, கூட்டு ஒருமித்த செயற்பாடுகள் பற்றி ஆராயும் என்றும் தெரிவித்தார்.

# போரினால் இறந்தவர்களுக்காக மன்றாடுகின்ற சிறப்பு நாளாக நவம்பர் 20 ஆம் திகதி அறிவிப்பு

## வடக்கு கிழக்கு ஆயர்கள் மன்றம் அழைப்பு சமயம் கடந்து அனுஷ்டிக்கக் கோரிக்கை


யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் மேதகு காலநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை


மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு காலாநிதி இம்மனுவேல் பர்ணாண்டோ ஆண்டகை


திருகோணமலை மறை மாவட்ட ஆயர் மேதகு காலாநிதி நோயல் இம்மானுவேல் ஆண்டகை


மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு காலநிதி பொன்னையா யோசவ் ஆண்டகை

இலங்கையில் நடைபெற்ற 30 வருடகால உள்நாட்டுப் போர் காரணமாக எமது மக்கள் அனைத்து விதத்திலும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமது இன்னுயிரைப் பறிகொடுத்தோர், தங்களது உடன் பிறப்புக்களை, உறவுகளை இழந்தோர், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் யுத்த வடுக்களால் அங்கவீனமுற்றோர், தொடர்ந்தும் எதுவிதமான குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாது சிறையில் வாடுவோர், உடைமைகளையும், இல்லிடங்களையும், காணிகளையும் வாழ்வாதாரங்களையும் இழந்தோர், உயிர் அச்சுறுத்தல் காரணமாக அரசியல் தஞ்சம் தேடி புலம்பெயர்ந்தோர் என பலதரப்பட்ட மக்களை நாம் குறிப்பிடலாம்.

இறந்தோரை நினைவு கூர்ந்து அவர்களுக்காக இறைவேண்டல் புரிகின்றமை ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதத்தில் வந்தாலும் இந்த முயற்சிக்குப் பல கோணங்களிலிருந்தும் பல தடைகள் இன்று வரையில் இருந்து வருகின்றமை நோக்கத்தக்கது.

இந்நிலையில் இலங்கைத் தேசத்தில் நடைபெற்ற கொடிய போரினால் இறந்து போனவர்களையும், அதன் விளைவாக பாதிக்கப்பட்ட அனைவரையும் நினைவு கூர்ந்து இறைவேண்டல் புரிய வடக்கு - கிழக்கு மாகாண கத்தோலிக்க ஆயர்களாகிய நாம் நவம்பர் மாதத்தில் வருகின்ற மூன்றாம் சனிக்கிழமையைத் தீர்மானித்துள்ளோம்.

இதன்படி இவ்வருடம் நவம்பர் 20ஆம் திகதி சனிக்கிழமையை போரினால் இறந்தவர்களுக்காக மன்றாடுகின்ற சிறப்பு நாளாக சிறப்பிப்போம். அன்றைய தினம் போரில் ஈடுபட்ட தரப்பினர், போரினால் இறந்துபோன மதத்தலைவர்கள் அரசியல்வாதிகள், அரச பணியாளர்கள் பொதுமக்கள் அனைவரையும் நினைவுகூர்ந்து இறை வேண்டல் புரிய ஆயர்களாகிய நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

இதற்கெனக் குறிப்பிட்ட இடமும் இல்லை, நேரமும் இல்லை. அன்றைய தினம் ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகளில் மக்கள் ஈடுபடவும் இல்லங்களில் தீபம் ஏற்றி இறைவேண்டல் புரியவும் அன்போடு நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

இவ்வழைப்பை வடக்கு - கிழக்கு கத்தோலிக்க ஆயர்களாக நாம் எம் மக்களுக்கு விடுத்தாலும் சமயங்களைக் கடந்து அனைத்து சமயத் தலைவர்களையும் தமிழ்கூறும் நல்லுலகையும் அன்போடு அழைத்து நிற்கின்றோம். எமது இந்த முன்னெடுப்பு வெற்றியளிக்க அனைவரது ஆதரவையும் வேண்டி முடிக்கின்றோம்.



# அவதூறுக்கும் சட்டமா?

பஸ்றி ஸீ.ஹனியா
LL.B (Jaffna)

அவதூறு பேசுதல் அல்லது அடுத்தவரைப் பற்றி பேசுதல் என்பது எம்மில் பலர் மூச்சு விடுவதை விட முக்கியமான தொழிலாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இவ்வாறானதொரு சாதாரண விடயத்துக்குச் சட்டம் இருக்குமா? என்ற வினாவுக்கான பதிலே இன்றைய புரிதலாகும்.

அவதூறு என்பது இலங்கையில் பரவலாக மான நஷ்ட வழக்கு என்றே அழைக்கப்படுகின்றது. இது ஆங்கிலத்தில் 'Defamation' என்று அழைக்கப்படும். இது ஓர் ஆளின் நற்பெயருக்குத் தீங்கு விளைவிப்பதாகும் அல்லது இழப்பு உண்டாக்குவதாகும்.

இது ஒரு நபரின் நற்பெயருக்குத் தீங்கு விளைவிப்பது அல்லது இழப்பு உண்டாக்குவது என்பது உதாரணமாக ஒரு கெட்ட பண்புடைய நபர் சமுதாயத்தில் மதிப்பு உடையவராக இருக்கலாம். அவரையும் இந்தச் சட்டம் பாதுகாக்கின்றது. அவரது பெயருக்கு ஊறுவிளைவிப்பவரைச் சட்டம் தண்டிக்கும்.

அதேபோல் நல்ல பண்புடையவரின் மதிப்பு குறைக்கப்பட்டால் அதனையும் அவதூறாகவே பார்க்கப்படுகின்றது.

அவதூறு சட்டத்தின் முன் எல்லாக் குண இயல்புகளும் சமமாக இருக்கின்றன. அவதூறைப் பொறுத்தவரைக்கும் அவரது பண்பு எவ்வாறு என்பது விடயமல்ல மாறாக, எவரது பண்பையும் குறைத்து அறிவிக்கக்கூடாது என்பது மட்டுமே விடயமாகும்.

அவதூறானது ஒருவரைப் பற்றி சாதாரண மக்கள் மத்தியில் இருக்கும் நன்மதிப்பை குறைத்து மதிப்பிடச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்படும் அறிவிப்பாகும். அவரை ஒதுக்கிவைக்க




வேண்டுமென்ற அளவுக்கு அவர் மீது கலங்கம் கற்பிக்க முயலும் அறிவிப்பு என்றும் கூறலாம்.

அவதூறு கூறுதல் என்ற விடயம் நம்மிடையில் மிகப் பரவலாகக் காணப்படுகின்றது. ஏனெனில் எம்மில் பலர் இதில் ஆர்வம் உடையவர்களாகவும், அவதூறு கூறுவதற்கு நேரம் உடையவர்களாகவும் இருக்கின்றோம். ஆனால், இவ்வாறான விடயங்கள் சட்டத்துக்கு முன் பாரிய பாதிப்பைச் செலுத்துகின்றன என்பதில் அனைவரும் கவனயீனமாக இருக்கின்றோம்.

அவமானமானது சிறப்பாக தனிப்பட்ட நபர்களைப் பற்றியதாக இருக்க வேண்டும். ஒரு தொழில் செய்யும் ஒட்டுமொத்த அங்கத்தவர்களையும் குறிப்பிடுகின்ற ஓர் அவமானச் சொல் தனிப்பட்ட நபர்களைப் பாதிப்பதாக இல்லாமல் அந்த வழக்கில் வெற்றி பெற முடியாது.



உதாரணமாக, ஓர் ஊரில் இருக்கும் அனைத்து நபர்களுமே இப்படித்தான் எனக் கூறுவதை அந்த ஊரின் தனி நபர் தனக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அவதூறு என வாதிட முடியாது.

மேலும், மீனவர் சமூகத்தை அவதூறாகப் பேசுவதானது மீனவர் ஒருவரைப் பேசியதாக வழக்குத் தாக்கல் செய்ய முடியாது.

வழக்குகளைத் தாக்கல் செய்வதற்குச் சில கால வரையறைகள் இருக்கின்றன. இதனை 'Prescriptive Period' (பரிந்துரைக்கப்பட்ட காலம்) எனக் கூறுவர். அந்தவகையிலே இலங்கையில் அவதூறு வழக்கு இரண்டு வருட காலத்துக்குள் தாக்கல் செய்ய வேண்டும். காலம் சென்ற பின் தாக்கல் செய்ய முடியாது. இருந்த போதிலும் சில விதிவிலக்கான சூழ்நிலைகளில் நீதிமன்றம் இதற்கு அனுமதிகளையும் வழங்கியுள்ளது.




இங்கு நாம் குறிப்பிட்ட நபரின் முகத்துக்கு முன்னால் பேசுவதோ அல்லது தனிப்பட்ட ரீதியில் கடிதம், குறுஞ் செய்திகள் மூலம் வெளிப்படுத்தலானது அவதூறு ஆகாது. மாறாக, அவதூறானது கட்டாயமாக பிரசுரமாகியிருக்க வேண்டும். மூன்றாம் பேர் வழிக்கு அது தெரிந்திருக்க வேண்டும். இல்லையேல் வழக்கு ஏற்கப்படமாட்டா. அவதூறு வழக்கில் இருந்து விடுபட சில பாதுகாப்புக்கள் உண்டு. இருந்தபோதிலும் அதிகமான வழக்குகளில் எதிராளி யானவர் வழக்காளியிடம் மன்னிப்புக் கேட்டு வழக்கை முடித்துக் கொள்கின்றனர்.

பத்திரிகை நிறுவனங்கள் அதிகமாகச் செய்திகளை வழங்கும் நிறுவனங்களாகும். தகவல்களை அறியப்படும் வளமாகவும் காணப்படுவதனால் வழக்குகளில், விசேடமாக பத்திரிகை நிறுவனங்களின் மேல் வழக்குத் தொடர்ந்து நஷ்டஈடு பெறுவதுண்டு.

பத்திரிகைகளுக்கு எதிராக அவதூறு வழக்குத் தாக்கல் செய்யலாம். ஆனால், பத்திரிகைகள் பொது நலனுக்காகவும் பொது நன்மைக்காகவுமே அவை வெளியிடப்பட்டன என்று கூறினால் நீதிமன்றம் அதனை ஏற்கும். எந்தப் பத்திரிகையும் தனிப்பட்ட நபர் எவரையும் தாக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டு ஆரம்பிக்கப்படுவதில்லை; செயற்படுவதும் இல்லை. பொதுமக்களின் அறிவை வளர்க்கவும் அவர்களின் நன்மைக்காகவுமே பத்திரிகைகள் செய்திகளை வெளியிடுகின்றன. பொதுமக்களின் நன்மைக்காகவே செய்திகளை வெளியிடுகின்றன என்ற வியூகத்தின் அடிப்படையிலேயே பத்திரிகைகள் இவ்வாறான சர்ச்சைகளில் இருந்து தப்பிக்கின்றன.

தமது செய்தி உண்மை எனவும், பொது நலனுக்குத் தேவையானது எனவும் நியாயப்படுத்தல், நியாயமானதும் உண்மையானதுமான கருத்துரை என நிரூபித்தல், சிறப்புரிமைச் செய்திகள் என்று நியாயப்படுத்தல் மூலமாக சட்டப் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆகவேதான் நாம் அவதூறு என்பதன் பின்விளைவுகள் தெரியாது இன்று மணிக்கணக்கில் பேசிக்கொண்டிருக்கின்றோம். ஒருவரின் நற்பெயரை மூன்றாம் நபரின் முன் நாசம் செய்வதானது மோசமான விளைவுகளை உண்டாக்கும் என்பதை மனச்சாட்சிக்கும் அவ்வாறு பேசினால் வழக்குத் தாக்கல் செய்யப்படலாம் என்பதை அறிவுக்கும் புகட்டி வைத்திருந்தால் பிற்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளிலிருந்து பாதுகாப்பாக இருக்கலாம்.

காலைக்கதிர் Kalaikkathir

# வாழ்ந்து கொண்டு இருக்கிறார் வாரியார் சுவாமிகள்



**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
(மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)

கீதை படித்திருந்தால் வித்துவானாய் மேடைகளில் இசைநிகழ்ச்சிகள் செய்தபடியேதான் இருந்திருக்க வேண்டி வந்திருக்கும். ஆனால் இறைவனின் ஆணை வேறாக இருந்ததால் பாதை மாறியது. பயணமும் மாறியது. சைவமும் தமிழும் கைபிடித்து நின்றது. கலியுகத் தெய்வம் கந்தப் பெருமான் தன்னுடைய கடைக்கண் பார்வையில் வைத்திருக்கும் நிலையும் உருவாகியது.

இப்படியெல்லாம் யாருக்கு நேர்ந்தது? வேறு யாருமல்லர்..... பேச்சாலும் , எழுத்தாலும், கதைகளாலும், இசையாலும், எம்மையெல்லாம் தன்பக்கம் ஈர்த்து நின்ற வாரியார் சுவாமிகளே!

கிருபானந்த வாரியார் என்னும் பெயரினை நாங்கள் சாதாரணமாகவே பார்க்கிறோம். அந்தப் பெயருடன் சுவாமிகள் என்பதையும் சேர்த்து அழைத்து விட்டு அத்துடன் நின்று விடுகிறோம். ஆனால் அந்தப் பெயரின் அர்த்தத்தை நாங்கள் எவருமே எண்ணியே பார்ப்பதில்லை. 'கிருபை' என்றால் 'கருணை'; 'ஆனந்தம்' – 'இன்பம்' ; 'வாரி' என்றால் பெருங்கடல்; இப்பொழுது – கிருபானந்த வாரியார் என்னும் பெயரினை எண்ணிப் பாருங்கள். மலைப்பாக இருக்கிறதல்லவா? இவருக்கு இப்பெயர் கருவிலேதான் உருவாகி இருக்க வேண்டும் என்றுதான் எண்ண வேண்டி இருக்கிறது. கருணையே உருவமாகக் கொண்டே அவர் விளங்கினார். கருணை உருவில் இருந்தே பிரசங்கங்களை ஆற்றினார். அனைவரையும் கட்டிப் போட்டார். கருத்துக்களை வழங்குவதில் கடலாகவே இருந்தார். அவரின் செய்கைகள் அத்தனைக்கும் ஏற்றதாக அவரின் பெயரும் அமைந்து வந்திருக்கிறது. இதைத்தான் – 'நினையாது முன்வந்து நிற்கினும் நிற்கும் – எனையாளும் ஈசன் செயல்' என்பதா?

திருவருட்செல்வர்களாக இருந்தவர்களைப் போற்றி தெய்வத் தமிழ்ச் சேக்கிழார் பெருமானால் பெரியபுராணம் பாடப்பட்டது. அந்தப் புராணத்தின் நாயகர்கள் அறுபத்து மூவர் ஆவர். அனைவருமே ஆண்டவனுக்குப் பலவிதங்களில் தொண்டாற்றியவர்களாகவே இருக்கிறார்கள். அறுபத்து மூவருடன் நின்றுவிடாமல் அந்த எண்ணிக்கையில் வாரியார் சுவாமிகளுக்கும் இடம் இருக்கிறது என்னும் சிந்தனையைப் பலரும் சொல்லுவதைக் கேட்கக் கூடியதாக இருக்கிறது. ஆகையால் வாரியார் சுவாமிகளையும் சேர்த்து திருவருட் செல்வர்கள் அறுபத்து நான்கு என்று அழைப்போமா?உடன்படுவீர்கள் என்று எண்ணுகிறேன். பத்தொன்பது வயதில் இல்லறத்தினுள் இணைகின்றார். அவருக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லை. இளமையில் இல்லறத்தில் இணைந்தவர் – சிற்றின்பக் கடலினுள் மூழ்கிவிட நாட்டங் கொண்டவராய் இருக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின் இல்லறத்தை நல்லறமாகவே கருதி – மனைவி இருந்த போதும் – சிற்றின்பம் என்பதை மறந்து – இல்லறத்திலே ஒரு துறவியாகவே வாழ்ந்தார். இப்படி இருப்பதுதான் உண்மையான துறவாகும். பொருள்கள் வந்து குவிந்தாலும் – அருளின் வசமே அவரின் மனம் இருந்த காரணத்தால் – இல்லற ஞானியாகவே வாரியார் சுவாமிகள் விளங்கினார் என்பதுதான் அவரின் தனித்துவத்தைக் காட்டி நிற்கிறது.

இப்பொழுது – காணுமிடமெல்லாம் பல அமைப்புகள். ஒவ்வொரு அமைப்புக்கும் ஒவ்வொரு தலைவர். ஒவ்வொரு தலைவருமே தம்மைச் சாமியார் என்று முத்திரை குத்திக்கொண்டு – செய்யக்கூடாத அத்தனை இழிவான காரியங்களையும் செய்கிறார்கள். ஏமாற்றிப் பிழைக்கின்றார்கள். அவர்களுக்கு என்று தரகர் கூட்டமோ இன்னொரு பக்கம். பொருள் குவிகிறது. அருள் அறுகிறது. ஆடம்பரம் தலைவிரித்து ஆடுகிறது. அங்கு சென்று அகப்பட்டு அல்லல் படுகிறார்கள் அநேகம் பேர்! இப்படி ஏமாற்றிப் பிழைப்பவர்களை சுவாமிகள் என்று அழைப்பது எத்தகைய மதியீனம்? மனைவி இருந்தும் – இல்லறத்தை துறவறமாக்கி வாழ்ந்த வாரியாரைத்தான் சுவாமிகள் என்று அழைப்பது மிகவும் பொருத்தமாய் இருக்கிறதல்லவா! பசித்திரு,தனித்திரு, விழித்திரு என்பதை வாரியார் சுவாமிகள் நன்கு உணர்ந்தவர். அதனால் அவர் எல்லாவற்றிலும் விழித்தே இருந்தார்.

பள்ளிக்கூடத்தைத் தொட்டிராதவர் வாரியார். நிழலுக்கும் அந்தப் பக்கம் போகாதவர் வாரியார். அவரைப் பல்கலைக்கழகங்களும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் பாராட்டி கௌரவித்தார்கள். பல்கலைக்கழகங்கள் வாரியாரை வரவழைத்து அவரின் உரைகளை – கற்றிடும் மாணவரையும், பேராசிரியர்களையும் கேட்கவைத்த நிலையினை எண்ணிப் பார்க்கையில் யாவும் இறையின் திருவருள் என்றுதானே எண்ண வேண்டும். பள்ளிக்குச்சென்று சாதாரண கல்வியினைக் கற்காதவர், புராணங்களையும், இதிகாசங்களையும், வேதக் கருத்துக்களையும், சைவசித்தாந்தக் கருத்துக்களையும், தமிழ் இலக்கிய, இலக்கண மரபுகளையும் எப்படித் தன்னுள் தேக்கி வைத்திருந்தார் என்று நினைத்துப் பார்க்கவே பெரும் வியப்பாக இருக்கிறது!

மூன்று வயதில் வாரியாரின் வித்தியாரம்பம் ஆரம்பிக்கிறது. தந்தைதான் அவரின் ஆத்மார்த்த குரு. ஐந்து வயதாக இருக்கும் பொழுதே ஏட்டினைப் படிக்கும் அளவுக்கு கற்றலில் முன்னிற்கிறார். எட்டு வயதில் வெண்பா பாடும் அளவுக்கு துலங்கி நிற்கிறார். பாக்களிலே வெண்பா பாடுவது என்பது மிகவும் கடினமானது. சட்ட, திட்டங்களுடன் பாடப்பட வேண்டிய யாப்பினைக் கொண்டதுதான் வெண்பா. அப்படியான வெண்

## இன்று அவரது நினைவு நாள்

பாவினை எட்டு வயதில் வாரியார் பாடினார் என்றால் வாணி அவர் நாவில் அமர்ந்து விட்டாள் என்று தானே அர்த்தம்? அத்துடன் அவரின் ஆற்றல் நின்று விடவில்லை. தன்னுடைய பன்னிரெண்டாவது வயதிலே பன்னிரெண்டாயிரம் பாடல்களையே மனனம் செய்திருக்கிறார் என்றால் நம்புவீர்களா ? ஆம் .... இது வெறும் புகழ்ச்சி அல்ல. இது உண்மை. இப்படி ஒரு பிள்ளை வளர்ந்து வந்ததென்றால் அதற்குப் பின்னால் அந்த ஆண்டவனும் கூடவே வந்திருக்கிறான், எந்த நேரமும் அந்தப் பிள்ளையை அரவணைத்தபடியே இருந்திருக்கிறான் என்பதுதானே அர்த்தமாகும். இதைத்தான் கருவிலே திருவுடையார் என்றார்கள்.

இவன் தந்தை என்நோற்றான் என்னும் நிலையில் வாரியார் பிள்ளையாய் வாய்திருக்கிறார். நோற்றான் என்றால் நோன்பு இருந்தான் என்பதுதான் அர்த்தமாகும். வாரியார் தந்தையார் மல்லையாதாசர் அந்தப் பரம் பொருளை வேண்டி பக்தி சிரத்தையுடன் நோன்பு நோற்ற காரணத்தால்த்தான் – வாரியார் ஒளி விட்டுப் பிரகாசித்தார் என்பது பொருத்தமாய் இருக்கிறது. வள்ளுவம் காட்டுகின்ற –

**"தந்தை மகற்காற்று நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்"**
**"மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி இவன்தந்தை**
**என்னோற்றான் கொல்எனும் சொல்"**

இந்த மொழி– வாரியாருக்கும் அவரின் தந்தையாருக்கும் எத்துணை பொருத்தமாய் அமைகிறது பாருங்கள்!

வேத நெறி தளைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க ஒரு பிள்ளை பிறந்தது. அந்தப்பிள்ளை ஞானப்பால் உண்ட பிள்ளை. அந்தப்பிள்ளை தன்னை நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன் என்றது. இன்னுமொரு பெரியவர் தமிழோடு இசை பாட மறந்தறியேன் என்றார். அப்பெரியார்தான் அப்பர். இந்தத் திருவடியார்கள் வழியில் பயணத்தை ஆரம்பிக்கிறார் எங்கள் வாரியார் சுவாமிகளும். அவரும் தமிழையும் இசையும் துணையாகக் கொள்ளுகிறார். திருவடியார்கள் ஊர்கள் தோறும் சென்று இறைவனைப் பாடிப் பரவி மக்களை ஆன்மீகத்துக்குள் வரச்செய்தார்கள். எங்கள் வாரியார் சுவாமிகளும் ஊர் ஊராய், நாடு நாடாய்ச் சென்று சன்மார்க்கத்தை நன் மார்க்கமாய் காட்டி நிற்கிறார். ஆதலால் அறுபத்து நான்காவது திருவடியார் என்று அழைப்பது மிகவும் பொருத்தமாய் இருக்கிறது அல்லவா?

நல்லைநகர் தந்த நாவலர் பெருமான் சொன்னபடியே செய்தார். சொல்லிவிட்டு மட்டும் நின்று விடவில்லை. நாவலர் பெருமான் ஈழத்தின் ஞானவிளக்கு. தமிழையும், சைவத்தையும் தன்னுடைய இரு கண்களாகவே அவர் கருதிச் செயற்பட்டார். பொருளைவிட அருளையே அவர் பெரிதும் நம்பினார் – துணையாக்கினார். அவரும் எழுதினார். பேசினார். புராணங்களையெல்லாம் பக்தி சிரத்தையுடன் கையிலெடுத்தார். விளக்கினார். அவரை இன்றும் நினைக்கிறோம். என்றுமே நினைத்துக் கொண்டே இருப்போம்.

அவரின் வழியில் வாரியாரையும் பார்ப்பது பொருத்தமாய் இருக்கும். நாவலர் பெருமான் ஆசார அனுட்டானங்களைச் சொல்லி விட்டுப் போகாமல் தானும் அதன் வழி மிகவும் இறுக்கமாகவே நின்றார். வாரியாரும் தன் வாழ்நாள் எல்லாம் ஆசார அனுட்டானங்களைக் கைவிடாதவராகவே வாழ்ந்தார். நீறில்லா நெற்றி பாழ் என்னும் தமிழ் மூதாட்டியின் வார்த்தைகளை இருவருமே வாழ்வெல்லாம் போற்றி நின்றார்கள். நாவலர் பெருமானின் படங்கள் அத்தனையும் நெற்றியில் நிறைந்த திருநீற்றின் மூன்று குறிகளுடனேயே காணப்படும். வாரியார் என்றதும் அவரின் திருநீறு நிறைந்த அகன்ற நெற்றியே ஒளி விட்டு மனத்தில் வந்து நிற்கும். கூடாதது அத்தனையும் கூடாதது என்று எண்ணியே இருவரும் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை மனமிருத்துவது சாலப் பொருந்தும் என்று கருதுகிறேன்.

நாவலர் பெருமான் சிவதீட்சை பெற்றிருந்தார். விபூதி உருத்திராக்கத்தை உயிராகப் போற்றிக் காத்து வந்தார். வாரியாருக்கு ஐந்து வயதிலேயே திருவண்ணாமலை பாணிபத்ர மடத்தில் சிவலிங்க தாரணம் நடத்தப்பட்டது. அத்துடன் இவரின் தந்தையாரால் சடார மந்திரமும் உபதேசிக்கப்பட்டது. தந்தையாரின் உபதேசத்துடன் மதுரை திருப்புகழ் சுவாமியினால் சூட்சும சடார மந்திரமும் உபதேசிக்கப்பட்டது. அது மட்டுமன்றி வாரியாரின் கனவில் பாம்பன் சுவாமிகள் தோன்றி சடார மந்திரத்தை திரும்பவும் உபதேசித்தார் என்றும் அறிய முடிகிறது. நாவலர் பெருமான் கால் பட்ட இடங்களெல்லாம் வாரியாரின் கால்களும் பட்டிருக்கின்றன. நாவலரின் சிந்தனைகள் பரவிய இடமெல்லாம் வாரியாரும் சென்று தன்னுடைய சிந்தனைகளைப் பரப்பினார் என்பதும் நோக்கத்தத்தது. நாவலர் பிரமச்சாரியத்தை மேற்கொண்டார். வாரியார் இல்லறத்தில் இருந்து கொண்டே பிரமச்சரியத்தை மேற்கொண்டு வந்தார் என்பதும் கருத்திருத்த வேண்டியதே. நாவலரை இலங்கை அரசாங்கம் கௌரவித்து முத்திரை வெளியிட்டது. வாரியாரை இந்திய அரசாங்கம் கௌரவித்து முத்திரை வெளியிட்டது. சைவத்தையும், தமிழையும் காத்தவர்களை நாடும் போற்றியது. நாட்டு அரசாங்கங்களும் போற்றின.

நூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்களையும் , ஐந்நூறுக்கு மேற்பட்ட கட்டுரைகளையும் வாரியார் சுவாமிகள் சமுதாயம் பயனுறும் வகையில் வழங்கி இருக்கிறார். அவரின் நூல்கள் பல பதிப்புக்களைத் தொட்டு யாவர் மத்தியிலும் சென்று இன்றும் வாழ்ந்து கொண்டே இருக்கிறது. எதனை எழுதினாலும் அதனை யாவரும் விளங்கும்படியே எழுதுவார்.இராமாயாணம் பற்றி எழுதினார். பாரதம் பற்றி எழுதினார். கந்தபுராணம் பற்றி கற்றவரும் மற்றவரும் விளங்கும் வகையில் கந்தவேல் கருணை என்னும் மகுடத்தில் எழுதினார். பெரிய புராணத்தை யாவரது மனதில் பதியும் வகையில் தனக்கே உரித்தான தமிழ் நடையில் சிவனருட்செல்வர் என்னும் பெயரில் வழங்கினார். யாருமே தொட முடியாத ஒரு பெரும் எழுத்துப் பணியினை இவர் மேற்கொண்டார். அதுதான் வாக்குக்கு அருணகிரி என்று போற்றப்படும் அருணகிரியின் ஆன்மீகப் பனுவல் திருப்புகழ் தொடர்பான பணியாகும். வேலூர் மாவட்டத்தில் பிறந்ததால் வேலவன் வசமானார். காங்கேய நல்லூரில் பிறந்ததால் காங்கேயப் பெருமான் திருவடியைப் பற்றினார். அந்தக் காங்கேயனின் அருள் பெற்ற அருணகிரியின் திருப்புகழ் பாடல்கள் வாரியாரை வசப்படுத்தின. முத்தைத்தரு என்று எம்பெருமான் கந்தப் பெருமானால் அடியெடுத்துக்கொடுத்த திருப்புகழ் என்னும் அமுதத்தை தான் மட்டும் பருகினால் போதாது என்று கருதினார் வாரியார். அதனால் ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்து ஆறாம் ஆண்டில் திருப்புகள் அமிர்தம் என்னும் மாத இதழைத் தொடங்கினார்.

(24ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# சூரன் போர் எப்போது? செவ்வாயா? புதனன்றா?

## பஞ்சாங்கங்களால் குழப்பம்

வழமைபோல இலங்கையில் வாழும் சைவத் தமிழ் மக்கள் பஞ்சாங்கங்களின் கணிப்பு வேறுபாட்டால் கந்தசஷ்டி விரதகாலம் தொடர்பான குழப்பங்களுக்கு ஆளாகி உள்ளனர்.

விரத கால வரையறைகள் இருவகைப் பட்டனவாக உள்ளன. சில விரதங்கள் திதிகளை அடிப்படையாகக் கொண்டும், வேறு சில நட்சத்திரங்களை அடிப்படையாகக் கொண்டும் வரையறுக்கப்படுகின்றன. இத்திதிகளும் நட்சத்திரங்களும் அமையும் மாதங்கள் - சந்திர மாதம் (சந்திரனின் சுற்றை அடிப்படையாககொண்டது), சௌர மாதம்(சூரியன் சஞ்சரிப்பதை அடிப்படையாக கொண்டது) என இருவகையாகக் காணப்படுகின்றன.

கந்த சஷ்டி விரதம் சந்திர மாதத்தை அடிப்படையாகக் கொண்டு சுக்கில பட்ச (வளர்பிறை), பிரதமை தொடங்கி சஷ்டி ஈறாகிய ஆறு திதிகளும் உள்ளடக்கியதாக முருகக் கடவுள் அருள்வேண்டி அனுஷ்டிக்கும் விரதமாகும்.

சப்தமி திதியில் பாரணை செய்து விரதத்தை முடித்தல் வேண்டும்.

முருகன், குமரன், கந்தன், சரவணன், ஆறுமுகன், கார்த்திகேயன், சுப்ரமணியன், வடிவேலன், சுவாமி நாதன், செந்தில்நாதன் என்று பல்வேறு பெயர்களால் போற்றப்படுபவர் தமிழ் கடவுள் முருகப் பெருமான். சிவனின் நெற்றிக்கண்ணில் இருந்து தோன்றியவர். கொடுமைகள் புரிந்து வந்த சூரபத்மனை அவர் சங்காரம் செய்த நாள் கந்த சஷ்டி என்று அழைக்கப்படுகிறது. 6 நாள்கள் போர் நடந்தது. இந்த சூரச சங்காரம் நடந்த இடம் திருச்செந்தூர் ஆகும்.

மேற்படி கந்தசஷ்டி விர தம் ஐப்பசி மாதத்தில் வரும் கிருத்திகா(கார்த்திகை)சுத் தப் பிரதமையைத்தான் ஆரம்பமாகக் கொள்ள வேண் டும் என்பதே ஆகம அம்சமாகும். கிருத்திகா சுத்தப் பிர தமையில் தொடங்கி சஷ்டிதிதி முடியும்வரை விரதம் அனுஷ்டித்தல் வேண்டும். கந்தசஷ்டி விரதத்தைப் பொறுத்தவரையில் பாறணையும் அவசியமானது என கந்தபுராணம் கூறுகிறது. சஷ்டி முடிந்து மறுநாள் காலை வரும் சப்தமி திதியில் விரதம் முடித்துப் பாறணை செய் தல் வேண்டும்.

குறித்த விரதங்களை குறித்த காலங்களில் அனுஷ்டித்தால் அதற்கான பயன் அதிகம் என்பதால், விரதங்களை எப்போது கடைப்பிடிக்க வேண்டும் எனும் கால நிர்ணயம் ஞானிகளால் வரையறை செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள திருக்கணித மற்றும் வாக்கிய பஞ்சாங்கங்களில் உள்ள கணிப்பு வேறுபாடுகள் வழமை போல கந்த சஷ்டி விரதகால, சூரன்போர் நடக்கும் திகதியிலும் குழப்பத்தை எற்படுத்தியுள்ளன.

**அட்டவணை 1**

| பஞ்சாங்கம் | திதி | | | | விரத முடிவு சூரன் போர் |
|---|---|---|---|---|---|
| | பிரதமை திதி ஆரம்பம் | | சஷ்டி திதி முடிவு | | |
| திருக்கணிதம் | 5.11.2021 வெள்ளி | அதிகாலை 2.44 | 10.11. 2021 புதன் | காலை 8.25 | **9.11.2021** செவ்வாய் |
| வாக்கியம் | 5.11.2021 வெள்ளி | அதிகாலை 1.38 | .10.11.2021 புதன் | மாலை 2.29 | **10.11.2021** புதன் |

எனவே சஷ்டி திதி முழுவதும் விரதம் அனுஷ்டிக்கவும், சஷ்டிதிதி உள்ள மாலைவேளையில் சூரசங்காரம் நடத்தவும் உகந்த தினமாக 09 .10. 2021செவ்வாய்க்கிழமையே அமைவதோடு, இரண்டு நாள்களில் திதி நிற்குமாயின் இரண்டாம் நாள் திதிமுடியும் வரை விரதம் இருந்து சப்தமி வரும் மூன்றாம் நாளில் பாறணை இயற்றுவதற்கும் பொருத்தமாக அமையும் என ஒரு சாரார் கருதுகின்றனர்.

மறுசாராரோ சூரன் போருக்கு முன்னமே சூரன் அழியவேண்டும் என்பதற்காக தேவர்கள் கந்தசஷ்டி விரதம் பிடித்தனர் என கந்தபுராணம் கூறுகிறது எனவும், கந்த சஷ்டி விரதத்தில் ஆலயங்களில் சூரன்போர் செய்யும் கிரியை முறை கந்தபுராணக் கதையை ஒட்டியே ஆலயங்களில் நடாத்தப்படுகிறது எனவும், சஷ்டியில் சூரன் போர் நடத்துவது வெறும் சம்பிரதாயமே, சூரன் போருக்காக சஷ்டி முடியும் முன் விரதத்தை முடிப்பதும், சஷ்டி நிற்கும்நேரத்திலும், மதியம் முதலிய நேரங்களிலும் பாறணை செய்வதும் பொருத்தமற்றதும் எனவும் கூறுகின்றனர்.

நவம்பர் 05 இலும் சுத்த பிரதமைதிதி அமையாத படியினால் இந்தியாவில் உள்ள சில பஞ்சாங்கங்களின் படி பிரதமைத் திகதி தொடங்கும் நவம்பர் 4 ஆம் திகதியே கந்தசஷ்டி விரதம் ஆரம்பிக்கும் நாளாக நிர்ணயிக்கப்பட்டு நவம்பர் 09 திகதி சூரசங்காரமும், 10 ஆம்திகதி சஷ்டி விரதமும் குறிப்பிடப்பட்டுள்ளது. திருச்செந்தூரிலும் நவம்பர் 09 திகதியே தான் சூரன்போர் குறிப்பிடப்பட்டுள்ளது

இலங்கையில் நடைமுறையில் உள்ள இருபஞ்சாங்கங்களின்படியும்10ஆம் திகதியை விட 09ஆம் திகதியே சஷ்டி திதி அதிகநேரம் வியாபித்துள்ளது. எனவே அன்றையதினமே சூரன் போரும், சஷ்டிவிரதமும் அமைவதுபொருத்தமாகும்.

எது எப்படியோ நமக்குள் இருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று தீய குணங்களின் அடையாளங்களை நாம் வெற்றி கொண்டால் உயர்நிலையையும் வெற்றிகளையும் அடையலாம் என்பது சூரசங்காரம் காட்டும் நெறியாகும்.

ஆ.இளங்கோ
(ஓய்வுபெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர்,
டச்சு வீதி, அளவெட்டி)

# வாழ்ந்து கொண்டு ......

(23ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவரின் பல வேலைகளுக்கு மத்தியிலும் விட்டு விடாமல் முப்பத்து ஏழு ஆண்டுகள் அந்த மாத இதழை நடத்தி - எழுத்துப் பணியில் ஆன்மீக முத்திரையினைப் பதித்திட்டார் எங்களின் வாரியார் சுவாமிகள். பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை என்று அவரின் எழுத்து ஆளுமை அத்தனையும் திருப்புகழ் அமிர்தம் தாங்கிச் சிறப்புற்று நின்றன. தமிழிலே சந்தம் சிந்தும் பாடல்கள் என்றால் அது திருப்புகழ் மட்டுமே. அந்தச் சிந்துகளில் தனது சிந்தனைகளை வெளிப்படுத்திய வாரியாரும் ஓர் அருணகிரிதானே!

பெண்களைப் பெரிதும் மதித்தார். குழந்தைகளைக் கொண்டாடியே மகிழ்ந்தார்.அவரின் ஒவ்வொரு பிரசங்கத்திலும் முன்னே இருப்பவர்கள் நிச்சயமாகக் குழந்தைகளாகவே இருப்பர். இசையுடன் இணைந்த அவரின் பிரசங்கம் கேட்பவர்களை எங்குமே அசைய விடாமல் ஆக்கியேவிடும். வளர்ந்து வருகின்ற குழந்தைகளிடம் நன்னெறியைப் புகுத்த வேண்டும் என்பதில் மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார் வாரியார் எனலாம். இதனால் தன்னுடைய பிரசங்க மேடையின் முன் அமர்ந்திருக்கும் - குழந்தைகளிடம் பல வினாக்களைக் கேட்டு - அதற்குப் பதில் அளித்த குழந்தைகளை மேடைக்கு வரவழைத்து நல்ல நூல்களை வழங்கி ஆசீர்வதித்தார். இந்த அணுகு முறை மிகவும் சிறப்பானது மட்டுமல்ல, புதியதொரு அணுகு முறையாகவும் அமைந்தது. குழந்தைகளையும், பெண்களையும் மதிப்பவர்களை சமூகமும் என்னாளும் மதித்துக் கொண்டே இருக்கும். குழந்தை என்றாலே செல்வம்தான். பெண்கள் என்றாலும் செல்வம்தான். பெண்களை வீட்டின் மகாலக்சுமி என்றுதானே பார்க்கின்றோம். வாரியாருக்கு இந்த நுட்பம் மனதில் தோன்றியபடியால்தான் அவர் தன் வாழ்வெல்லாம் - பெண்களை மதித்தார். குழந்தைகளைக் கொண்டாடினார் இல்லாள்' கருத்துடையது. இல்லான் எதுவுமே இல்லாதவன் என்று வாரியார் சுவாமிகளே சொல்லியிருக்கிறார்.

வாரியார் சுவாமிகளின் பிரசங்க உத்தியைப் பாராட்டியே ஆக வேண்டும்.தத்துவங்களைச் சொல்லுவார். ஆனால் அவற்றை யாவரும் விளங்கும் வகையில் நல்ல கதைகள் மூலமாய் சொல்லுவார். அதாவது இனிப்புத் தடவிய மருந்து போல அவரின் கருத்துக்கள் வந்து அமையும். கதையினையும் நாடகப் பாணியிலேதான் சொல்லுவார். சொல்லும் பொழுது இசையும் அங்கே இணைந்து நிற்கும். தேவார, திருவாசக, திருமுறைப் பாடல்கள் - தாள, லயத்துடன், பக்க வாத்தியங்கள் இணைய வரும்பொழுது - கருத்துக்கள் பசுமரத்தாணி போல மனத்தில் சென்று பதிந்தேவிடும். எந்த அளவுக்கு சைவசிந்தாந்த, வேதாந்த அறிவு நிரம்பி இருந்ததோ அந்த அளவுக்கு - இசைஞானமும் அவர கத்தில் நிறைந்தே இருந்தது. இளமையிலேயே பல பாடல்களை மனனம் செய்திருந்த காரணத்தால் - கதைக்குப் பொருத்தமான கருத்துக்கள் பொதிந்த பாடல்கள் அங்கு வந்து நிற்கும். அப்படி வரும் பாடல்களையும் தன்னுடைய கணீரென்று குரலில் அவர் இசைத்தும் பாடும் பொழுது அந்த சரஸ்வதி தேவியே அவரை விண்ணிலிருந்து வாழ்த்திடுவார் என்றுதான் சொல்ல வேண்டும்.

இயலும் , இசையும் , நாடகமும் அவரின் பிரசங்கத்தின் முத்திரை எனலாம். தமிழ் மொழியை மிகவும் நுட்பமாய் அவர் அறிந்திருந்தார் என்றுதான் பலபேருக்கும் தெரியும். அவருக்கு சமஸ்கிருதமும் தெரியும். பிரசங்கங்களில் அவர் காட்டுகின்ற நயத்தகு தமிழ் சொற்றொடர்கள் போல - பொருத்தமான இடங்களில் பொருத்தமான சமஸ்கிருதச் சுலோகங்களையும் காட்டி அதற்கான விளக்கங்களையும் அவர் காட்டுவதும் சிறப்பாகவே இருக்கும்.

பெண்கள் என்றாலே அவர்கள்தான் சமூகத்தின் கண்கள் என்று வாழ்வெல்லாம் எண்ணி வாழ்ந்தவர் வாரியார் சுவாமிகள். பெற்றெடுத்த தாயின் பெயரை (இனிஷியலாய் ) பெயருக்கு முன்னால் போடலாமே என்று எவருமே தமிழ்ச் சமூகத்தில் சிந்தியாததை, சொல்லாததைச் சொன்னவர் வாரியார் சுவாமிகள். அந்த அளவுக்கு பெண்மையைப் போற்றி நின்றார். புரட்சி புரட்சி என்கிறார்களே,இதுவல்லவா சிறப்பான புரட்சி!

கிடைத்த பொருளையெல்லாம் தனது சொந்தச் சுகத்துக்காக அவர் பயன்படுத்தவே இல்லை. பொருளை அருளான வழியில் பயனாக்கினார். பள்ளிக் கூடத்துக்கே போகாதவர் - காங்கேய நல்லூரிலே துவக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஆண்கள் மேல்நிலைப்பள்ளி என்று பள்ளிகளை நிறுவி வருங் காலச் சந்ததிகளுக்கு வழிகாட்டியாக விளங்கினார்.

வயலூரில் அருணகிரி அறச்சாலையினை நிறுவி உணவளித்து நிற்க உறுதுணையானார். பசிப்பிணிக்கு மருந்தானார். பக்குவம் பெற கல்விக்கு கலங்கரை விளக்கமானார். வந்த பொருளையெல்லாம் இறைவனது ஆலயத்திருப்பணிக்கும் கொடுத்து ஆனந்தம் அடைந்தார். தர்மம் செய்ய நினைத்தால் தாமதிக்கக் கூடாது என்பது தான் வாரியார் எண்ணமாக இருந்தது.

தர்மத்தைத் தனது மனதில் இருத்தித் தேடிய பொருளையெல்லாம் பயனுறு வகையில் செய்த வாரியார் சுவாமிகள் - கொடுத்துச் சிவந்த கைகளை உடையவராய் விளங்கிய ஒருவரை வாழ்த்தி பொன் மனச் செம்மல் என்று விலைமதிப்பில்லாப் பட்டத்தை வழங்கினார். பல பட்டங்களை அவர் பெற்ற பொழுதும் வாரியார் சுவாமிகளால் வழங்கப்பட்ட இப்பட்டமே இன்றளவும் அவரை யாவரிடத்தும் அறியச் செய்து நிற்கிறது எனலாம். அவர்தான் மூன்று எழுத்தில் மக்கள் மனதில் பதிந்த தமிழ் நாட்டின் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள். வாரியார் சுவாமிகளின் வாழ்த்தின் பின் அந்த மூன்றெழுத்தாளர் மக்களின் திலகமாகவே ஆகி விட்டார். வாழ்த்துவார் வாழ்த்தினால் அதுதான் பெருவரமாகும். வாரியார் வாழ்த்தும் அப்படியானதே !

மண்ணுலகில் பிறப்பவர்கள் யாவருமே மண்ணை விட்டுப் பிரிவது என்பது தவிர்க்க முடியாததுதான். அப்படிப் பிரிந்தவர்களை காலமாகிவிட்டார், அமரராகி விட்டார், இறையடி சேர்ந்துவிட்டார், தெய்வீகமானார் என்றெல்லாம் சொல்லுவது மரபாகி விட்டது. இப்படிச் சொல்லுவது எல்லோருக்கும் பொருந்துமா என்று சிந்தித்திப் பாருங்கள்.

**வையத்துள் வாழ்வாங்கு**
**வாழ்வபவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்**

இக்குறள் வழியில் சிந்தித்தால் யாரை வானுறையும் தெய்வ நிலைக்கு அதாவது - காலமாகி விட்டார், அமரராகி விட்டார், இறையடி சேர்ந்து விட்டார், தெய்வீகமானார் - என்று சொல்லுவது பொருத்தமாய் இருக்கும் என்பது தெளிவாகிறதல்லவா?

வள்ளுவத்தின் கருத்துப்படி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவருக்கு இப்படிச் சொல்லுவது தான் பொருத்தமாய் இருக்கிறது அல்லவா! அந்தவகையில் வாரியார் சுவாமிகள் போன்றவர்களையே - மண்ணுலகை விட்டுப் பிரியும் நிலையில் இப்படி அழைக்கலாம் என்பது பொருத்தமாய் இருக்கும் என்பதைக் கருத்திருத்த வேண்டியது அவசியமாகும். வாரியார் சுவாமிகள் நாத்திகர்களையும் ஆத்திகத்தில் நாட்டங் கொண்டிடச் செய்தார். சினப்போரையும் சிந்திக்க வைத்தார். சிரிப்பினை மருந்தாக்கிக் கொடுத்தார். வைதாரையும் வாழ்த்தினார். எதிர்த்தவர்களையும் இரக்கத்துடன் பார்த்தார்.

சுவாமிகளின் ஆன்மீகத் தொண்டு,அவரின் அறப்பணிகள்,அவரின் சிந்தனையால் வெளிவந்த படைப்புகள். அவரின் உரைகள் பதிந்த ஒலி ஒளிக் காட்சிகள். வெள்ளித்திரையில் வந்தும் வேலவனைக் காட்டிய அவரின் பாங்கு. இவையனைத்துமே அவர் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார் என்றுதானே எண்ணத் தோன்றுகிறது. ஆகையால் அவர் அமரரானாலும் எங்கள் மத்தியில் இன்னுமே வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்.

காலைக்கதிர் Kalaikkathir

# விவசாய மற்றும் தரிசு நிலங்களை விற்கின்ற சதித்திட்டம் அரசின் தன்னிச்சையான முடிவு!



சஜித் காட்டம்

இந்த நாட்டின் விவசாய மக்களின் எல்லையற்ற முயற்சியாலும் தைரியத்தாலும் 2010 ஆம் ஆண்டாகும் போது அரிசி உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற நாடாக மாற்றக்கூடியதாக அமைந்திருந்தது. இது இலங்கையை எமக்கு கிடைத்த பாரிய வெற்றியாகும். அந்த வெற்றிக்காக வேளாண்மை விஞ்ஞானிகள் மற்றும் விவசாயம் தொடர்பான தரப்படுத் தாளர்கள் வழங்கிய தெளிவும் தலைமைத்துவமும் மறக்க முடியாத விடயமாகும். உணவு பாதுகாப்பு தொடர்பில் ஆராய்கின்ற போது கடந்த ஒரு தசாப்த காலம் முழுவதுமாக தெற்காசிய நாடுகளில் இலங்கை முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டிருந்தது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

2019 ஆம் ஆண்டாகும் போது உலக உணவு பாதுகாப்பு தரப்படுத்தலின் படி இலங்கை 66 ஆவது இடத்தைப் பெற்றுக் கொண்டது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற தேயிலைக்கும் கறுவாவுக்கும் சர்வதேச சந்தையில் உயர்ந்த அளவில் கேள்வி நிலவியது.

அவ்வாறான ஒரு நிலையில் இருந்த நாட்டின் தற்போதைய நிலை என்ன?

அரசாங்கத்தின் குறுகிய நோக்கமுடைய தன்னிச்சையான செயற்பாடுகள் காரணமாக உரிய காலத்தில் உரிய முறையில் தேவையான உரத்தை விநியோகிக்காமையால் நாட்டின் விவசாய மக்கள் கைவிடப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்த நிலையால் எதிர்காலத்தில் ஒட்டு மொத்த நாட்டு மக்களுக்கும் பாரிய உணவு தட்டுப்பாட்டையும் பஞ்சத்தையும் எதிர்நோக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எமது நாட்டின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றது. எமது நாட்டு மக்களில் நான்கில் ஒரு பகுதியினர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விவசாயத்துடன் தம்மை இணைத்துக் கொண்டு தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்கின்றனர். மொத்த உள்நாட்டு தேசிய உற்பத்தியில் 3.7 வீதம் விவசாயத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளப்படுகின்றது. வேளாண்மைத் தொழிலுடன் தொடர்புடைய குடும்பங்களின் எண்ணிக்கை 1.8 லட்சமாகும்.

அதிகரித்துச் செல்கின்ற மக்கள் தொகைக்கேற்ப உணவுத் தேவையும் அதிகரித்துச் செல்கின்றமையால் அரிசி உற்பத்தியை வருடாந்தம் ஒரு வீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும். அவ்வாறான பின்புலத்தில் எந்தவொரு முன்னாயத்தமும் இன்றி விவசாயத் துறையை முழுமையான சேதனப் பசளை முறைக்கு மாற்றுவதன் ஊடாக குறிப்பிட்ட தேவையை பூர்த்தி செய்வது என்பது கடினமான விடயமாகக் காணப்படுகின்றது.

ரஜரட்டை பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள சிறுநீரக பாதிப்புக்கு இராசயன உரமே காரணம் என கட்டுக்கதைகளை உருவாக்கி அது தொடர்பில் விஞ்ஞான ரீதியாகவோ அல்லது ஆய்வுகளையோ மேற்கொள்ளாது இரசாயன உரத்தைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை தான் தோன்றித்தனமான செயற்பாடாகும். உலகில் தனித்துவமான ஒருவராக மாறுகின்ற நோக்கிலும் ஒருவரின் கனவை நனவாக்கும் நோக்கத்தோடும் பல்லாயிரக்கணக்கான விவசாய மக்களையும் ஒட்டுமொத்த நாட்டு மக்களின் வாழ்க்கையை பணயமாக வைப்பதை அனுமதிக்க முடியாது.

இதன் ஊடாகவே விவசாய மக்களையும் விவசாயத்துடன் தொடர்புடைய இன்னும் பல்வேறுபட்ட துறைகளையும் படு பாதாளத்திற்குள் தள்ளியுள்ளது. நெல் உற்பத்திற்கு அப்பால் அரசி ஆலை உரிமையாளர்கள், தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள், கறுவா உற்பத்தியாளர்கள், பூ உற்பத்தியாளர்கள் அத்தோடு மரக்கறி உற்பத்தியாளர்களும் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

பதலேகொட நெல் ஆராய்ச்சி நிலையத்தின் ஊடாக பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட பல தரப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் சேதனப் பசளை மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வேளாண்மையில் 21 வீதம் தொடக்கம் 31 வீதம் வரை அறுவடையில் வீழ்ச்சி ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பின்னணியில் எந்தவொரு தொழில்நுட்ப அறிவோ விஞ்ஞான ஆய்வு ரீதியான முடிவுகளோ இல்லாமல் விவசாயிகள் மேற்கொள்கின்ற உற்பத்தி, அறுவடை செய்யப்படுகின்ற போது அதை விடவும் அறுவடை குறைவடைய வாய்ப்புக்கள் இருக்கின்றன என விவசாய ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த நாட்டில் உள்ள சட்டங்களை மீறுவதோடு தாவரவியல் தனிமைப்படுத்தல் சட்டத்தையும் எஸ்.எல்.எஸ். தரம் தொடர்பாகவும் கவனம் செலுத்தாது அந்த சட்டங்களை மீறி தரமற்ற உரத்தை இறக்குமதி செய்வதற்கு எத்தனித்து வளமான விவசாய நிலங்களை பேரழிவின் பால் இட்டுச் செல்வதற்கு அரசாங்கம் முன்னெடுக்கின்ற செயற்பாட்டைப் வெறுப்புடன் நிராகரிக்க வேண்டும். இந்த செயற்பாட்டால் நாட்டின் ஒட்டு மொத்த சுற்றுச்சூழலும் பாதிப்பை எதிர்நோக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

சேதனப் பசளை வெற்றி மூலம் ஒரு புதிய வணிக மேட்டுக்குடி வகுப்பினரை உருவாக்கி நாட்டு மக்களின் பணத்தை சுரண்டுகின்ற நிலை ஏற்படுகின்றது. உர இறக்குமதி தொடர்பில் அரச உயர் அதிகாரிகளின் செயற்பாட்டால் அரச இராஜதந்திர நெருக்கடி நிலையொன்றும் உருவாகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அது மாத்திரமல்லாது இவ்வாறான தீர்மானங்களின் காரணமாக நாட்டுக்குள் அந்நிய செலாவணி தொடர்பான பிரச்சினைகளும் உருவாகிக் கொண்டிருக்கின்றன. நாட்டின் விவசாயத்துறைக்குத் தேவையான உர இறக்குமதிக்கு மதிப்பிடப்பட்ட தொகையை விட அதிகமான தொகையொன்று இவ்வாறான அவசர முடிவுகளாலும் கவனயீனம் காரணமாகவும் நாட்டுக்கு இல்லாமல் போயுள்ளது.

இன்னும் இந்த நாட்டில் உள்ள விவசாய மக்களை விவசாய நிலங்களில் ஒதுங்கச் செய்து, அந்த நிலங்களைத் தரிசு நிலங்களாக மாற்றி, அந்த நிலங்களை பன்னாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக கொள்ளையடிக்கின்ற மோசடி மிக்க நிகழ்ச்சி நிரலுடன் அரசு செயற்படுகின்றதா என்கின்ற சந்தேகமும் எழுகின்றது. விஞ்ஞான ரீதியான தரவுகளை அடிப்படையாகக் கொள்ளாது கட்டுக்கதைகளை அடிப்படையாகக் கொண்டு உரம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானமானது விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ள பெருந் தொகையான உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிலாளர்களின் எதிர்காலம் இருளடையச் செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு ஓரளவு பணம் சம்பாதித்தாலும் அன்றாட தேவைகளுக்கு அவசியமான உணவைக் கொள்வனவு செய்ய முடியாமல் போகின்ற நிலை எதிர்காலத்தில் உருவாகாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் பயிர்கள் சேதமடைந்து, நட்டமடைந்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதாகப் பெருமை பேசினாலும் அதற்காக எந்தவொரு பொறிமுறையோ அல்லது திட்டவரைவோ இதுவரையும் அரசாங்கம் கொண்டுவரவில்லை.

விவசாய மக்கள் உட்பட ஒட்டுமொத்த நாட்டு மக்களினதும் நலனுக்காக அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அதிக உற்பத்தித் திறனை உறுதி செய்து நிலையான புதிய விவசாயத் திட்டத்தின் அவசியம் தொடர்பாக நாங்கள் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றோம். - என்றார்.

# நாவலர் குருபூசை தினத்தில் அவரது சிலை நிறுவப்படும்

## யாழ்.மாநகர முதல்வர் உறுதி

(இ.கலையமுதன்)

நாவலர் குருபூசை தினத்திலே நாவலரின் சிலையை நாவலர் மண்டபத்தில் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன எனவும் புனரமைப்பதற்கான ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன எனவும் யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

நல்லை குமரன் மலர் வெளியீட்டு விழாவில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஆரியகுளம் தொடர்பில் வரலாற்றாசிரியர்கள் எவரும் உரிமை கோரவில்லை என்ற கவலை எனக்குள்ளது. அந்தக் கவலை இன்று நீங்கியுள்ளது. ஆரியகுளம் தொடர்பாக குரல் கொடுக்குமாறு நான் பல வரலாற்றாசிரியர்களிடம் கூறியிருந்தேன். நான் ஒரு செவ்வியிலே ஆரியகுள வரலாறு பற்றி தெரிவித்திருந்தேன். நான் கூறியதன் பின்னரே ஆரியகுளம் தொடர்பாக சர்ச்சைகள் உருவாகி இருந்தன.

இந்த சவால்களில் இருந்து என்னைப் பாதுகாக்க வேண்டியதும் என்னுடைய போராட்டத்துக்கு வலுச்சேர்க்க வேண்டியதும் சமூகப்பெரியார்களதும் சமூகத்தினதும் கடமையாகும்.

ஆரியகுளம் என்பது சிங்களவர் உடையது அல்ல. இது ஆரியச் சக்கரவர்த்திகளினுடைய குளமென நான் கூறியிருந்தேன். அதன் பின்னர் அவர்கள் உரிமை கோரி கடிதம் அனுப்புகின்றனர்.

நாங்கள் எங்கள் மரபுரிமைகளை பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் பயணங்களைத் தொடர்ந்து கொண்டிருக்கும் போது சில இடங்களில் இடையூறுகளை நாங்கள் சந்திக்கலாம். அதற்காக எங்களுடைய மக்கள் மத்தியில் இருந்து எமக்கு பெரும் ஆதரவு தேவைப்படுகின்றது. தனி ஓர் அரசியல்வாதியாக ஒரு பொறுப்பை தந்து விட்டு பொதுமக்கள் ஒதுங்கி நிற்க முடியாது. இதை நான் அன்போடும் உரிமையோடும் உங்களிடம் கேட்கின்றேன். எங்கள் செயற்பாடுகளுக்கு நீங்கள் பக்கத்துணையாக பயணிக்க வேண்டும்.

நாவலர் மண்டபம் தொடர்பாக முன்வைக்கப்படும் விமர்சனங்களை ஏற்றுக்கொள்கின்றேன். யாழ் மாநகர சபை இந்த மண்டபத்தை சரியாகப் பராமரிக்கத் தவறியுள்ளது என்பதில் உண்மை இருக்கின்றது. இந்த குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அதனை மேம்படுத்த வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன்.

நாவலர் மண்டபத்தைப் பேணிக்காக்க வேண்டும் என்பதற்காக தனியான முகாமைத்துவ குழு ஒன்றை நாங்கள் சமூகப் பெரியார்களையும் உள்ளடக்கி செய்ய வேண்டுமென்று விரும்புகிறேன். நாவலர் தமிழருடைய மரபுரிமைச் சொத்து.

எதிர்வரும் நாவலர் குருபூசை தினத்திலே நாவலரின் சிலையை நாவலர் மண்டபத்தில் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அதேபோன்று நாவலர் மண்டபத்தை புனரமைப்பதற்கான செலவு பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகின்றது. ஒரு கொடை வள்ளல் இதை புனரமைத்து தருவதற்கு சம்மதம் தெரிவித்திருக்கின்றார். இதனைப் புனரமைப்பு செய்ய சபையின் அனுமதி கிடைத்திருக்கிறது.

அத்தோடு இந்த விடயங்களோடு நின்றுவிடாமல் தொடர்ந்து இதனைச் சரியாகப் பேணிப் பாதுகாப்பதற்கு முகாமைத்துவக் குழு ஒன்றை என்னுடைய காலத்திலேயே நியமிப்பதற்கு விரும்புகிறேன்.

எதிர்வரும் மாநகர சபை வரவு செலவுத் திட்டத்தில் நான் தோற்கடிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டால் என்னால் செய்ய முடியாது .அதிலிருந்து நான் தப்பிப் பிழைத்தால் வருகின்ற பெப்ரவரி மாதம் வரை நான் இருந்து நாவலர் மண்டபத்தை சிறப்பாக பராமரிப்பேன் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். - என்றார்.

# குழந்தைகள் காப்பகத்தில் ஒரே நாளில் 51 பேருக்கு கொவிட்

5 வயதுக்கும் குறைவான குழந்தைகளை பராமரிக்கும் குழந்தைகள் காப்பகம் ஒன்றில் 11 குழந்தைகள் உட்பட 51 பேர் கொவிட் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

அங்கு பணிபுரியும் பெண் ஊழியர் ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட உடனடி அன்டிஜன் பரிசோதனையில் மேற்படி தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பண்டாரவெல சுஜாதா செவன குழந்தைகள் காப்பகத்தில் இந்த கொவிட் அவதான நிலை ஏற்பட்டுள்ளது.

பண்டாரவெல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் இந்த உடனடி அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, 11 குழந்தைகளுக்கு மேலதிகமாக 6 பெண் ஊழியர்கள், ஆசிரியர்கள், உணவகத்தில் பணி புரியும் இருவர் மற்றும் நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 7 பேர் உள்ளிட்ட தரப்பினரே இவ்வாறு கொவிட் தொற்றுக்கு உள்ளாகி உள்ளனர்.

# சுவிஸ் - இலங்கை இடையே வெள்ளிகளில் நேரடி விமானம்

சுவிட்ஸர்லாந்தின் சுவிஸ் சர்வதேச விமான சேவையின் ஆரம்ப விமானம் கடந்த வெள்ளிக்கிழமை காலை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த விமானத்தில் 96 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் விமானி உட்பட 12 பணியாளர்களும் வருகை தந்தனர்.

வெள்ளி முதல், சுவிஸ் சர்வதேச விமானம், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சூரிச் மற்றும் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு இடையே நேரடி விமானப் பயணங்களை மேற்கொள்ள உள்ளது.



# பொது அறிவு வாராந்தம் ஒரு பரீட்சை

இந்த கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் வீட்டில் மூழ்கிக் கிடக்கும் உங்களுக்கு அறிவைத் தூண்டும் ஒரு பொது அறிவுப் பரீட்சையை அறிமுகம் செய்கின்றோம்.
பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இப்பகுதியில் பத்து பொதுஅறிவு வினாக்கள் இடம்பெறும். கேள்விக்குரிய உங்கள் பதில்கள் அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை பிரசுமாகும்.
சனிக்கிழமை காலை 8 மணிக்கு முதல் Kalaikkathiredu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் எங்களுக்கு உங்கள் விடைகளை அனுப்பி வையுங்கள்.
தொடரின் முடிவில் அதிக எண்ணிக்கையான தடவைகள் சரியான பதிலை அனுப்பியவர்களுக்கு தகுந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
உங்கள் பதிலை அனுப்பும்போது உங்கள் பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் ஆகிய வற்றை குறிப்பிடத்தவறாதீர்கள்.

**1.இயற்பியலின் தந்தை யார்?**

**02.நத்தை ஒரு மைல் (1.6 கிலோ மீற்றர்) தூரம் செல்வதற்கு எத்தனை நாள்கள் தேவை?**

**03.உடல் ஊனமுற்றோர் தினம் எப்போது?**

**04.தமிழ் நாட்டில் முக்கடல்களும் சந்திக்கும் இடம் எது?**

**05.இரத்தம் உறைவதற்கு காரணமான விற்றமின் எது?**

**06.இறுதியாக வெளியிடப்பட்ட ரி-20 கிரிக்கெட் தரவரிசையில் பந்து வீச்சில் முதல் இடம் பிடித்தவர் யார்?**

**07.இறுதியாக நடைபெற்ற ஜி - 20 மாநாடு எங்கு இடம்பெற்றது?**

**08.உலகிலேயே அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள நூல்களில் மூன்றாம் இடத்தை பிடித்துள்ள நூல் எது?**

**09.தற்போது காலைக்கதிர் பத்திரிகை எத்தனையாவது ஆண்டில் கால் பதித்துள்ளது?**

**10.12, 13, 16, 22, 32... என்ற எண் தொடரின் அடுத்து வரும் இரு எண்களும் எவை?**

பெயர் :- ........................................
முகவரி :- ........................................
தொலைபேசி இலக்கம்:- ....................
அடையாள அட்டை:- ........................
மின்னஞ்சல் முகவரி:- ......................

## 31.10.2021ஆம் திகதி பிரசுரமான பொது அறிவு வினாக்களுக்கான விடைகள்

01. 24 பேர்
02.137 1/2
03. அன்னை தெரேசா
04.ரஷ்யர்கள்
05.தொலமி
06.120 ரூபா
07.20 புள்ளிகள்
08.ஐப்பான்
09.ஸ்கொட்லாந்து
10.ஜெருசலேம்

## சரியான பதிலளித்தவர்கள் விவரம் -

| | | |
|---|---|---|
| 1. கே. அனுஷன் | ஏழாலை | 07 |
| 2. எஸ். சதுர்ஜினி | அல்வாய் | 05 |
| 3. வி.வினோத்குமார் | மட்டக்களப்பு | 05 |
| 4. வி.வினோதினி | மட்டக்களப்பு | 05 |

# எமது வரலாற்றை அடையாளப்படுத்தும் பணியை யாழ்.முதல்வர் ஆற்றவேண்டும்

## கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை

கலையமுதன்
யாழ்ப்பாணம்,நவ.7

எங்கள் வரலாற்றை அடையாளப்படுத்தாமல் தவறவிட்டவர்கள் நாங்கள். இன்றைக்காவது எமது வரலாற்றை நாம் அடையாளப்படுத்த வேண்டும். முதல்வர் மணிவண்ணன் தனது காலத்திலாவது இதனை செய்ய வேண்டுமென செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் தெரிவித்தார்.

நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழாவில் அவர் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஆரியகுளத்தை திருத்துவதற்கு தற்போதைய மாநகர முதல்வர் முன்வந்தமை உண்மையில் வரவேற்கத்தக்க விடயம். ஆரியகுளம் யாருடைய குளம் என்பது தொடர்பாகத் தமிழர்களுக்கே சரியாகத் தெரியாது. இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து வந்த ஆரியச் சக்கரவர்த்தி இங்கு வந்து ஆட்சி செய்த காலத்திலேயே ஆரியகுளம் உருவாக்கப்பட்டது. ஆரியச் சக்கரவர்த்திகள் தமிழர்கள் என பேராசிரியர் பத்மநாதன் தெளிவுபடுத்துகிறார். யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலேயே ஆரியகுளம் உருவாக்கப்பட்டது. இது சைவத் தமிழ் மன்னர்களுடையது எனக் கூறுங்கள்.

மதங்களைக் கடந்து போகிறோம் என்று சொல்லி எங்களை பொதுவானவர்கள் என்று கூறாதீர்கள். இத்தகைய குளங்கள் அருகிலேயே கல்வெட்டுகளைப் பதியுங்கள். யாழ். மாநகரசபை இதனைச் செய்ய வேண்டும்.

எங்கள் வரலாற்றை அடையாளப்படுத்தாமல் தவறவிட்டவர்கள் நாங்கள். இன்றைக்காவது எமது வரலாற்றை நாம் அடையாளப்படுத்த வேண்டும். முதல்வர் மணிவண்ணன் தனது காலத்திலாவது இதனைச் செய்ய வேண்டும். இதற்கு பணம் இல்லாவிட்டால் சைவ அமைப்புக்களான எங்களிடம் கேளுங்கள். நாங்கள் செய்வோம்.



வரலாற்றை ஆவணப்படுத்தத் தவறிய காரணத்தால் வரலாற்றாசிரியர்களும் சமாளித்துச் செல்லவே பார்க்கின்றனர். நாவலர் மண்டபத்தில் கடந்த காலத்தில் ஆய்வரங்குகளும் இந்து கலாசார திணைக்களத்தின் நிகழ்வுகளும் நடந்தன. ஆனால் இன்று என்ன நடக்கின்றது?

எமது இனத்துக்காகவும் சமூகத்துக்காகவும் பாடுபட்ட நாவலரின் இடத்தை எவ்வாறு வைத்திருக்கிறோம். இது தொடர்பில் சிந்திக்க வேண்டும். பாராமரிக்க முடியாவிட்டால் எம்மிடம் ஒப்படையுங்கள். - என்றார்.

# இந்திய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டோர் உறவினர்களைச் சந்தித்தார் அமைச்சர் டக்ளஸ்

ச.தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் கனடா செல்வதற்காக நாட்டை விட்டு வெளியேறிய இந்தியாவில் தங்கியிருந்த போது இந்தியாவில் இந்திய பொலிஸாரினால் பிடிபட்டு இந்தியாவின் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்களுக்குமிடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது

இந்தச் சந்திப்பு கடந்த வியாழக்கிழமை மாலை முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க சமாச கட்டடத்தில் இடம்பெற்றது.

மேற்படி சந்திப்பில் இந்தியாவில் இந்திய பொலிஸாரால் பிடிபட்டு இந்தியாவின் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமது உறவுகளை மீட்டுத்தருமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் உறவினர்கள் கண்ணீருடன் கோரிக்கை விடுத்தனர்

முல்லைத்தீவில் மற்றும் ஏனைய வடக்கு கிழக்கு பகுதிகளிலிருந்தும் கனடா செல்வதற்காக முகவர் ஊடாக இரண்டு பிரிவுகளாக இந்தியா சென்று அங்கு தங்கியிருந்த நிலையில் இந்தியாவின் கர்நாடகாவில் இருந்து இலங்கைத் தமிழர்கள் சட்டவிரோதமாக கனடாவுக்கு செல்வதற்காக வருகை தந்திருக்கின்றன என அம்மாநில பொலிஸாருக்குத் தகவல் கிடைத்த நிலையில் கர்நாடக பொலிஸார், பெங்களூரில் சட்டவிரோதமாகத் தங்கி இருந்த 38 பேரை கைது செய்ததோடு, தமிழகத்தில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த இலங்கைத்தமிழர்கள் 23 பேரை தமிழ்நாட்டு பொலிஸார் கைது செய்தனர். இவர்கள் கடந்த 10.06.2021 அன்று கைது செய்யப்பட்டிருந்தனர்.

தமிழ் நாட்டில் கைது செய்யப்பட்ட 23 பேரை தமிழ்நாட்டு பொலிஸார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது அவர்கள் புழல் சிறையில் அடைக்கப்பட்டு தற்போது திருச்சி சிறப்பு முகாமில் உள்ளனர் இதேவேளை பெங்களூரில் சட்டவிரோதமாகத் தங்கி இருந்து கைது செய்த 38 பேரை கர்நாடக பொலிஸார் பெங்களூர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது அவர்கள் 38 பேரும் பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இரண்டு சிறைகளிலும் அடைக்கப்பட்டுள்ளவர்களில் முல்லைத்தீவைச் சேர்ந்த 42 பேரையும் விடுவித்து தருமாறு அவர்களின் உறவினர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கண்ணீருடன் கோரிக்கை விடுத்திருந்தனர்.

# கொழும்பில் இருந்து யாழுக்கு கார்களில் போதை மாத்திரை

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு போதை மாத்திரைகளை கடத்தி வந்த இருவரை யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் அவர்களின் இரு சொகுசு கார்களையும் கடந்த வெள்ளிக்கிழமை கைப்பற்றியுள்ளனர்.

கொழும்பில் இருந்து பெருமளவான போதை மாத்திரைகள் யாழ்ப்பாணத்துக்கு காரில் கடத்தி வரப்படுகின்றன என யாழ்ப்பாண பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குத் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

தகவலின் பிரகாரம் நடவடிக்கையில் இறங்கிய புலனாய்வு பிரிவினர் கார்களை அடையாளம் கண்டு அவற்றை மடக்கிப் பிடித்து சோதனையிட்ட போது, அவற்றுள் இருந்து பெருமளவான போதை மாத்திரைகளை மீட்டுள்ளனர்.

அதனை அடுத்து இரு கார்களிலும் பயணித்த யாழ். நகர் பகுதியைச் சேர்ந்த ஒருவரையும், கொழும்பைச் சேர்ந்த ஒருவரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும், அவர்களின் இரு கார்களையும் யாழ்ப்பாண பொலிஸாரிடம் கையளித்துள்ளனர்.

இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# அடுத்துவரும் வாரங்களில் டெங்கு தாக்கம் அதிகரிக்கும்

இலங்கையில் அடுத்த சில வாரங்களுக்குள் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நுளம்புகள் பெருகும் இடங்கள் அதிகம் அடையாளம் காணப்படுகின்றமையை அடுத்தே இந்த எச்சரிக்கையை தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு விடுத்துள்ளது.

2021 நவம்பர் 4 ஆம் திகதிக்குள் இலங்கையில் 22 ஆயிரத்து 902 டெங்கு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் 504 பேர் இந்த மாதத்தின் முதல் நான்கு நாள்களில் பதிவாகியுள்ளனர்.

கொவிட் தொற்றுநோயிலிருந்து நாடு படிப்படியாக மீண்டு வரும் நிலையில், டெங்கு நோயைத் தடுக்க வேண்டும் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது. இல்லையெனில் பாரிய அழிவு ஒன்றை எதிர்கொள்ள வேண்டும் என்றும் அந்த பிரிவு எச்சரித்துள்ளது.

தண்ணீர் சேமிப்பு தொட்டிகள், பூந்தொட்டிகள் மற்றும் குவளைகள், தோட்ட நீரூற்றுகள், குளிர்சாதன பெட்டிகள், தண்ணீர் வழங்கும் தட்டுகள், உடைந்த தொட்டிகள், தூக்கி எறியப்பட்ட போத்தல்கள், வீசப்பட்டுள்ள றப்பர் சில்லுகள், தேங்காய் ஓடுகள் அனைத்தும் நுளம்புகள் இனப்பெருக்கம் செய்யக்கூடிய இடங்களாகும்.

எனவே இந்த விடயங்களில் கவனம் செலுத்துமாறு தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

# கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைகளில் ஈடுபட்ட இருவர் கிளிநொச்சியில் கைது!

கிளிநொச்சி – தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நெத்தலியாற்றுப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் மது ஒழிப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மது ஒழிப்பு பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்றத் தகவலுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றது.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 61லீற்றர் கசிப்பும் மற்றும் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் இரண்டு உபகரணம் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாற்றுப் பகுதியில் மோட்டார் சைக்கிள் மூலம் சட்டவிரோத கசிப்பை விற்பனைக்குக் கொண்டு சென்ற சந்தேக நபர் ஒருவரைத் தருமபுரம் பொலிஸார் வீதிச் சோதனையில் மூலம் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 17 லீற்றர் 250 மில்லிலீற்றர் கசிப்பு தருமபுரம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன், கசிப்பு விற்பனைக்குப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. தடயப்பொருள்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மது ஒலிப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் அலுவலரும், அவரது நண்பியும் மாத்தறையில் ஹெரோயினுடன் கைது

ஹெரோயின் போதைப்பொருளை விற்பனைக்காக பொதி செய்து கொண்டிருந்த பொலிஸ் அலுவலர் ஒருவரும், அவருடைய நண்பியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை, தங்காலை பிரிவு குற்றப்புலனாய்வு பிரிவினரால், பிரதேசத்தில் உள்ள தங்கும் விடுதி ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, இவர்கள் சிக்கியுள்ளனர்.

கைது செய்யப்படும் போது அவர்களிடம் 28,580 கிராம் ஹெரோயின் இருந்துள்ளதாகத் தெரியவருகிறது.

கைது செய்யப்பட்ட பெண், தங்காலை – தலல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இவர் நீண்டகாலமாக இந்த மோசடியில் ஈடுபட்டு வந்துள்ளார்.

அவரது தூண்டுதலின் பேரில் பொலிஸ் அலுவலரும் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டார் எனச் செய்திகள் கூறுகின்றன.

# நாட்டில் சீரற்ற காலநிலை இதுவரை ஐந்து பேர் பலி

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் ஐவர் மரணமடைந்துள்ளமையுடன், இருவர் காயமடைந்தும் ஒருவர் காணாமல் போயுமுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளது. இலங்கைக்கு அருகிலான பகுதியில் ஏற்பட்டுள்ள குறைந்த தாழமுக்கம் காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இடியுடன் கூடிய மழையுடனான காலநிலை நிலவுகிறது.

இந்த நிலையில், சீரற்ற வானிலையால் 12 மாவட்டங்களில் 1136 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 364 பேர் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதுமட்டுமின்றி ஐவர் உயிரிழந்துள்ளதுடன், இருவர் காயமடைந்து ஒருவர் காணாமல் போயுமுள்ளார். மேலும் 12 வீடுகள் முழுமையாகவும், 630 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# மூன்று தசாப்தங்களுக்குப் பின்னர் எயார் பிரான்ஸ் விமானம் வருகை

மூன்று தசாப்தங்களின் பின்னர் எயார் பிரான்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான விமானம் ஒன்று நாட்டுக்குவருகைதந்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி 100 பயணிகளுடன் கூடிய மேற்படி விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளது. 1980 களில் இலங்கைக்கும் பிரான்ஸுக்கும் இடையிலான முதலாவது நேரடி விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் 2015 இல், இந்த நேரடி விமானங்கள் நிறுத்தப்பட்டன.

அதன்பின்னர், பிரான்ஸில் இருந்து சுமார் 6 வருடங்களுக்கு பின்னர் ஸ்ரீலங்கன் ஏயர் லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான முதல் விமானம் கடந்த முதலாம் திகதி இலங்கையை வந்தடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு மாநகர வரவு செலவுத் திட்டம்; கலந்துரையாடல் இடம்பெற்றது!





2022 ஆம் ஆண்டுக்கான மட்டக்களப்பு மாநகர சபையின் வரவு – செலவுத் திட்டம் ஊடாக கிராமத்துக்கு 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு மட்டக்களப்பு மாநகர சபையில் சுபீட்சத்தை நோக்கிய ஓர் அபிவிருத்தியை முன்னெடுக்கவுள்ளதாக மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

2022 ஆம் ஆண்டுக்கான மட்டக்களப்பு மாநகர சபையின் வரவு – செலவுத் திட்டம் தொடர்பிலான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாநகரசபையில் நடைபெற்றுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாநகரசபையின் பிரதி முதல்வர் கே.சத்தியசீலன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள், மாநகர சபையின் கணக்காளர் ஜி.எச்.சிவராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது நிதிக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட எதிர்வரும் மாநகரசபை அமர்வில் முன்வைக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்ட அறிக்கை தொடர்பில் மாநகரசபை உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தப்பட்டமையுடன், அவர்களின் கருத்துக்களும் அறியப்பட்டன.

இதன்போது மாநகரசபை உறுப்பினர்களால் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டதுடன், கருத்து முரண்பாடுக ளும் எழுந்தன. உறுப்பினர்களின் ஆலோசனைகளும் கேட்கப்பட்டமையுடன், வரவு – செலவுத் திட்டத்தில் உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அத்துடன் கடந்த ஆண்டு கொண்டு வரப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தில் மக்களுக்கான முன்வைக்கப்பட்ட பல செயற்பாடுகள் நிர்வாகத்தால் நடைமுறைப்படுத்தாத நிலையில் மீண்டும் எதிர்வரும் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் கொண்டுவருவதில் பயனில்லையெனவும் இந்த ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் எதிர்வரும் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்கப்போவதில்லையென மட்டக்களப்பு மாநகரசபையின் பிரதி முதல்வர் சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் மாநகர சபை நிர்வாகத்தினரால் முடிக்கப்படாவிட்டால் நிர்வாகத்துக்கான கொடுப்பனவை நிறுத்தி ஏனைய நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகளை மட்டும் அங்கீகரிப்பதற்கான ஆதரவை வழங்கவேண்டும் என இதன்போது முதல்வர் தெரிவித்துள்ளார். இதன்போது உறுப்பினர்களால், குடும்பங்களைத் தலைமை தாங்கும் பெண்களுக்கான வாழ்வாதார உதவி செயற்பாடுகள் மற்றும் விசேட தேவையுடையவர்களுக்கான உதவிகள் தொடர்பாகவும் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், எதிர்வரும் ஆண்டுக்காக 45 கோடியே 20 வட்சம் ரூபா வரவு – செலவுத் திட்டம் ஊடாக ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# பொருள் கொள்வனவின் போது கட்டுப்பாடுகள் விதிக்கமுடியாது!

## நீதி அமைச்சு அறிவிப்பு

பொருள் கொள்வனவின் போது கட்டுப்பாடுகள் விதிக்க முடியாது என நீதி அமைச்சின் ஆலோசகர் ஜனாதிபதி சட்டத்தரணி யூ.ஆர்.டி சில்வா தெரிவித்துள்ளார்.

சதொச நிறுவனத்தில் அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்யும் போது வேறும் சில பொருள்களை கொள்வனவு செய்ய வேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறுபொருட்கொள்வனவின்போதுநிபந்தனைகள் விதிக்கப்பட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குறிப்பாக அரசாங்க நிறுவனமொன்றில் இவ்வாறு பொருள்கள் கொள்வனவு செய்ய நிபந்தனைகள் எதனையும் விதிக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்வாறு நிபந்தனை விதிப்பது சட்டத்துக்கு முரணானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் 11 ஆம் சரத்தின் அடிப்படையில் இவ்வாறு பொருள்களைக் கொள்வனவு செய்ய நிபந்தனைகள் விதிக்கப்பட முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நுகர்வோர் விவகார அதிகாரசபைக்கு முறைப்பாடு செய்ய முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

சதொச நிறுவனத்தில் சீனி மற்றும் நாடு அரிசி போர்ற பொருள்கனை கொள்வனவு செய்வதற்கு மேலும் சில பொருள்கள் கொள்வனவு செய்ய வேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.இந்த நிபந்தனை தொடர்பில் நீதி அமைச்சின் ஆலோசகர் சட்டத்தரணி யூ. ஆர்.டி சில்வா தனது நிலைப்பாட்டை இவ்வாறு வெளியிட்டுள்ளார்.

# கண்டி அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் ட்ரோன் பறக்கவிட்ட வெளிநாட்டவர் கைது!

ஸ்ரீ தலதா மாளிகைக்குச் சொந்தமான அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் ட்ரோன் கமராவை பறக்கவிட்ட சந்தேகத்தின் பேரில் பங்களாதேஷ் பிரஜை ஒருவர் தலதா மாளிகை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், தான் நடத்தும் யூடியூப் சனலுக்கு உரிய காட்சிகளைப் பெற்றேன் என பொலிஸாரிடம் தெரிவித்திருந்தார்.

ஸ்ரீ தலதா மாளிகைக்கு கோவிலுக்குச் சொந்தமான அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அனுமதியின்றி ட்ரோன் கமராக்களை பயன்படுத்துவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ட்ரோன் கமரா பொருத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி, கமரா மற்றும் சந்தேகநபரின் கடவுச்சீட்டு என்பவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கண்டி பிரதேசத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமில் ரத்நாயக்கவின் பணிப்புரையின் பேரில் சுற்றுலா பொலிஸ் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் இத்தமல்கொட தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரச ஊழியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் தீர்வு

எதிர்வரும் நாள்களில் மக்களுக்கு பல நிவாரணங்களை வழங்கும் நல்ல வரவு செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் முன்வைப்பார் என நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த வருட வரவு – செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளப் பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் கொவிட் தொற்று பரவியிருக்கும் நிலையில் இந்த முறை வரவு – செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கொவிட் காரணமாக வேலை இழந்தவர்கள் மற்றும் அன்றாட வாழ்வாதாரத்தை இழந்தவர்கள் ஏராளமானவர்கள் உள்ளனர். பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையிலான வரவு செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் முன்வைப்பார் என நான் நம்புகிறேன்.

இப்போது நாடு முழுவதும் விவசாயிகள் போராட்டம், ஆசிரியர்கள் போராட்டம், அரசியல் போராட்டங்கள் என்று பலர் நடத்தி வருகின்றனர். இது உண்மையில் மீண்டும் நாடு முழுவதும் கொவிட் அலைக்கு வழி வகுக்கிறது. அவர்களின் கோரிக்கைகளை வென்றெடுக்க போராட்டங்கள் நடத்த வேண்டும்.

சுகாதாரத்துறையால் கொவிட் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருக்கும் நேரத்தில் நாடு முழுவதும் போராட்டங்கள் நடத்துவதை ஏற்கமுடியாதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆண் பாலியல் ரீதியாக துன்புறுத்தல் பொலிஸ் அதிகாரி மீது குற்றச்சாட்டு

நபர் ஒருவரைச் சித்திரவதை செய்தமை தொடர்பில் தென்னிலங்கையின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தொடர்பில் இலங்கை ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கில் அரச பாதுகாப்புப் படையினர் தொடர்ச்சியாகத் துஷ்பிரயோக சம்பவங்களில் ஈடுபடுகின்றனர் என தொடர்ச்சியாகக் குற்றம் சாட்டப்படுகின்ற நிலையில், தென்னிலங்கையின் உயர் பொலிஸ் அதிகாரி மீது இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாண முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரன்மல் கொடித்துவக்குவிற்கு எதிராக நீலகண்டன் மற்றும் நீலகண்டன் சட்ட நிறுவனம் குறித்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளது. குறித்த பொலிஸ் அதிகாரியால் தமது வாடிக்கையாளரின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில், இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சப்ரகமுவ முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரன்மல் கொடித்துவக்கு உட்பட பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று, ஒருவரைப் பலவந்தமாக பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று சித்திரவதைக்கு உள்ளாக்கியுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது.

குறித்த நபரை நிர்வாணமாக்கி, மயக்கம் வரும்வரை தாக்கி, பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்திய பின்னர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துவதாக அச்சுறுத்தினர் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, கிரியெல்ல வீதியில் வாகனத்தில் பயணித்த ஒருவரை அதிகாரி தாக்கும் காணொலி சமூக ஊடகங்களில் பரவியதையடுத்து குறித்த பொலிஸ் அதிகாரி இலங்கை பொலிஸ் வைத்திய சேவைகள் மற்றும் நலன்புரி பிரிவின் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நீலகண்டன் மற்றும் நீலகண்டன் சட்ட நிறுவனம் ஜனாதிபதியிடம் செய்த ஏழு பக்க முறைப்பாட்டின் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர் ராஜகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த மிஷார ரணசிங்க எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வீதியில் சென்றவரை பொலிஸ் நிலையத்துக்குப் பலவந்தமாக அழைத்துச் சென்ற செயற்பாட்டில், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு உதவியாகச் செயற்பட்ட, கிரியெல்ல பொலிஸ் நிலையத்தின் ஆர்.ஏ.ஜே.பண்டார உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களும் இந்த சித்திரவதைக்கு உடந்தையாக இருந்தனர் எனவும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மிஷார ரணசிங்க பொலிஸ் நிலையத்தின் உத்தியோக பூர்வ காவலில் வைக்கப்படாமல், பொறுப்பதிகாரியின் அறைக்கு அருகில் உள்ள அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதோடு, இருளில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும், குறித்த நபரின் கைத்தொலைபேசி பறிமுதல் செய்யப்பட்டமை, நிர்வாணமாக்கப்பட்டு மண்டியிட வைக்கப்பட்டமை, உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளை நீலகண்டன் மற்றும் நீலகண்டன் சட்ட நிறுவனம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் முன்வைத்துள்ளது.

குறித்த முறைப்பாட்டில் சித்திரவதை, பயம் மற்றும் வெறுப்பு ஆகிய விடயங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

1) எங்கள் வாடிக்கையாளரின் கைத்தொலைபேசி பறிமுதல் செய்யப்பட்டது.

2)எங்கள் வாடிக்கையாளர் நிர்வாணமாக்கப்பட்டு மண்டியிட வைக்கப்பட்டார்.

3) ®P x{ – 1486 என்ற எண்ணைக் கொண்ட வாகனத்திலிருந்த இரண்டு அதிகாரிகள் முன்னிலையில், சீருடை கழட்டிய, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எங்கள் வாடிக்கையாளரைத் தாக்கியுள்ளார்.

4)எங்கள் வாடிக்கையாளரை வலுக்கட்டாயமாக முழந்தாலிடச் செய்து, அவரது கழுத்து, தலை, வயிறு மற்றும் பிறப்புறுப்பைத் தாக்கியுள்ளதோடு, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எங்கள் வாடிக்கையாளர் சுயநினைவை இழக்கும் வரை காலால் மிதித்துள்ளார்.

5) எமது வாடிக்கையாளர் நிர்வாணமாக இருக்கும் போது, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர், தன்னுடைய கைத்தொலைபேசியில் அவரை புகைப்படமெடுத்துள்ளதோடு, அவரது பிறப்புறுப்புகளை இழுத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

6)மதுபானம் மணம் வீசிய நிலையிலிருந்த, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எங்கள் வாடிக்கையாளரின் உடலை அழுத்திக் கொண்டு, தகாத வார்த்தையில் திட்டியதோடு, பாலியல் துஷ்பிரயோகம் செய்வேன் என அச்சுறுத்தியுள்ளார்.

7) சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரிடம் மன்னிப்புக் கோருமாறு, உதவி பொலிஸ்அத்தியட்சகர் அறிவுறுத்தியுள்ளதோடு, அங்கிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் எமது வாடிக்கையாளரைத் தகாத வார்த்தையில் திட்டியுள்ளார்.

8) சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர், தன்னிடம் இருக்கும் எங்கள் வாடிக்கையாளரின் நிர்வாண படங்களைப் பகிரங்கமாகப் பகிர்ந்து மற்றும் விளம்பரப்படுத்துவதன் மூலம் எங்கள் வாடிக்கையாளரை அவமானப்படுத்துவேன் என அச்சுறுத்தியுள்ளார்.

குற்றம் சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரி தமது வாடிக்கையாளருக்கு ஏற்பட்ட துரதிர்ஷ்டவசமான சூழ்நிலை வெளிவருவதைத் தடுக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார் எனவும், இது தனக்கும்தனதுகுடும்பஉறுப்பினர்களின் உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கும் என வாடிக்கையாளரான மிஷார ரணசிங்க அஞ்சுகிறார் எனவும் நீலகண்டன் மற்றும் நீலகண்டன் சட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது. போருக்குப் பின்னர் இலங்கை பாது காப்புப் படையினராலும் பொலிஸாராலும் தமிழ் ஆண்கள் தடுத்து வைக்கப்பட்டு துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டனர் என மனித உரிமைக் குழுக்கள் பல வருடங்களாக முன்வைத்த குற்றச்சாட்டுகளை முன்னைய அனைத்து அரசாங் கங்களும் மறுத்துள்ளன.

மனித உரிமைகள் சட்டத்தரணி ஜஸ்மின் சூக்கா தலைமையிலான உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச செயற்திட்டம் கடந்த செப்ரெம்பர் மாதம் இலங்கை பாதுகாப்புப் படையினரால் சித்திரவதைக்கு உள்ளாகி நாட்டை விட்டு வெளியேறிய 15 தமிழ் இளைஞர்களின் விவரங்கள் அடங்கிய அறிக்கையை வெளியிட்டது.

இலங்கை பாதுகாப்புப் படையினரால் நடத்தப்படும் தடுப்பு முகாம்களில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர் என கூறப்படும் 121 தமிழ் ஆண்கள் வழங்கிய தகவல்கள் மூன்று வருடங்களுக்கு முன்னர் அந்த அமைப்பால் வெளியிடப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அரசாங்கமோ அல்லது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவோ பொறுப்பான அதிகாரிகளின் பெயர்கள் உட்படக் கூறப்படும் பாலியல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்ய இதுவரை முன்வரவில்லை மற்றும் நாட்டின் முக்கிய தமிழ் அல்லாத ஊடகங்கள் இது தொடர்பில் அறிக்கையிட்டதையும் காணக்கிடைக்கவில்லை.

எவ்வாறாயினும், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரன்மல் கொடித்துவக்கு மற்றும் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களால் மிஷார ரணசிங்க சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

## பெண் கொலை;...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது, கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலத்தை கொண்டு சென்றதாகக் கருதப்படும் பாரவூர்தி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த 4ஆம் திகதி சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அண்மித்த குப்பை கிடங்கு ஒன்றில் கைவிடப்பட்டிருந்த பயணப்பையிலிருந்து கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டிருந்தது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட பெண், மாளிகாவத்தை தொடர்மாடிக் குடியிருப்பை வசிப்பிடமாகக் கொண்டிருந்த 2 பிள்ளைகளின் தாயான, 44 வயதுடைய மொஹமட் ஷாபி பாத்திமா மும்தாஸ் என்று அடையாளம் காணப்பட்டிருந்தார்.

ராகம போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் அவரது கணவரும் இரண்டு பிள்ளைகளும் சடலத்தை நேற்று முன்தினம் பார்வையிட்டதன் பின்னர் குறித்த பெண்ணின் சடலம் இனங்காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் பொலிஸார் பல கோணங்களில் விசாரணைகளை முன்னெடுத்தனர். இந்தப் பெண் கொலை செய்யப்பட்டுள்ளார் என்பதைப் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

---

## மஹிந்த - விமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விமல் வீரவன்ஸ, தனிவழிப் பயணத்துக்குத் தயாராகி வரும் சூழ்நிலையிலேயே, 'மொட்டு' கட்சியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவரை அவசரமாகச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில், அரச கூட்டுக்குள் ஏற்பட்டுள்ள மோதல் நிலை உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளன.

முரண்பாடுகளை நீக்கி, இணைந்து பயணிப்பது பற்றியும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

---

## யாழ்.அபிவிருத்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போகின்றமை உட்பட பல விடயங்களை அவர் சுட்டிக்காட்டினார் எனவும் தெரிய வந்தது.

இதன்போது மாவட்டத்தில் தற்போது இடம்பெறும் திட்டங்கள் தொடர்பாகவும் அவற்றில் உள்ள முன்னேற்ற நிலைமை தொடர்பிலும் மேலதிக செயலாளர் முரளிதரன் ஊடாக மாவட்டச் செயலாளரினால் நாடாளுமன்ற உறுப்பினருக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

இருந்தபோதும் பல விடயங்களில் மாவட்டச் செயலாளர் வழங்கிய கருத்தில் நாடாளுமன்ற உறுப்பினருக்கு உடன்பாடு இன்மையே காணப்பட்டுள்ளது. இதேநேரம் நாடாளுமன்ற உறுப்பினருடன் வலி. வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தனும் உடனிருந்தார்.

---

## சப்ரியின் இராஜி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்ப்பு தெரிவித்து அலி சப்ரி, நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மற்றும் நீதி அமைச்சர் பதவியில் இருந்து விலகும் கடிதத்தை ஜனாதிபதியிடம் நேற்று கையளித்திருந்தார்.

எனினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அலி சப்ரியின் பதவி விலகல் கடிதத்தை ஏற்கவில்லை என அரசின் தகவல்கள் கூறுகின்றன.

ஜனாதிபதியைச் சந்தித்த அமைச்சர் அலி சப்ரி, சட்டங்களை உருவாக்க நாட்டில் உரிய நடைமுறைகள் இருக்கும்போது, இப்படியான செயலணிக்குழுவின் மூலம் சட்டத்தை உருவாக்குவது தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நியமனம் குறித்து தனக்குத் தெளிவில்லை எனவும் நீதி அமைச்சர், ஜனாதிபதியிடம் கூறியுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள ஜனாதிபதி, இந்த விடயம் தொடர்பில் தான் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவே ஜனாதிபதி செயலணிக் குழுவை நியமித்ததாகவும், வேறு விடயங்களுக்காக அல்ல எனவும் கூறியுள்ளார்.

அத்துடன் சட்டங்களை உருவாக்கும்போது கட்டாயம் நீதி அமைச்சரின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதாகவும் ஜனாதிபதி, அலி சப்ரியிடம் தெரியப்படுத்தியுள்ளார். மேலும், அமைச்சர் அலி சப்ரியின் பணிகளை ஜனாதிபதி பாராட்டியுள்ளார்.

அத்துடன் ஞானசார தேரரின் நியமனம் சம்பந்தமாக சிலர் தவறாகப் புரிந்துகொண்டுள்ளதாகவும், அந்த எண்ணத்தை சரி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார் எனத் தகவல்கள் கூறுகின்றன.

---

## மக்களின் எழுச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வன ஜீவராசிகள் திணைக்களத்தால் வடமராட்சி கிழக்கில் 196 சதுர கிலோமீற்றரை தேசிய பூங்கா எனும் பெயரில் ஆக்கிரமித்துள்ள கேவில் - முள்ளியான் பகுதிக்கு நேற்று விஜயம் மேற்கொண்டு அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் நேரடியாகப் பார்த்தும் கேட்டும் அறிந்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கேவில் பிரதேசத்திலே காலா காலமாக மக்கள் பயிர் செய்து வந்த காணிகளை ஜீவராசி திணைக்களத்தினர் தமது நிலங்கள் என்று சொல்லி அந்த மக்களுடைய தொழிலைப் பாதிக்கின்ற வகையில் அந்தப் பிரதேசத்துக்குள்ளே உள் நுழையக் கூடாது என்று தடை விதித்திருக்கிறார்கள்.

சில நெல் வயல்கள் ஏற்கனவே விதைக்கப்பட்டிருக்கின்ற நிலையில் அதற்குள்ளேயேயும் எவரும் போகக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது.

விதைத்த காணியில் வேலியடைத்த வரைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றார்கள்.

இது சம்பந்தமாகவும் ஒரு சில விடயங்கள் சம்பந்தமாகவும் யாழ். மாவட்ட அரச அதிபருடனும் பேச்சு நடத்தியிருந்தோம்.

அரச அதிபர் இது சம்பந்தமாக ஏற்கனவே சில நடவடிக்கைகளைத் தாம் எடுத்திருப்பதாக அறிவித்திருந்தார்.

வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு இந்தப் பிரதேச விவசாயிகள் பல காலமாக இங்கே இந்த நிலங்களை விதைத்து இருக்கின்றார்கள் என்ற விடயத்தை அரச அதிபர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அதற்குப் பதில் எதுவும் இல்லை. 1976ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் கிரமமாக இந்தப் பிரதேசத்திலேயே பயிர் செய்து வந்திருக்கின்றார்கள்.

அதற்கான உரித்து அவர்களுக்கு இருக்கின்றது. ஆகவே, திடீரென்று வன ஜீவராசிகள் திணைக்களம் வந்து இந்தப் பிரதேசத்தில் மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பாதிக்கின்ற வகையில் செயற்படுவது ஏற்றுக்கொள்ள முடியாது.

ஒரு விடயம் இங்கே சுத்திப் பார்த்தாலே தெரியும். சுற்றுச்சூழலுக்கு எந்தவிதமான பாதிப்பும் கிடையாது. வனமாக இருக்கின்ற இடம் வனமாகவே இருக்கின்றது. ஆகவே, இந்தப் பிரதேச மக்களே இந்தச் சுற்றுச் சூழலை மிகவும் பொறுப்பாகப் பாதுகாத்து வந்திருக்கின்றார்கள்.

இங்கே வருகின்ற பறவைகள் இப்போதும் இங்கே வந்து போய்க் கொண்டு தான் இருக்கின்றன. ஆகவே, திடீரென்று நாங்கள்தான் இவற்றையெல்லாம் பாதுகாக்கின்றவர்கள் என்று வனஜீவராசிகள் திணைக்களத்தினர் வந்து இந்த மக்களுடைய வயிற்றிலே அடிப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

இது சம்பந்தமாக யாழ். மாவட்ட அரச அதிபருடன் பேசியது போல் மற்றைய உயர் அதிகாரிகளோடும் நாங்கள் பேசுவோம். அப்படி அவர்கள் அதற்கும் இணங்காவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும்.

அதற்கு முன்பதாக ஏற்கனவே விதைத்த வயல்களிலேயாவது தொடர்ந்து அந்தப் பயிர்ச்செய்கையைச் செய்வதிலே அவர்கள் எந்தவிதமான தடையும் விதிக்கக் கூடாது.

நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுக் கொண்டிருப்பது ஒரு பக்கத்திலே நடந்து கொண்டிருக்க, சாதாரணமாக இயற்கையாகவே பயிர் செய்து வந்த பிரதேசங்களிலும் பயிர் செய்யவிடாமல் தடுப்பது என்பது மிகவும் மோசமான ஒரு செயற்பாடு.

ஆகையினாலே இந்தப் பிரதேசத்திலே காலங்காலமாக பயிர் செய்து வந்தவர்கள் தங்கள் தொழிலைத் தொடர்ந்து செய்வதற்கு அரசு அனுமதிக்க வேண்டும்.

இந்தப் பகுதிக்குள்ளே ஒரு மதுபான விற்பனை நிலையமும் விருந்தினர் விடுதியும் இருக்கின்றதே? மக்களுக்கு மட்டும்தான் தடையா? - என்றும் கேள்வி எழுப்பினார்.

---

# இராஜாங்க அமைச்சர் விதுர யாழ்.பல்கலைக்கழகத்துக்கு

**(இ. கலையமுதன்)**



தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க யாழ்ப் பாணம் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் மேற்கொண்டு, பல்கலைக்கழக தொல்லியல் துறை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மற்றும் யாழ். பல்கலைக்கழக தொல்லியல் துறை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின்போது,

யாழ். பல்கலைக்கழகத்தின் தொல்லியல்துறை தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டதுடன் அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினார். அதன்பின்னர் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள தொல்லியல்துறையின் அருங்காட்சியகம் மற்றும் தொல்லியல் ஆய்வுகூடத்தையும் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பார்வையிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி. நிஷாந்தி ஜெயசிங்க, இலங்கை தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க, யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகர், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் கலாநிதி கே.அருந்தவராஜா, வரலாற்றுத் துறை ஓய்வுநிலை விரிவுரையாளர்களான கலாநிதி ப.புஷ்பரட்ணம், கலாநிதி கே.சிற்றம்பலம், கலாநிதி ச.சத்தியசீலன், கலாநிதி செ.கிருஷ்ணராஜா உட்பட விரிவுரையாளர்கள் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் கே.சிவராம், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் தொல்லியல்துறையினர், மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின் நிறைவில் இலங்கை தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்கவால் யாழ். பல்கலைக்கழக நூலகத்திற்கு நூல் ஒன்றும் அன்பளிப்பு செய்யப்பட்டது.

# ஓரணியில் தொழிற்சங்கங்கள்; இருளில் மூழ்குமா இலங்கை?



தேசிய வளங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு எதிராக, பல தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்து, எதிர்வரும் தினங்களில் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக எரிபொருள், துறைமுகம் மற்றும் மின்சார ஒன்றிணைந்த தொழிற்சங்க ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மின்சாரம், துறைமுகம், எரிபொருள், தேசிய நீர் வழங்கல் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கங்களின் பங்குப்பற்றுதலுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை மின்சார சபை ஒன்றிணைந்த தொழிற்சங்க ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் ரஞ்ஜன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

இதன்படி மின்சார ஊழியர்கள் ஈடுபடும் பணி புறக்கணிப்பில் ஈடுபடும் பட்சத்தில், நாட்டின் மின்சார விநியோகம் தடைப்படக்கூடும்.

ஏற்கனவே இது தொடர்பில் தகவல்கள் வெளியானமை நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்றத்தின் செங்கோல் சேதம்!

நாடாளுமன்றத்தின் செங்கோலில் சிறு சேதங்கள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிவதாக நாடாளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் கடந்த காலங்களில் ஏற்பட்ட அமைதியின்மைகளின்போது, இந்தச் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று தான் நம்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் சேதங்களைச் சரி செய்வதற்கான இயலுமை, உள்நாட்டில் கிடையாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

---

## சீனி மாத்திரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

3 கிலோ சீனி கொள்வனவு செய்ய முடியும் என்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

இதனால் பொதுமக்கள் பெரும் அதிருப்தியடைந்திருந்ததுடன், கடுமையான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன.

இந்தநிலையில், நேற்றிலிருந்து சதொச விற்பனை நிலையங்களில் சீனி மட்டும் கொள்வனவு செய்ய முடியும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.